Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3175)

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 25 திங்கட்கிழமை (11.11.2013) பக்கங்கள் 20 ஓசை – 042

## பிரதமர் மன்மோகனின் முடிவு இலங்கைக்கு தோல்வி அல்ல



### அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர் வரும் 15ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்காததை தாம் ஒரு பிரச்சினையாகப் பார்க்கவில்லை எனவும், அது எமக்கான தோல்வி அல்லவெனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொமன்வெல்த் மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலந்து கொள்ளமாட்டாரென எடுக்கப்பட்ட முடிவு இலங்கைக்கு ஏற்பட்ட பின்னடைவாகக் கருதமுடியுமா என பி.பி.சி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

உள்நாட்டு அரசியல் காரணங்களினாலேயே கொழும்பில் நடக்

19 பக்கம் பார்க்க...

## இரண்டு சிறுமிகளைக் காணவில்லை

வவுனியாவில் சிறுமிகள் இருவரைக் காணவில்லை என முறைப்பாடு செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை வவுனியா பொலிஸில் இவர்களின் பெற்

19 பக்கம் பார்க்க...

## பிரதமர் வருகை தராவிடினும் உறவில் பாதிப்பு ஏற்படாது

### என்கிறார் அமைச்சர் குர்ஷித்



(புதுடில்லி)

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டுக்குப் பிரதமர் மன்மோகன் சிங் செல்லாததைப் பெரிதாக எடுத்துக் கொள்ளத் தேவையில்லை என்று தெரிவித்துள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், இதனால் இலங்கையுடனான உறவில் மாற்றமோ, பாதிப்போ வராது என்றும் தெரிவித்துள்ளார்.

சகல பொதுநலவாய மாநாடுகளுக்கும் பிரதமர் போவதில்லை என்பதை மனதில் கொள்ள வேண்டும் என்றும் வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, பிரதமரின் முடிவை ஒரே கோணத்தில் பார்க்கத் தேவையில்லை. அனைத்து பொதுநலவாய நாடுகளின்

19 பக்கம் பார்க்க...

## வருத்தம் தெரிவித்து மன்மோகன் கடிதம்

(கொழும்பு)

கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்க முடியாததற்கு வருத்தம் தெரிவித்து, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு பிரதமர் மன்மோகன் சிங் கடிதம் அனுப்பியுள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதி தொடங்கும் கொமன்வெல்த் மாநாட்டில் தன்னால் பங்கேற்க முடியாதது தொடர்பாக, சிறு குறிப்பு மட்டுமே கொண்ட அந்தக் கடிதம், இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் மூலம் ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது. அதேவேளையில், தம்மால் பங்கேற்க முடியாத காரணத்தை அந்தக் கடிதத்தில் பிரதமர் குறிப்பிடவில்லை என்றும், அதில் உள்ள விடயங்கள் வெளியிடப்படவில்லை

19 பக்கம் பார்க்க...

# அமைச்சர் டக்ளஸ் பணிப்புரை; வலி.வடக்கில் மீள்குடியேற்றம்

## பதிவுகளை மேற்கொள்ள அறிவிப்பு

(தெல்லிப்பழை)

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைய வலிகாமம் வடக்கில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பிலான கலந்துரையாடலொன்று நேற்றைய தினம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்றது.**

வலிகாமம் வடக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள பலாலி கிழக்கு (ஜே/253), பலாலி வடக்கு (ஜே/254) பிரிவுகளிலும், வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவில் வளலாய் (ஜே/284) கிராம அலுவலர் பிரிவிலும் மக்களை மீள்குடியமர்த்துவது தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இக் கலந்துரையாடலின் போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு அமைவாக உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த சில பகுதிகளில் மீள்

19 பக்கம் பார்க்க...






08

குத்துவதில்



14

ஏற்பாடுகள்



18

நிமிர்ந்தது

## அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள போர்தவிர்ப்பு வலய ஆவணப்படம்

### பிரிட்டன் பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு

சனல்-4 வெளியிட்டுள்ள போர் தவிர்ப்பு வலய ஆவணப் படம் மிகவும் அதிர்ச்சியை ஏற்படுத்திய பதிவுகளைக் கொண்டதாக இருந்ததாக பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

சனல்-4 தொலைக்காட்சி இறுதியாக வெளியிட்ட காணொளியைப் பார்த்த பின்னர் பி.பி.சி.க்கு அளித்த செவ்வியிலேயே பிரதமர் கமரூன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், உள்நாட்டுப் போரில் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து

19 பக்கம் பார்க்க...

## இனவிகிதாசாரத்தை மாற்றியமைக்க முயற்சி

### சித்தார்த்தன் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

உயர் பாதுகாப்பு வலயங்களாகக் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளை குடாநாட்டின் இனவிகிதாசாரத்தினை மாற்றியமைக்கும் வகையில் திட்டமிட்ட செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்த அரசாங்கத்தால் தூபமிடப்படுகின்றது.

எனவே இந்தச் செயற்பாட்டை அரசாங்கம் உடனடியாக நிறுத்தவேண்டும் என புளொட் அமைப்பின் தலைவரும், வடமாகாண சபை உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் வலி. வடக்கில் காங்கேசன்துறை தொகுதி முழுவதும் உள்ளடங்கலாக இளவாலை வரையில், சுற்றியுள்ள நிலப்பரப்பினை இராணுவம் தமக்குள் வைத்துள்ளது.

அரசாங்கம் இன்றைய நிலையில் யுத்தம் முடிவடைந்துவிட்டது என திரும்பத் திரும்ப கூறிவருகின்றது. இவ்வாறானதோர் சூழ்நிலையில் பாதுகாப்பு வலயங்களுக்கு என ஏன் இவ்வளவு பெருவாரியான காணிகளை அரசாங்கம் கையகப்படுத்தியுள்ளது என்ற கேள்வியுள்ளது? இதற்குப் பின்னால் வேறு நோக்கங்களே இருப்பதாக நாம் பார்க்கின்றோம்.

நாம், மக்களின் வீடுகள் இடித்தழிக்கப்படுகின்றன என்றவுடன் குறித்த பகுதிகளுக்கு நேரில் சென்று எதற்காக வீடுகளை இடித்தழிக்கின்

19 பக்கம் பார்க்க...

## பெறுமதியான சந்தர்ப்பங்களை இளைஞர்கள் தவறவிடக்கூடாது

### இளைஞர் மாநாட்டில் ஜனாதிபதி

சிறுவர்களும் இளைஞர்களும் பெறுமதியான சந்தர்ப்பங்களைத் தவறவிடக்கூடாது என்றும் அவற்றை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொதுநலவாய இளைஞர் மாநாடு அம்பாந் தோட்டையிலுள்ள சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக் கோலாகலமாக ஆரம்பமாகியது. இந்த மாநாட்டின் ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பொதுநலவாய நாடுகளின் செயலாளர் கமலேஷ் சர்மா ஆகியோர் இம் மாநாட்டில் விஷேட அதிதிகளாகக் கலந்து கொண்டனர்

இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும இம்மாநாட்டில் வரவேற்புரை நிகழ்த்தினார். இம்மாநாட்டில் பெறப்படும் படிப்பினைகள் மற்றும் எடுக்கப்படும் தீர்மானங்கள் போன்றவற்றை இளைஞர் சமூகம் எதிர்காலத்தில் செயற்படுத்த

19 பக்கம் பார்க்க...

# சிறுவர் துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்த ஒன்றிணைந்து செயற்படுமாறு கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் சிறுவர் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்த சகலரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பெரும் யுத்தப்பாதிப்புகளை எதிர்கொண்டுள்ள நிலையில் தாய் தந்தையர்களை இழந்த நிலையில் உறவினர்களின் பராமரிப்பில் இருந்து வரும் சிறுவர்களும் பாதுகாவலர்களினதும் பராமரிப்பில் இருந்துவரும் சிறுவர்களே அதிகம் துஷ்பிரயோகங்களுக்குள்ளாக்கப்படுகின்றனர்.

அதாவது அண்மைய நாட்களில் இடம்பெற்ற சம்பவங்கள் இவ்வாறே அமைந்துள்ளன. பரந்தன் பகுதியில் சிறுமி ஒருவர் தீயினால் சுடப்பட்டமை, ஜெயந்திநகர் பகுதியில் இடம்பெற்ற சம்பவம், பரந்தன் சிவபுரம் பகுதியில் இடம்பெற்ற துஷ்பிரயோக சம்பவங்கள் இவ்வாறு உறவினர்கள் மற்றும் பாதுகாவலர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் சிறுவர் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்த சகலரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டுமென பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறு பெரும் யுத்தப் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ள நிலையில் தாய், தந்தையர்களை இழந்த நிலையில் உறவினர்களின் பராமரிப்பில் இருந்து வரும் சிறுவர்களை பாதுகாத்து உதவ வேண்டுமெனவும் தெரிவித்துள்ளனர். (கே)

## சந்நிதி வீதியில் விபத்து

(அச்சுவேலி)

அச்சுவேலி சந்நிதி வீதியில் கடந்த வெள்ளியன்று விபத்துச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மாடு ஒன்று வீதிக்கு குறுக்காக ஓடியதால் மோட்டார் சைக்கிளில் வந்தவர் அதனுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார். இவர் சிறுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (85)

# பொது இடங்களில் சுகவாழ்வு கிளினிக்

(வடமராட்சி)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையினரால் மக்கள் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் பொது இடங்களிலும் சுகவாழ்வு கிளினிக் நடத்தி வருவதாக வைதத்திய அதிகாரி ஆர்.வினோதன் தெரிவித்துள்ளார்.

மேற்படி வைத்தியசாலையில் வாரத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் பிற்பகல் 2.00 மணிக்கு சுகவாழ்வு கிளினிக் நடைபெற்று வரும் நிலையில் மக்களை ஒருங்கிணைக்கக்கூடிய பாடசாலைகள், மீனவர் சங்கங்கள், பிரதேச மற்றும் நகரசபைகள், வங்கிகள் போன்ற பொதுசன இடங்களில் சுகவாழ்வு கிளினிக் நடைபெற்று வருகின்றது.

தை மாதம் தொடக்கம் ஐப்பசி மாத நடப்பாண்டில் மேற்படி 27 பொதுசன இடங்களில் நடத்தப்பட்ட சுகவாழ்வு கிளினிக்கில் 1081 பேர் பயன்பெற்றதுடன் வைத்தியசாலையில் 313 பேர் பயன்பெற்றுள்ளனர்.

30 வயதுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொள்ளும் சுகவாழ்வு கிளினிக் நோய் இல்லாமல் சுகதேகியாக வாழ்கின்றோம் என இருப்பவர்கள், தம்வசமுள்ள சிறு சிறு நோய்களை காட்டிக்கொள்ளாமல் இருப்பவர்கள், வைத்திய சாலைக்கு பல்வேறு காரணங்களுக்கு வரமுடியாதுள்ளவர்கள் இதில் கலந்துகொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் ஏனைய பொதுசன இடங்களிலும் 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் சுகவாழ்வு கிளினிக்கில் கலந்துகொள்ள விரும்பினால் பருத்தித்துறை ஆதார வைததியசாலை திட்டமிடல் பிரிவு காரியாலயத்தில் தொடர்புகொண்டால் உடன் வந்து மருத்துவ சேவை செய்வோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சுகவாழ்வு கிளினிக்கில் கலந்து பயன்பெற்றவர்களுக்கு மூன்று மாதத்தின் பின் மேற்படி வைத்தியரினால் பார்வையிடப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (116)

# சூடுவெந்தான் கிராமத்தில் காட்டு யானைகள் அட்டகாசம்



(நெடுங்கேணி)

நெடுங்கேணி சூடுவெந்தான் கிராமத்தில் காட்டுயானைகளினால் 4 ஏக்கர் வாழைத்தோட்டம் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டுள்ளது.

சூடுவெந்தான் கிராமத்தில் கடந்த மூன்று நாட்களாக இரவு வேளைகளில் வாழை, தென்னை போன்ற பயிர்களை காட்டுயானைகள் தொடர்ச்சியாக அழித்துவருவதனால் விவசாயிகள் நித்திரை விழித்து யானைகளை கலைக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும், இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறையிட்டதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (40)

# கணனி மயப்படுத்தப்பட்ட முறையில் வைத்திய செயற்பாடுகள் விரைவில்

(வடமராட்சி)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கணனிமயப்படுத்தப்பட்ட முறையில் வைத்திய செயற்பாடுகள் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக வைதத்திய அதிகாரி ஆர்.வினோதன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தின் கீழ் இயங்கிவரும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மையத்தினால் சுமார் 10 மில்லியன் ரூபா செலவில் வடமாகாண வைத்திய சாலைகளில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கும் கிழக்கு மாகாணத்தில் மகாஓயா வைத்தியசாலைக்கும் முதன்முதலாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதனூடாக வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் ஒழுங்குமுறைகள், நோயாளி தற்போதுள்ள நோயையும் முன்னைய காலத்தில் இருந்து வந்த நோயையும் கண்டறிந்து அதற்கான பரிகாரத்தை வைத்தியர் வழங்குவதற்குமாக வைத்தியசாலை நிர்வாகக் கட்டமைப்புக்களையும் இலகுவாக செயற்படுத்தவும் தொடர்பாடல்களை விருத்தி செய்வதற்குமாக பல்வேறு வைத்தியசாலை செயற்பாடுகளுக்கும் ஏதுவாக அமையும்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இதனை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பகட்ட வேலையாக வைத்தியசாலையிலுள்ள வலையமைப்பு இணைப்புக்கள் நிறைவுபெற்றுள்ளதுடன் இவ்வருடம் கார்த்திகை மாத முதற்பகுதியில் கணனிகள் பொருத்தும் பணிகள் மேற்படி வைத்தியசாலையின் வெளிநோயாளர் பகுதியில் ஆரம்பித்து படிப்படியாக விடுதிகள், சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் வைத்திய சாலை நிர்வாகக் கட்டமைப்புக்கள் போன்ற வைத்தியசாலை செயற்பாடுகளுக்கு விஸ்தரிக்கப்படவுள்ளது.

மேலும் கணனிமயப்படுத்தப்படவுள்ள செயற்பாடுகளுக்காக தாதியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் வைத்தியர்களுக்கும் பயிற்சிகள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வழங்கப்பட்டு வருவதுடன் மேலதிக பயிறசிக்காக கம்பஹா மாவட்டத்திலுள்ள தொம்பே வைத்தியசாலையிலும் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். (116)

# வீதியைப் புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுப்பு

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச சபைக்கு உட்பட்ட வெள்லேனி பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் அமைந்துள்ள பிரதான வீதி குண்டும் குழியுமாக காணப்படுகிறது.

மழைகாலத்தில் மேற்படி ஆலயத்துக்கு செல்லமுடியாத நிலை ஏற்படுவதாகவும், எனவே இவ்வீதியினை போக்குவரத்துச் செய்வதற்கு ஏற்ற வீதியாக புனரமைத்துத் தருமாறு கரவெட்டி பிரதேச சபையை இப்பகுதி மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (18)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2477 திகதி 09-11-2013

ஆங்கில எழுத்து: S

வெற்றி எண்கள்: 13 18 62 68

போனஸ் இல: 66

ஜக்பொட் பரிசு ரூ. 11,370,150/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 221205 | 20/- | 4,424,100/- |
| 2 இல | 15821 | 100/- | 1,582,100/- |
| 3 இல | 317 | 1,000/- | 317,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8902 | 40/- | 356,080/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 670 | 1,000/- | 670,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 13 | 10,000/- | 130,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 11,370,150/- | - |
| 1 இல + போனஸ் இல | 10448 | 100/- | 1,044,800/- |
| 2 இல + போனஸ் இல | 499 | 500/- | 249,500/- |
| 3 இல + போனஸ் இல | 07 | 100,000/- | 700,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 446 | 200/- | 89,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 11 | 1,500/- | 16,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 258341 | | 11,579,280/- |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 11,973,800/-

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3176)


# நாகபூசணி அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு வணுவில்பதி ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

புதன்கிழமை விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகின்றன. வியாழனன்று அம்பாளுக்கு எண்ணெய்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

தொடர்ந்து வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு அம்பாளுக்கு மகா கும்பாபிஷேகம் இடம்பெறும். கும்பாபிஷேகம் பிரதம குரு பிரம்மஸ்ரீ உமாசுதக் குருக்கள் தலைமையில் இடம்பெறும்.

பிரம்மஸ்ரீ தானு மகாதேவக் குருக்கள் இவ்விழாவில் ஆசி வழங்குகின்றார். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (இ)


## சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

சுதுமலையில் ஒரு வீடும், ஒரு தொகுதி பாவித்த கூரைத்தகரங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- க.சீவறட்ணம் (சிவராசா), சுதுமலை தெற்கு, றியிஸ்ரார் சம்பந்தர் ஒழுங்கை. (காலை, மாலைகளில் தொடர்பு கொள்க) (R/324)

## 10 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



பாக்கியகுமார் அச்சுதன் தனது 10 ஆவது பிறந்த நாளை நேற்று கொண்டாடினார். யா/கம்பர்மலை வித்தியாலயத்தைச் சேர்ந்த இவர், புலமைப்பரிசில் பரீட்சையில் 169 புள்ளிகளுடன் சித்தியடைந்துள்ளார். இவரை பெற்றோரும் உறவினர்களும் பாராட்டி வாழ்த்துகின்றனர்.

(B/2581)

குடும்பத்தினர்

கொம்மந்தறை, வல்வெட்டித்துறை

# பொதுமக்களின் சொத்துக்களுக்கு தகுந்த வாடகைப் பணம் வழங்கினோம்

## இராணுவ அதிகாரி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழில் இராணுவத்தினரின் பயன்பாட்டிலிருந்த பொதுமக்களின் வீடுகளுக்கு இராணுவத்தினரால் வாடகை செலுத்தப்பட்டு வருவதுடன் இவ்வாண்டு ஜனவரி முதல் இன்று வரையும் வழங்கப்படாத வாடகைக் கட்டணங்கள் விரைவில் வழங்கப்படுமென 521 ஆவது படைப்பிரிவின் கேணல் டி.டிம். ரி.பி.திஸநாயக்க தெரிவித்தார்

பருத்தித்துறையில் 521 ஆவது படைப் பிரிவின் பயன்பாட்டிலிருந்த வீடுகள் மற்றும் காணிகளை கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர்தெரிவிக்கையில்

தமிழ் மக்களின் காணிகள் மற்றும் வீடுகள் கடந்த காலத்தில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக பருத்தித்துறை இராணுவத்தினர் தங்கள் வசம் எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

தற்போது யுத்தம் முடிவடைந்தமையால் அக்காணி வீடுகளை கையளிக்க வேண்டிய தருணம் ஏற்பட்ட நிலையிலேயே இந்தக காணிகள் கையளிக்கப்படுகின்றன.

நீண்டகால முரண்பாடுகளின் பின்னர் நிலவும் சமாதானமும் சுபீட்சமும் இராணுவத்தினரதும் பொதுமக்களினதும் உழைப்பினால் கிடைத்துள்ளது. அந்த சமாதானத்தினையும், ஒற்றுமையையும் நிலை நிறுத்த மிகுந்த ஆர்வத்துடன் நாங்கள் இருக் கின்றோம்.

இராணுவ நடவடிக்கைகளை இலகுபடுத்தவும் சமாதானத்தினை நிலைநாட்டவும் இராணுவத்தினரின் பயன்பாட்டிலிருந்த வீடுகள் மற்றும் காணிகளை கையளித்து வருவதாகவும் அவர்மேலும் தெரிவித்தார். (25,01)

## பெயர் மாற்றக் கோரிக்கை

புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி தற்போது ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு ஐந்து வகுப்புக்கள் வரை புத்தூர் இந்து ஆரம்ப பாடசாலை என்ற பெயரில் தனியான பிரிவாக இயங்கி வருகின்றது. இதனை புத்தூர் சோமாஸ்கந்தா இந்து ஆரம்பபாடசாலை என்றவாறாக பெயர் மாற்றம் செய யுமாறு பாடசாலை பழைய மாணவர்கள் பிரதேச மட்ட சமூக அமைப்புக்கள் மற்றும் நலன் விரும்பிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (90)

# பாதீனியப் பயிர்களால் விவசாய நிலங்கள் பாதிப்பு

வலிகாமம் பகுதி எங்கும் பாதீனியம் பரவலாக வளர்ந்து காணப்படுகின்றது. இதனால் விவசாய நிலங்களில் விவசாய நடவடிக்கைகள், விளைச்சல்கள் பாதிப்படைவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மருதனார்மடம் உரும்பிராய், புன்னாலைக் கட்டுவான, நிலாவரை, புத்தூர், நவக்கிரி, குப்பிளான் ,ஏழாலை, மல்வம், தெல்லிப்பளை, அளவெட்டி, மல்லாகம் பகுதிகளில் வீதிகள், விவசாய நிலங்கள் மக்கள் பாவனை அற்ற காணிகளில் பாதீனியச் செடி பரவலாக அதிகளவில் வளர்ந்து காணப்படுகிறது.

குறிப்பாக தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைகளில் பிரதான நுழைவாயில் பகுதியில் பாதீனியச் செடி அடர்ந்து காணப்படுவது குறித்து மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே குறித்த பிரதேசங்களில் இருந்து பாதீனியச் செடியை அழிப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (66)

# சர்வதேச நல்லொழுக்க தினம் மாணவர்களுக்கான போட்டி முடிவுகள்

*(தொடர்ச்சி..)*

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தால் சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு வடமராட்சி வலய பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

சி.வைஸ்ணவி (யா/மெதடிஸ்த பெண்கள உயர்தர பாடசாலை), ஜெ.ஜெயப்பிரின்சியா (யா/சென்.தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலை), வி.திருமகள் (யா.பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்)

கட்டுரை

ஆ.அனுசியா (யா/வல்லை சிவகுரு வித்தியாலயம்), வி.அன்ரனிசாள்ஸ் (யா/பொலிகண்டி எச்.ரி.எம்.எஸ்), த.தசானா (யா.தும்பளை சிவபிரகாச வித்தியாலயம்)

கவிதை

ச.அஜந்தினி (யா/வல்லை மகளிர் மகாவித்தியாலயம்), ம.ஜினித்தா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), இ.கிருத்திகா (யா.புற்றளை மகாவித்தியாலயம்)

மத்தியபிரிவு

பேச்சு

சி.சங்கவி (யா/வட இந்து மகளிர் கல்லூரி), சி.சிந்துஜா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), உ.சிம்ரா (யா.பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்)

கட்டுரை


ர.விதுசன் (யா/ஹாட்லிக் கல்லூரி), ம.கிரிசாந்தி (யா/வல்லை சிவகுரு வித்தியாலயம்), க.ரக்சனா (யா/சென்தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை), தெ.சர்மிளா (யா/பொலிகண்டி எச்.ரி.எம்.எஸ்)

கவிதை

ஜெ.விவேகா (யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்), ந.நிவியா (யா/சென தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலை, பா.பிரவீனா (யா/வடஇந்து மகளிர் கல்லூரி)

(109 ) (தொடரும்)

## வேகத்தைக் குறையுங்கள் உயிர்களைக் காப்பாற்றுங்கள்





**தலைக்கவசம் அணியாது பயணம் செய்வதை தவிருங்கள்.**

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்பவர்கள் கட்டாயம் தலைக்கவசம் அணிந்து செல்லுங்கள்..

(நா.சிவபாலன்)

# சாடிகளும் அதுக்குத் தோதான மூடிகளும்...




அரசியலில் ஆயிரம் குத்துக் கரணங்கள் நடப்பதுண்டு. ஆனால், தமிழ்த் தலைமைகளின் குத்துக் கரணங்களுக்கு எவையும் ஈடாகாது. பொய்யுரைக்கவும் புரட்டுச் செய்யவும் தயங்க மாட்டார்கள்.

அது கருணாநிதியாக இருந்தாலென்ன, கஜேந்திரனாக இருந்தாலென்ன, ஜெயலலிதாவாக இருந்தாலென்ன, சம்பந்தனாக இருந்தாலென்ன?

சனங்களை மடையர்களாக்குவதில் இவர்கள் விண்ணர்கள், அல்லது விண்ணிகள்.

பாருங்கள், மன்மோகன் சிங் கொழும்புக்குப் போகக் கூடாது என்று கருணாநிதி எச்சரிக்கை விடுத்திருக்கிறார். ஆனால், இந்தியாவிலிருந்து பருப்பும் புடவையும் சினிமாப்படங்களும் வெங்காயமும் போகக் கூடாது என்று அவர் சொல்லவில்லை.

அதை அவர் சொல்ல மாட்டார். 'சிங்கன்' சாதாரண ஆளில்லை.

இதற்கு முன் தமிழகத்திலிருந்து அல்லது இந்தியாவிலிருந்து சினிமா நடிகர்கள், படைப்பாளிகள், கலைஞர்கள் எவரும் இலங்கைக்குப் போகக் கூடாது என்றார். (வர்த்தகர்கள் தாரளமாகப் போய் வரலாம்).

இப்படி எச்சரிக்கை விடுக்கிற கருணாநிதி தமிழகத்தில் தயாரிக்கப்படும் சினிமாப் படங்களை இலங்கைக்கு அனுப்பக் கூடாது என்று சொல்லுவதில்லை.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற் பகுதிக்குச் செல்ல வேண்டாம் என்று கூறுவதில்லை.

தமிழகத்தில் தயாரிக்கப்படும் அல்லது இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் எந்தப் பொருளையும் இலங்கைக்கு அனுப்ப வேண்டாம் என்று தடுப்பதில்லை.

இதெல்லாம் பொருளாதார நலன் சம்மந்தப்பட்டவை.

ஆகவே அவர் இவற்றைப் பற்றி வாயே திறக்கமாட்டார்.

அவர் மட்டுமல்ல, தமிழகத்திலிருக்கிற எந்த அரசியல்வாதிகளும் இவற்றைப் பற்றி மூச்சே விட மாட்டார்கள்.

மறுவளமாக, தங்களுக்கு சேதாரமில்லாமல், அரசியல் ஆதாயம் தருகிற மன்மோகன் சிங் இலங்கை செல்வது, நடிகைகள் யாராவது கொழும்பு வர முயற்சிப்பது போன்றவற்றை கடுமையாக எதிர்ப்பார்கள்.

இதற்கெல்லாம் தோதாக பராசக்தி பாணியில் அல்லது மனோகரா பாணியில் நாலு வசனங்களைச் சொல்லி விடுவார்கள்.

இதை ஊதிப் பெருப்பித்து, அலங்காரம் பண்ணுவதற்குத் தோதாக நாலு மீடியாக்கள் உள்ளன.

பிறகென்ன, தமிழ்ப் பற்றும் இனப்பற்றும் எரிபற்றாகி விடும்.

ஆனால், உண்மையில் இது எவ்வளவு நாடகத்தனமானது?

இவர்கள் அடிக்கிற கூத்துகளை நாம் இங்கே சொல்லித்தான் தெரிய வேணும் என்றில்லை; மிகப் பகிரங்கமானது.

ஈழத்தமிழர்களுக்காக கண்ணீர் வடிக்கிற ஜெயலலிதா, சில நாட்களுக்கு முன்னர் 'முள்ளிவாய்க்கால் முற்றம்' என்ற அமையத்துக்கு ஊர்வலமாகச் சென்றவர்களைக் கைது செய்ய பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

தமிழகத்தில் உள்ள ஈழ அகதிகளுக்கு பகிரங்கமாக யாராவது உதவ வந்தால் அது விசாரணைக்குரிய குற்றம்.

ஈழத் தமிழ் மக்கள் பரிதவிக்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டே தமிழக மீனவர்களின் அத்து மீறலைக் காணாதவர் போல இருக்கிறார் அம்மா.

இதெல்லாம் என்ன நடிப்பம்மா!

சிங்கள ஆதிக்கத்தைப் பற்றிப் பேசும் தமிழகத்தினர் இலங்கைத் தமிழரின் மீதான இந்திய ஆக்கிரமிப்பையும் தமிழகத்தின் ஊடுருவலையும் பண்பாட்டு ஆதிக்கத்தையும் பற்றிப் பேசுவதில்லை.

அவர்கள்தான் அப்படியென்றால், இங்கே இருக்கிற தமிழ்த் தலைகளும் இதைப்பற்றியெல்லாம் கதைப்பதில்லை.

சாடிக்கு ஏற்ற மூடி என்பதைப் போல சிலரும் கழுவிற தண்ணியில நழுவுகிற மீனைப் போலச் சிலரும் தப்பிக் கொள்கிறார்கள்.

நாட்டிலும் சரி, வீட்டிலும் சரி ஒழுக்கம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, பொறுமை இருத்தல் வேண்டும். - நெப்போலியன்.

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## யார் யாரையோ நண்பர் என்று...

எதிர்வரும் 15ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை இலங்கையில் நடைபெறவுள்ள 22வது பொதுநலவாய உச்சிமாநாட்டில் இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்கமாட்டாரென இந்திய ஊடகங்கள் தெரிவித்திருக்கின்றன.

இது தமிழ்நாட்டின் அரசியல் கட்சிகளுக்கு குறிப்பாக மன்மோகன் சிங் விஜயத்தை எதிர்த்த கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், ஜெயலலிதா தலைமையிலான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் கிடைத்த வெற்றியாக கருதப்படலாம்.

அடுத்த வருடத்தில் அங்கு நடக்கப்போகும் தேர்தலில் இரண்டு கட்சிகளுமே தங்கள் தங்கள் சாதனையாக இதனைப் பிரசாரத்தில் பயன்படுத்தவும் கூடும். தமழக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ப.சிதம்பரம், ஜெயந்தி நடராஜன் போன்றவர்களும் கூட இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயத்தைத் தடுப்பதற்காகத் தாங்களும் பேசியவற்றைத் தங்களது தமிழுணர்வுத் தகைமையாகத் தேர்தலில் காட்டிக்கொள்ளலாம்.

இவர்களெல்லோரும், இலங்கை அரசுக்கு ஏதாவது எதிர்ப்பைக் காட்டிக் கொண்டிருப்பது மட்டுமே தங்களது தமிழுணர்வைக் காட்டிக்கொள்ளப் போதுமானது என்ற அளவில் தமிழ்நாட்டு மக்களையும் இலங்கைத் தமிழர்களையும் ஏமாற்றித் தங்களது அரசியலைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

இந்தியப் பிரதமர் தனது இலங்கை மாநாட்டு விஜயத்தை ரத்துச் செய்ததன் மூலம் எமது மக்களுக்குக் கிடைக்கப்போகும் நன்மை என்ன? இதை யாரும் சொல்வதுமில்லை, எண்ணுவதுமில்லை.

யோசித்துப் பார்த்தால், இந்தியாவின் மாநாட்டுப் புறக்கணிப்பால் நமக்கு நன்மையை விட தீமையான விளைவுகளே அதிகம் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். இலங்கை அரசைப் பொறுத்தவரை, இலங்கையில் நடக்கும் மிக முக்கியமான ஒரு மகாநாட்டை, அயலில் உள்ள பெரியண்ணன் புறக்கணித்து வராமல் விடுவதை கௌரவப் பிரச்சினையாகவே பார்க்கும்.

இந்தியா தனது உள்நாட்டு எதிர்ப்புகளையும் மீறி இலங்கையின் கௌரவத்தை மதித்து நடந்துகொண்டிருக்குமானால், பதிலுக்கு இந்தியா சொல்வதை மதித்து நடக்க வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு பெருமளவில் ஏற்பட்டிருக்கும்.

அயலிலுள்ள சிறிய நாட்டின் கௌரவத்திற்காக தனது உள்ளூர் எதிர்ப்பை பொருட்படுத்தாமல் வருகை தந்தவர் என்ற வகையில், தமிழ்ப்பிரச்சினை தொடர்பாக அவர் வற்புறுத்துவதைத் தட்ட முடியாத-அந்த பதில் மரியாதையை தரவேண்டிய-நிலைமை இலங்கையரசிற்கு ஏற்பட்டிருக்கும்.

இன்று இலங்கையில் உள்ள அரசியல் யதார்த்தத்தில், மாகாண சபையின் அதிகாரங்களை வலுப்படுத்தி அதிகாரங்களைக் கூட்டிக் கொள்வதற்கு இந்தியாவின் அழுத்தமே மிகமுக்கிய தூண்டியாக அமையக் கூடியது. அந்தவகையில், மன்மோகன் வருகை தந்திருந்தால், மகிந்த அரசை வற்புறுத்தும் தார்மீக பலத்தை அவர் பெற்றிருப்பார்.

இப்போது, இந்த மன்மோகன் பயணத்தை ரத்துசெய்யக் கோரி அதில் தமிழகத் தலைவர்கள் வெற்றிபெற்றிருப்பதன் விளைவாக, இலங்கையரசின் தார்மீகத்தையே அதிகப்படுத்தியிருக்கிறார்கள். அதாவது, இலங்கையுடனான ராஜரீக உறவில் தப்புச் செய்த குற்றவுணர்வுடனேயே இந்தியா நடந்துகொள்ள வேண்டியிருக்கும். தமிழ்மக்களுக்கான அதிகாரங்களுக்காக இலங்கை அரசை நெருக்கமுடியாத நிலை!

தமிழகத் தலைவர்களின் இந்த பகிஸ்கரிப்பு நடவடிக்கை இலங்கைத் தமிழர்களாகிய நமக்கு நன்மையல்ல தீமையே என்பதை அவர்கள் கருதவுமில்லை-உணரவுமில்லை. எப்போதும் போல அவர்கள் இதிலும், தங்களது தேர்தல் தேவையையும், தமிழுணர்வுப் படங்காட்டலையுமே பிரதானமாகக் கருத்தில் கொண்டிருக்கிறார்கள்.

- ஆசிரியர்.

# அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தில் கூட்டமைப்பு எம்.பி.க்கள் பேச்சு

(கொழும்பு)

அமெரிக்காவுக்குச் சென்றிருந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளுடன் பேசிய விடயங்கள் என்ன என்பது குறித்து தென்னிலங்கை ஊடகங்கள் சில பரபரப்புத்தக வல்களை வெளியிட்டுள்ளன.

அரசாங்கம் கொமனவெல்த் மாநாட்டுக்கான ஏற்பாடு களில் ஈடுபட்டிருக்கும் நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளைச் சந்தித்து விட்டு, திரும்பியுள்ளதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பில் மனித உரிமைகள் விவகாரமே முக்கியத்துவப்படுத்தப்பட்டிருந்தது.

அண்மையில் புலம்பெயர் தமிழர்களின் அழைப்பின் பேரில் அமெரிக்கா சென்றிருந்தபோதே, அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளை இவர்கள் சந்தித்துள்ளனர்.

இதன்போது, வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழுவினர் அமெரிக்க அதிகாரிகளுக்கு விளக்கிக் கூறியுள்ளனர்.

ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முன்னேற்றம் அல்லது குறைபாடு குறித்தும் இதில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், நவநீதம் பிள்ளை சமர்ப்பித்த வாய்மொழி அறிக்கை குறித்தும் கலந்துரையாடினோம்.

எந்த முன்னேற்றமும் இல்லாவிட்டால், அனைத்துலக விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கப் போவதாக அவர் கூறியதை சுட்டிக்காட்டினோம்.

அதேவேளை, கொமன்வெல்த மாநாட்டுக்காக வரும் சில நாடுகளின் தலைவர்கள் வடக்கே வரும்போது, அவர்களைச் சந்தித்து இந்த விவகாரத்தை எழுப்பவுள்ளோம்.

காணிப் பிரச்சினை, இராணுவமயமாக்கல், காணாமற்போதல்கள், குறித்தும் அவர்களுடன் கலந்துரையாடத் திட்டமிட்டுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# முழு உலகத்தையும் சீர்திருத்த எம்மால் மட்டும் முடியாது

## —. தம்மாலோக்க தேரர் தெரிவிப்பு —

(கொழும்பு)

புத்த பகவான், இயேசு கிறிஸ்து, முகமது நபி போன்றவர்களினால் முழு உலகத்தை திருத்த முடியாமல் போனது, அதுபோல் சகலருக்கும் முழுவதையும் திருத்த முடியாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக்க தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கசினோ பற்றி சிந்தித்து நாம் குழப்பமடையத் தேவையில்லை. முழு உலகத்தையும் எம்மால் திருத்த முடியாது. முழு உலகத்தையும் பாவத்தில் இருந்து மீட்க, புத்தர், இயேசு, முகமது போன்றவர்களால் முடியாது போனது. இதனை எந்த வகையிலும் செய்ய முடியாது. அப்படியானால் நாம் ஏன் இப்படியானவற்றை நினைத்து கவலைப்பட வேண்டும் என்றார்.

பௌத்த மத துறவியான உடுவே தம்மாலோக்க தேரர் சூதாட்டத்திற்கு ஆதரவான கருத்து வெளியிட்டுள்ளமை குறித்து பல்வேறு தரப்பினர் தமது எதிர்ப்புகளை வெளியிட்டு வருகின்றனர்.

தம்மாலோக்க தேரர் எவருடைய ஒப்பந்தத்தையோ நிறைவேற்றும் நோக்கில் இவ்வாறு பேசி வருவதாக பௌத்த அமைப்புகளின் தலைவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தம்மாலோக்க தேரர், சூதாட்டத்தை ஆதரிப்பதற்குப் பதிலாக கொழும்பு மாநகர சபையில் மலசல கூடம் ஒன்றைக் குத்தகைக்கு எடுத்து அதனை நிர்வகிக்கலாம் என தம்பர அமில தேரர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

# புதிய சேமிப்புத்திட்டம் யூனியன் வங்கி அறிமுகம்

(யாழ்.நிருபர்)

யூனியன் வங்கி நத்தார் செலவுகளுக்கு கை நிறைய வட்டி வழங்கும் ON THE SPOT திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

வாடிக்கையாளர்கள் இத்திட்டத்தில் பணத்தை வைப்புச் செய்யும்போது வைப்புக்களுக்கு 3 மாதங்களுக்கான வட்டி ஒரே தடவையில் வழங்கப்படுகிறது.

வைப்புத் தொகையை முதிர்ச்சி அடைவதற்கு முன் பெற்றாலும் மேலதிக அறவீடு இல்லை எனவும், போனஸ் சகிதம் சேமிக்கும் அதேவேளையில் செலவுகளுக்காக கை நிறையப் பணம் கிடைபபதாகவும் யூனியன் வங்கி அறிவித்துள்ளது. (10)

# இன்று இரண்டாம் அமர்வு

(யாழ்.நிருபர்)

வடக்கு மாகாணச்சபையின் இரண்டாவது அமர்வு இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு சபை முதல்வர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் கைதடியில் அமைந்துள்ள வடமாகாண சபைக் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சம்பிரதாய பூர்வமாக உரையாற்றுவதற்கு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறிக்கு சபை முதல்வர் அழைப்பு விடுத்ததைத் தொடர்ந்து ஆளுநர் இக்கூட்டத்தில் உரையாற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த அமர்வில் சபையின் உறுப்பினர்களில் 17 பேர் உரையாற்றியுள்ள நிலையில் ஏனைய அங்கத்தவர்கள் இரண்டாம் அமர்வில் தமது கன்னி உரைகளை ஆற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

# மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இனி மாணவிகளுக்கும் அனுமதி

## தகவல் தொழில்நுட்பத்திற்கு மட்டும்

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் உயர்தரப் பிரிவிற்கு மாணவியரை(பெண்களை) இணைப்பதற்கு மத்திய கல்வி அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தேசியப் பாடசாலையாக 2010 இல் தரம் உயர்த்தப்பட்டதுடன் தொழில்நுட்ப பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு 1 AB சுப்ரா பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ள வகையில் மாணவியர்களையும் இணைத்து கல்வி செயற்பாடுகளினை மேற்கொள்ளும் போது மேலும் சிறப்பான அடைவு மட்டத்தினை வெளிப்படுத்த முடியும் எனும் அடிப்படையில் கல்வி அமைச்சு மேற்படி அனுமதியினை வழங்கியுள்ளது.

இதனடிப்படையில் தொழில்நுட்ப பிரிவில் கல்வியினை பயில விரும்புகின்ற மாணவியர்கள் வலயக்கல்விப் பணிப்பாளரூடாகவோ அல்லது நேரடியாக பாடசாலை ஊடாகவோ தொடர்பு கொண்டு அனுமதியினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ் அனுமதிகள் பெற்றுக் கொள்வதற்கான இறுதித்தினம் 06.12.2013 ஆகும் மேலும் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் அனுமதிகள் வழங்கப்படவுள்ளமையினால் விரைவாக அனுமதிகளினைப் பெற்றுக்கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களிற்கான கல்விச்செயற்பாடுகள் ஜனவரி மாதத்தில் இருந்து முழுமையாக ஆரம்பிக்கப்படும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும் மேற்படி தொழில்நுட்ப பிரிவிற்காக 6 கோடி ரூபாவினை உலக வங்கி வழங்கியுள்ளதுடன், இதில் 3 கோடி ரூபா கட்டடங்களிற்கும், 3 கோடி ரூபா பொறியியல் கல்விக்கான உபகரணங்களிற்கும் பயன்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மரநடுகைத் திட்டம்

(கொழும்பு)

தேசத்திற்கு நிழல் என்னும் செயற்றிட்டத்திற்கமைய எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் மர நடுகைத் திட்டங்களை ஆரம்பித்து ஒரு வார காலததிற்கு அதனைச் செயற்படுத்திக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் நாட்டின் தாவர வளத்தினை பெருக்கிக் கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பயன்பாட்டினை உணர்ந்து மேலும மர நடுகைத் திட்டங்களை ஊக்குவிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. (03)

# பத்ரி சேஷாத்ரி கேள்விகளும் வெ. ராமசாமி பதில்களும்

**பத்ரி:** இலங்கைப் பிரச்சினையை, அதனை எதிர்காலத்தில் தீர்ப்பதை நோக்கிய திசையில் உன் எண்ணங்கள் என்ன?

**வெ.ரா.:** அதனை இலங்கைக் காரர்கள் (அங்குள்ள தமிழர்கள் + சிங்களர்கள் + இன்னபிற மற்றவர்கள்) பார்த்துக்கொள்வார்கள். நாம் நம்முடைய வேலைகளைச் செய்துகொண்டிருந்தால் போதும். அவர்களை உபத்திரவப்படுத்தாமல் இருந்தால் போதும். இதுவரை நாம் செய்து கிழித்தது போதும். நம் பாத்தியதைப்பட்ட, நம்முடைய கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய விஷயங்களிலேயே நாம் ஏகோபித்துச் சொதப்புவதுதான் நம்முடைய பூரம்பரிய வழக்கம். எதற்கு அங்கும் குட்டையைக் குழப்ப வேண்டும்?

ராஜீவ்-ஜெயவர்தன உடன்படிக்கையைவிடச் சிறந்ததான தீர்வு இருக்க முடியாது - இப்போதும் [illegible]. அதனைக் கயமையுடன் எதிர்த்துக் குளிர்காயமுற்பட்டதால் வந்த கோரஅழிவுகளைப் பாருங்கள். என்ன சோகம் இது!

இந்தியா பஞ்சாப் மாநிலம் சார்ந்த காலிஸ்தான் பிரச்சினையை எப்படி எதிர்கொண்டு வெற்றி கண்டதோ அதேபோல இலங்கை வெற்றிபெற அதற்கு நாம் உதவவேண்டும். நாம் பஞ்சாப் மாநிலத்தில் எப்படி வன்முறையை பூண்டோடு ஒழித்து, செல்வத்தைப் பெருக்கினோமோ - அதே தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி அங்கே சுபிட்சத்தை நோக்கிய பாதைக்கு வழி வகுக்க வேண்டும். இதற்கு மிக முக்கியமாக - தமிழ்நாட்டு அரைகுறைக் கட்சிகளின் உளறல்களைக், கயமையைக் கண்டுகொள்ளாமல் இருக்க, நமட்டுச் சிரிப்புடன் இடங்கையால் புறந்தள்ள மத்திய அரசு முனைய வேண்டும்.

**பத்ரி:** தமிழகத்தின் பொதுமக்கள்/ சமூகம் என்ன செய்யவேண்டும்? போராடவேண்டுமா அல்லது ஒன்றுமே செய்யவேண்டாமா?


**வெ.ரா.:** நம்முடைய பொதுமக்கள் சமூகம், வழக்கமாக என்ன செய்வார்களோ, அதனைச் செய்துகொண்டிருந்தால் (சும்மா இருப்பது) அதுவே போதுமானது.

ஆனால் எப்படியாவது ஏதாவது செய்தேயாகவேண்டும் என்று அவர்களுக்குத் தோன்றினால், அவர்கள் நான்கு விஷயங்கள் செய்யலாம்.

1: இலங்கையையும் அதன் பிரச்சினைகளையும் புரிந்து கொள்ளவேண்டுமென்றால் அவர்கள் முதலில் அதனைப் பற்றி ஆழ்ந்து படிக்க வேண்டும்.

2: கொஞ்சம் பணம் கையில் இருந்தால் ஒரு சுற்றுலாப் பயணியாக இலங்கை சென்று அங்கு என்னதான் நடக்கிறது என்பதை நேரில் கண்டுவரலாம். அங்கு மிக மோசமாக ஏதாவது நடக்கிறது என்று பிரத்தியட்சமாகத் தெரிந்தால் அதற்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். என்னைப் பொறுத்தவரை, இப்படிப் போய்வரும் எவரும், நம் தமிழகக் குப்பைத் தலைவர்களைத்தான் தூக்கில்போட ஆதரவு கொடுப்பார்களே தவிர, ராஜபக்'வை அல்ல. (அங்கு அடிக்கடி சென்றுவரும் எனக்குத் தெரிந்த ஒரு பொறியியலாளர் சொல்வதைக் கேட்டால் என் தலை சுற்றுகிறது. தமிழகத்தில் பரப்பபப்படும் இலங்கை தொடர்பான அண்டப் புளுகுகளுக்கு, கயமை வதந்திகளுக்கு ஒரு அளவே இல்லை என்றுதான் தோன்றுகிறது.)

**அங்கு அடிக்கடி சென்றுவரும் எனக்குத் தெரிந்த ஒரு பொறியியலாளர் சொல்வதைக் கேட்டால் என் தலைசுற்றுகிறது. தமிழகத்தில் பரப்பப்படும் இலங்கை தொடர்பான அண்டப் புளுகுகளுக்கு, கயமை வதந்திகளுக்கு ஒரு அளவே இல்லை என்றுதான் தோன்றுகிறது.**




3: நம் அற்ப, பொய்ப்பெருந்தீனி ஊடகங்களின் வதந்திக் கிளுகிளுப்புமுதல் வாதங்களுக்கு எதிராகப் போராடலாம்.

4: ஒரு பத்து இலங்கையர்களுடன் நட்பு கொள்ள முயலலாம் - அதில் பாதிப் பேராவது சிங்களவர்களாக இருக்கவேண்டும். அப்போதுதாம் நமக்குத் தெரியும், அவர்களும் நம்மைப்போல சாதாரண மனிதர்கள்தான் என்று. (நம்மில் "மெத்தப் படித்த" பெருந்தகைகள்கூட சிங்களவன் என்றால் அயோக்கியன், தமிழர்களைத் துன்புறுத்துபவன் என்று ஒரு ஆதாரம்கூட இல்லாமல் முட்டாள்தனமாக நினைத்துக்கொண்டிருப்பதை நான் அறிவேன்!)

**பத்ரி:** தமிழ்நாட்டு மாணவர்கள் இலங்கைப் பிரச்சினையில் என்னதாம் செய்யலாம்? அவர்கள் கோபமடையவே கூடாதா?

அவர்கள் நன்றாகப் படித்து, நல்ல மதிப்பெண் பெற்று ஒரு வேலையைத் தேடிக்கொண்டால் போதுமா? வேறொன்றுமில்லையா?

**வெ.ரா.:** இளைஞர்கள் ∴ மாணவர்கள் கோபப்படலாம். படவேண்டும்தான். இந்த வயதில் ஒரு தார்மீகக் கோபம் இல்லாதவர்களுக்கு, எப்போதுமே அது வராதுதான். அவர்களுக்கு ஒரு வடிகால் தேவைதான்.

ஆக, அப்படிக் கோபப்படுபவர்களை, உடனடியாக ஏதாவது பணி செய்ய வேண்டும் என விரும்புபவர்களை - இலங்கை சென்று அங்கு தேவைப்படும் தமிழ்ப் பகுதிகளில் கீழ்க்கண்ட உடலுழைப்பு சார்ந்த பணிகள் செய்யச் சொல்லலாம். குறைந்தபட்சம் 6 மாதங்கள் ஒரு பணியைச் செய்யவேண்டும் - நடுவில் விட்டுவிட்டு ஓடி வரக்கூடாது. இது ஒரு கேளிக்கை உண்ணாவிரதமல்ல என அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். (இதற்கு இந்திய, இலங்கை அரசுகளிடம் விண்ணப்பித்து முறையாக அனுமதி பெறவேண்டும். மேலும் இந்நடவடிக்கைகளால், சிங்களப் பொதுஜனங்களுக்கும் உதவி விளைவது போலத்தான் இருக்கவேண்டும்.)

அ: இடிந்த கட்டடங்கள், உடைந்த பாலங்கள், சிதைந்த சாலைகள் போன்றவற்றை பழுதுபார்த்தல் செய்யலாம்.

ஆ: கண்ணி வெடிகளை அகற்றுவதை, இந்திய, இலங்கை ராணுவத்தினருடன் சேர்ந்துசெய்யலாம். (வீரம் செறிந்து தினவெடுத்து அலைபவர்களுக்கு ஒரு வடிகாலாக அமையும் இது. இதற்கு மூளையும், பயிற்சியும், கடின உழைப்பும் வேண்டும்; மேலும் ஏனோதானோ என்று இந்த வேலையைச் செய்தால் ஊக்க போனஸாக, "வெற்றி அல்லது வீரமரணம்" கிடைத்தாலும் கிடைக்கும்!)

இ: இலங்கைத் தமிழர்களின் வயல்களில் சென்று வேலை செய்யலாம். இலங்கை (தமிழ்) மீனவர்களுடன் கூடமாட உழைத்து - எப்படி தமிழக மீனவர்களால், அவர்களுடைய ட்ரால் / மடிப்பு வலைகளால், எல்லை அத்துமீறல்களால் - இலங்கை (தமிழ்) மீனவர்களுக்கு எவ்வளவு மோசமான வாழ்வாதாரப் பிரச்சினைகள் வருகின்றன எனப் புரிந்துகொள்ள முயலலாம்.

**இலங்கையின் பிரச்சினைகளை தீர்த்தலில், நம் பங்கு சொற்பம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். நாம், நம்முடைய கோமாளித்தனங்களால், மேலும் மேலும் பிரச்சினைகளை வளர்க்கத்தான் ஆசைப்படுகிறோம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் போக்கை நிறுத்தவேண்டும்.**

ஈ: இலங்கைத் தமிழ்ப் பாடசாலைகளில் படிப்பு சொல்லிக் கொடுக்கலாம்.

உ: மருத்துவ நிலையங்கள் / முகாம்கள் அமைத்து நிர்வகிக்கலாம். வாழுமிடங்கள் கட்டித் தரலாம்.

இப்போதைக்கு இவ்வளவு போதுமென நினைக்கிறேன்.

**பத்ரி:** சரி, முடிவாக நாம் என்னதான் செய்யவேண்டும்?

**வெ.ரா.:** 1: நாம் செய்யக்கூடிய உதவி நமக்கு அல்ல - பாதிக்கப்பட்டவர்களுக்கு நன்மை பயக்கவேண்டும் என்கிற எண்ணம்தான் ஆதாரசுருதியாக இருக்கவேண்டும். இப்படி யோசித்தால், சுமார் 99 வீத வெற்றுவேட்டுப் போராட்டங்கள், டெஸோ-புஸோக்கள் போன்ற "டைம்பாஸ்" அபத்தங்கள், "நாம் டமிளர்" போன்ற வேடிக்கைவினோதங்கள் இழுத்துமூடப்படும்.

2: நாம் செய்யக்கூடிய உதவிகள், உண்மையாகவே அங்குள்ள தமிழர்களுக்கு உபயோககரமாக இருக்க வேண்டும். நிகழ்கால நோக்கிலும், எதிர்காலத்திலும் நன்மை விளைவிப்பனவாக இருக்கவேண்டும். இதற்கு, அங்குள்ள சகல பகுதிகளில் இருக்கும் தமிழர்கள் என்ன சொல்கிறார்கள், அவர்கள் விருப்பம் என்ன என்று அறியவேண்டும். மற்றெங்கோ இருக்கும் நம்போன்றவர்களின் விருப்பங்கள் இங்கு இரண்டாம் அல்லது கடைசிப் பட்சமே. ஒரு விஷயம் - அங்குள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகள் - ஜனநாயகரீதியாக அவர்கள் குரல்களை இன்றும் எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாம் இவர்களைக் கவனிக்காமல், கேட்காமல், சொல்வதை அவதானிக்காமல், தூரத்தில் "புலம் பெயர்ந்து" பாதுகாப்பாக, மிகவும் சொகுசாகவேகூட, இருப்பவர்களின் வாயோர நுரை தள்ளல்களிலும், இங்குள்ள உதிரி அரைகுறைகளின் (டெஸோ-புஸோக்கள், தமிழ் தேசியம் சார்ந்தவை போன்ற கோமாளி இயக்கங்கள்) உளறல்களிலும் வசீகரப்பட்டு - நம்பவேமுடியாத வகையில் குண்டுச்சட்டியில் போராட்டக் கும்மிஅடித்துக் கொண்டிருக்கிறோம்!

3: இதில், "புலம் பெயர்ந்த" தமிழர்களை கருத்திலெடுக்கவேண்டிய அவசியம் இல்லை. இலங்கையில் சூழ்நிலை சரியானால்கூட, இந்த "மேற்கத்திய" நாடுகள் (அவுஸ்திரேலியா உட்பட) போனவர்கள் திரும்புவார்களா என்பது சந்தேகமே! யோசித்துப் பாருங்கள் - பெருமளவு ரத்தம் சிந்துதல்கள் இல்லாத, அமைதியான நம் இந்தியாவிலிருந்து வெளியே போனவர்களே, திரும்ப வருவதில்லை. அதற்கு ஆயிரம் காரணங்கள் வேறு சொல்வார்கள். (இவர்களெல்லாம் என்ஆர்ஜ மனப்பான்மையுடன், பெரிய மனசுவைத்துத் திரும்பிவந்தால், இந்தியாவே கந்தரகோளம் ஆகிவிடும் என்பது வேறு வி'யம் அதேபோல "புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள் திரும்பிப் போனால், இலங்கையும் கந்தரகோளம் ஆகிவிடும்!)

4: எந்த உதவியும் தமிழர்களல்லாத மற்ற மக்களை - பொது மக்களை (முக்கியமாகச் சிங்களவர்களை) உசுப்பேற்றுவதாக இருக்கக்கூடாது. ஒரு இலங்கை தமிழர் உதவி பெற்றால், ஒரு தமிழரல்லாத இலங்கை மனிதராவது உதவிபெற வேண்டும். (இல்லையேல் பரஸ்பர அவநம்பிக்கைகள் தொடர்ந்து பெரிதாக ஊதப்பட்டு புதிய பிரச்சினைகளைக் கிளப்பும்.)

5: நாம் இங்கே தைரியத்துடன் நம் தமிழகத்தில் இருந்துகொண்டு, நமக்கு பொழுதுபோகாமல் இருக்கும்போதெல்லாம், அங்கிருக்கும் தமிழர்களுக்கு உசுப்பேற்றக் கூடாது. "குட்டி நடிகை மீசைக்கார ஹீரோவுடன் மாயம்!" போன்ற மிகமுக்கியமான, உலகைக் குலுக்கும் செய்திகள் கிடைக்காத போது, அரைகுறை அயோக்கியசன் டீவித்தனமாக "இளங்கையிள் இணப் படுகொளை" எனப் பொய்ச் செய்திகளைப் பரப்பக்கூடாது. இங்கு வரும் யாத்ரீகர்களுக்கு (புத்த/சிங்கள/...) நம்முடைய புறநானூற்று வீரத்தையும், மழபுலவஞ்சித்தனத்தையும் (கல்லெறிதல், விரட்டுதல், கோஷம் போடுதல், தட்டிகளைக் கிழித்தல்) பரிசளிக்கக் கூடாது. இணையத்திலும் நம் வீரத்தைக் காட்டக்கூடாது.

(18ஆம் பக்கம் பார்க்க)

# ஆனந்த சங்கரி கோரிக்கை

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாடு நடைபெறவுள்ள நிலையில் சிறையிலுள்ள தமிழ அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும் என ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வி.ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

இந்த வேண்டுகோளை கடிதம் ஒன்றின் மூலம் ஜனாதிபதியிடம் விடுத்துள்ளதாக வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட தமிழ் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வி.ஆனந்தசங்கரி.

அவர் மேலும் தெரிவிக்கையில்

அவருக்கு எழுதிய கடிதத்தில் ஏனைய நாடுகளை கௌரவிக்கூடிய வகையில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற ஆண் பெண் அந்தப் பெண்களுடைய பிள்ளைகளை நிபந்தனை இன்றி விடுதலை செய்து நல்லதொரு பெயரை வாங்க வேண்டும். அப்போது அவர்கள் அதனைப பாராட்டுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

# போர்க்குற்ற விவகாரங்கள் மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் இல்லை

## அரசு திட்டவட்டம்

கொழும்பு)

பொதுநலவாய மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் யுத்தகால உரிமை மீறல் தொடர்பான விடயம் இல்லை என்றும் இந்த விடயம் பற்றி இம்மாநாட்டில் ஆராயப்படமாட்டாது என்றும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாட்டின் போது நிகழ்ச்சி நிரலுக்கு முரணாக பேச, பிரித்தானிய பிரதமர் கமரூனுக்கு இடமளிக்கப்பட மாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

வடக்கில் இடம்பெற்ற போர்க் குற்றச் செயல்கள் தொடரபில் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமென மாநாட்டின போது கமரூன் யோசனை ஒன்றை முன்வைக்கத் திட்டமிட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும், இந்த முயற்சிக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

மாநாட்டின் போது பிரித்தானியாவிற்கும் இலங் கைக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகள் குறித்து பேசப்பட மாட்டாது.

நாட்டின் தேசிய பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பில் பிரித்தானிய பிரதமருடன் எவ்வித இணக்கப்பாடும் ஏற்படுத்திக் கொள்ளப்பட மாட்டாது என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

### சபுகஸ்கந்த ஆலை மூடப்பட்டதால் நாள்தோறும் நட்டம் ஆறு கோடி

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டதனால் நாள் தோறும் ஆறு கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

இதனை ஈடு செய்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எண்ணெய் சுத்திகரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் நாள் ஒன்றுக்கு ஆறு கோடியே நாற்பது இலட்ச ரூபா நட்டம் ஏற்படுவதாக பெற்றோலிய வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எண்ணெய் சுத்திகரிப்பு மேற்கொளளப்படாத காரணத்தினால், சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகின்றது. இதனால் அதிக செலவு ஏற்படுகின்றது.

# தென்னாபிரிக்க பாணியில் இனப்பிரச்சினைக்கு தீர்வு

## அரசு இப்போது முயற்சிக்கிறது

தென்னாபிரிக்காவின் பாணியில் நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசு இப்போது முயற்சித்து வருவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு தென்னாபிரிக்க மாதிரியிலான தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பதற்கு அரசாங்கம் முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்னாபிரிக்காவில் இன முரண்பாடுகளை களைவதற்கு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன.

உரிமைகள், இருப்பிடங் களை இழத்தல், மனித உரிமைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங் கள் குறித்து தென்னாபிரிக்க உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு ஆராய்ந்து தீர்வு வழங்கியிருந்தது. இந்த ஆணைக் குழுவின் தலைவராக பேராயர் டெஸ்மன் டுட்டு கடமையாற்றினார.

நல்லிணக்கத்தை ஏற்படுத்தல், அபராதம் விதித்தல், நட்டஈடு வழங்குதல், தண்டனை விதித்தல் எனப் பல்வேறு அதிகாரங்கள் இந்த ஆணைக்குழுவிற்கு காணப்பட்டது.

இதேபோன்றதொரு பொறிமுறைமையை உருவாக்கி அதன் மூலம் வடக்கு கிழக்கு பிரச்சினைகளுக்கு நிரந்தர அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன் வைப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

### பாதிப்பை ஏற்படுத்தும் தாவரங்கள் அகற்றல்



வன உயிரினங்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் தாவரங்களை அகற்றும் நடவடிக்கைகள் நாளை முதல் மேற்கொள்ளப்படவுள்ளன.

வனவளத்துறை அமைச்சர் விஜித விஜயமுனி சொய்சா இதனைத் தெரிவித்துள்ளார்.

உடவலவ வனபூங்காவில் இருந்து இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

வனத்தில் உள்ள தாவரங்களுள், விலங்குகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் விச செடிகள் போன்றவற்றை இவ்வாறு அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# திட்டமிட்டபடி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஐ.தே.க. நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை



எதிர்வரும் பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாட்டின் போது போராட்டங்களை நடத்தக் கூடாது என பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர். பொலிஸாரின் உத்தரவுகளை ஏற்றுக்கொள்ளவோ, பொருட்படுத்தவோ போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

மாநாடு நடைபெறும் காலத்தில எந்தவிதமான போராட்டங்களையும் நடாத்தக் கூடாது எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொலிஸாரின் உத்தரவுகளை கவனத்திற் கொள்ளாது குறித்த காலப்பகுதியில் போராட்டம் நடத்தப்படும என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அரசாங்கம் அதிகாரிகளின் ஊடாக சில உத்தரவுகளை பிறப்பிக்கின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த உத்தரவுகளை பொருட்படுத்த வேண்டிய அவசியமில்லை.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தனது அதிகாரத்தை மீறி அறிக்கை வெளியிட்டு வருகின்றார் என' அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, எதிர்வரும் 14ஆம் திகதி எதிர்க்கட்சிகள் பாரியளவில் போராட்டம் ஒன்றை நடாத்தத் திட்டமிட்டுள்ளது.

அதேவேளை எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவின் பதவிக் காலம் முடிவடைய உள்ளதுடன் புதிய செயற குழுவை கட்சியின் தலைமைத்துவச் சபையே நியமிக்கும் என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.


கட்சியின் தற்போதைய செயற குழுவை ஐக்கிய தேசியக்கட்சியின் புத்திஜீவிகள் குழு நியமித்துள்ளது. செயற்குழுவிற்கான உறுப்பினர்கள் எப்படி நியமிக்கப்படுகின்றனர் என்பதை அனைவரும் அறிந்து கொள்ள முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பின் பிரகாரம், செயற்குழு உறுப்பினர்களாக 22 பேரை நியமிக்க முடியும்.

அந்த 22 பேரையும் கட்சியின் தலைவரான ரணில் விக்ரமசிங்க நியமிப்பதில்லை என்றார்.

# கொமன்வெல்த் பண்புகளை கொழும்பு வெளிப்படுத்த வேண்டும்

## பிரித்தானியா கோரிக்கை



பொதுநலவாய நாடுகள் அமைப்பின் உயரிய பண்புகளை கொழும்பு பேண வேண்டுமென பிரிட்டன் அறிவித்துள்ளது.

பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாட்டில் பிரித்தானியா பங்கேற்பதற்கான நியாயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் மீது பிரிட்டன் கொண்டுள்ள நம்பிக்கையும் மரியாதையுமே இம்முறை மாநாட்டில் பங்கேற்கக் காரணம் என இலங்கைக்கான பிரிட்டன் உயர்ஸ்தானிகர் ஜோன் ரன்கீன் தெரிவித்துள்ளார்.

எந்த நாட்டில் மாநாடு நடைபெறுகின்றது என்பதனை விடவும், பொதுநலவாய நாடுகள அமைப்பிற்கான ஆதரவே முக்கியமானது.

பொதுநலவாய நாடுகள் பண்புகளை அமுல்படுத்த கொழும்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கைக்கு விஜயம செய்யும் பிரிட்டன் பிரதமர் இலங்கை நிலைமைகளை பார்வையிடுவார் என ரன்கீன் தெரிவித்துள்ளார்.

### வெளிநாட்டுத் தலைவர்களின் பாதுகாப்பு; விசேட பொலிஸ் படையணி உதயம்

(கொழும்பு)

கொழும்பு மாநாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டுத் தலைவர்களின் பாதுகாபை உறுதிப்படுத்துவதற்காக விசேட பொலிஸ் படையணி ஒன்று வடிவமைக்கப்படுகிறது. இந்த மாநாட்டுப் பணியில் 20 ஆயிரம் பொலிஸார் அங்கம் வகிக்கின்றனர்.

கொழும்புக்கு வருகைதரும் பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் குழுக்களுக்காக விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை இப்படையணி மூலமாக மேற்கொணடுள்ள தாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

முக்கிய பிரமுகர்கள் நாட்டை வந்தடைந்ததும் ஒருசில வீதிகள் தற்காலிகமாக மூடப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பு, கட்டுநாயக்க, அம்பாந்தோட்டை, காலி, மற்றும் கண்டி ஆகிய பகுதிகளில் மொத்தமாக 20 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# மனம் மாறுவார் மக்ரே நம்புகிறார் அமைச்சர் ஹெகலிய

சனல்4 ஊடகத்தின் பணிப்பாளர் கலம் மக்ரேவின் இலங்கை குறித்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படும் என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

மக்ரே இலங்கைக்கு விஜயம் செய்ததன் பின்னர் இலங்கை தொடர்பான அவரது நிலைப்பாட்டில் மாற்றம் உண்டாகும் என அவர் நம்பிக்கை வெளி யிட்டுள்ளார்.

பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனின் ஊடகவியலாளர் குழுவுடன் மக்ரே இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

மக்ரேயுடன் மொத்தமாக 30 ஊடகவியலாளர்கள் பிரித்தானியாவின் சார்பில் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் பங்கேற்க உள்ளனர். கலம் மக்ரேக்கு விசா வழங்குவதில் இலங்கைக்கு எவ்வித சிக்கல்களும் கிடையாது என அமைச்சர் ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் பார்வையிட்டு நாடு குறித்த புரிதலை ஏற்படுத்திக் கொள்வார் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

எவ்வாறெனினும்- இலங்கைக்கு எதிராக மற்றுமொரு ஆவணப்படத்தை தயாரிக்க சனல்4 ஊடகம் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளை சந்தர்ப்பமாக பயன்படுத்திக்கொள்ளக் கூடுமென அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.



அவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் அதனை முறியடிக்கத் தயார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# அதிகரிக்கிறது மாணவர் இடைவிலகல் தடுத்து நிறுத்த விசேட செயற்திட்டம்

(யாழ்.நிருபர்)


நாடு முழுவதும் பாடசாலைகளை விட்டு இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாட்டிலுள்ள 333 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகியுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து இவ்வாறு பாடசாலைக்குச் செல்லாமல் இருக்கும் மாணவர்களை இனம் காணும் நடவடிக்கையில் சிறுவர் நன்னடத்தைப் பிரிவு உத்தியோகத்தர்களின் உதவியுடன் கிராமங்களில் உள்ள பொது அமைப்புக்கள் மற்றும் சிவில் பாதுகாப்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு பாடசாலைக்குச் செல்லாது இடைநடுவில் கல்வியைக் கைவிட்டுள்ள சிறுவர்களை பாடசாலையில் மீண்டும் இணைப்பதன் மூலம் சிறுவர் துஷ்பிரயோகத்தைக் குறைக்க முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் பாடசாலைக்குச் செல்லாத மற்றும் இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலையில் இணைத்துக் கொள்வது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், இது தொடர்பாக அந்தந்தப் பிரதேச செயலகங்கள், கிராம சேவை அலுவலர்கள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், கல்வி அலுவலகங்கள், பொலிஸார் மற்றும் சுகாதாரப் பிரிவினர் ஆகியோரையும் அதிபர், ஆசிரியர், பெற்றோர்களையும் விழிப்புடன் செயற்படுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (10)



கைதடி இடிங்கித்தோட்ட கந்த சுவாமி ஆலயத்தில் நடைபெற்ற சூரன்போர் விழாவின் போது... (51)

# செஞ்சிலுவை சங்கத்தின் அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினால் நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பு நடாத்தப்பட்டது. இச்சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களின் விபரம் வருமாறு,

1 ஆம் பரிசு 4998, 2 ஆம் பரிசு 17455, 3 ஆம் பரிசு 17000. மற்றும் 5 ஆறுதல் பரிசுகளாக, 16001, 2269, 4841, 5803, 10308 என்பனவாகும்.

எனவே அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் வெற்றிபெற்றவர்கள் 73, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை அலுவலகத்திற்கு சமுகமளித்து, எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் உங்களுக்கான பற்றுச்சீட்டினை வழங்கி, பரிசில்களை பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.கிளைத் தலைவர் அறிவித்துள்ளார்.

# கோஸ்டி மோதலில் இளைஞர்கள் படுகாயம்

கரணவாய் கெருடாவில் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற கோஸ்டி மோதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு இளைஞர்கள் காயமடைந்துள்ளனர்.

கோஸ்டி மோதலில் ஈடுபடாது சமரசம் செய்ய சென்ற இளைஞர்களே இவ்வாறு காயமடைந்துள்ளதாகவும், இவர்க ளில் ஒருவர் பொலிகண்டி வைத்தியசாலையிலும், மற்றவர் புலோலி வைத்திய சாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட இளைஞர்கள் தரப்பில் பொலிஸார் எதுவித விசாரணைகளையும் மேற்கொள்ளவில்லை என இளைஞர்களின் குடும்பத்தினர் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (18,சி)

# தேங்கி நின்றவெள்ள நீர் குழாய் மூலம் அகற்றல்

(வடமராட்சி)

வடமராட்சி கல்வித் திணைக்களத்திற்குச் செல்லும் வீதி ஒழுங்கையில் தேங்கி நின்ற வெள்ள நீர் குழாய் மூலம் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. அண்மையில் பெய்த மழையினால் இவ் ஒழுங்கையில் வெள்ளநீர் தேங்கி காணப்பட்டமையால் இதனூடாகச் செல்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்நிலையில் இப்பகுதியில் தேங்கி நிற்கும் வெள்ள நீரை அப்புறப்படுத்துமாறு வீதி அதிகாரசபைக்கும், பருத்தித்துறை நகரசபைக்கும் அறிவிக்கப்பட்ட நிலையில் இருபகுதி தொழிலாளர்களும் சேர்ந்து நிலத்தைப் பள்ளமாக்கி குழாய் மூலம் வெள்ள நீரை அப்புறப்படுத்தியுள்ளனர்.

இதனால் இவ் ஒழுங்கையினூடான போக்குவரத்து இலகுபடுத்தப்பட்டுள்ளதாக பலராலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (109)

## முரசின் இன்றைய பலன்



(11.11.2013 திங்கட்கிழமை)

விஜய வருஷம் ஐப்பசி மாதம் 25ஆம் திகதி.
அவிட்ட நட்சத்திரம் பி.ப.01.11 வரை.
பின் சதயம். நவமித்திதி/சித்தயோகம்.
இராகுகாலம் 07.36 - 09.06 வரை. சுபநேரம் 12.06 - 01.36 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சோக நினைவு மனதை ஆக்கிரமித்ததால் வேலையைத் தொடரமுடியாதிருத்தல், வெளியூர் செல்ல முயற்சிப்பதை இல்லக்கிழத்தி மறுப்புத் தெரிவித்தல். |
| ரிஷபம் | மனதில் உள்ளதைக் கொட்டித்தீர்த்தால் நிம்மதி பிறத்தல், நீண்ட காலத்தின் பின் திருமணம் செய்ய ஆண் மகன் வருவதையிட்டு குதூகலமடைதல். |
| மிதுனம் | வேகக்கணக்கீட்டுமானியைப் . பயன்படுத்தி வேகத்தை அளவிட்டமையால் தண்டம், மனைவியின் நடத்தைப் பாங்கினைப்புரியாது சந்தேகம் வலுத்தல் |
| கடகம் | வங்கியில் சேமிப்பதாகக் கூறிபண மோசடி செய்ததால் அதிர்ச்சிக்குள்ளாதல், பயண முகவரின் வார்த்தைப பிரயோகத்தில் சந்தேகமிருப்பதால் பயணத்தை மேற்கொள்ளப்பின்னடிப்பு. |
| சிம்மம் | வெட்டுப் புள்ளிக்கு மேல் தொழில்வாய்ப்புக்குரிய நிலைமை அறிந்து மகிழ்வு, நீண்ட நாட்கள் இழுபட்டுக் கொண்டிருந்த விவாக முயற்சி பச்சைக்கொடி காட்டல். |
| கன்னி | தொழில் பெற்றுத்தரும் ஆசைகாட்டி கற்பைச் சூறையாட் எடுத்த முயற்சி களேபரத்தால் முறியடிப்பு, நிறுத்தியிருந்த இடமாற்றம் செயற்படுத்த கடிதம் வரல். |
| துலாம் | வியாபார நிலையம் திறக்கும் எண்ணம் மதில்மேல் பூனையாக் இருத்தல், விரும்பியவருடன் செல்ல எடுத்த முயற்சி பெற்றோரின் தலையீட்டால் கைவிடல். |
| விருச்சிகம் | கள்ள உறுதி தயாரித்து காணியை அபகரிக்க முயன்றதால் விசாரணைக்குச் செல்லல், |
| தனுசு | குழந்தைகளை நேசிப்பதால் குடும்பத்தில் குதூகலம் ஏற்படல், தனியார் நிறுவன முகவரின் பசப்பு வார்த்தையை நம்பி மோசடிக்குள்ளதால். |
| மகரம் | சிறப்பான சேவைக்காக விருது வழங்கிக் கௌரவிக்கப்படல், வழக்கத்திலிருக்கும் பெற்றோர் சூட்டிய பெயரை அதிர்ஷ்ட எண்களுக்கு மாற்ற சோதிடரை நாடுதல். |
| கும்பம் | ஆலயத்தில் புனிதம் பேணப்படாமையால் முரண்பாடு முற்றி கைகலப்பு நிலை உருவாதல், பழைய மனையை இடித்து புதிய இல்லம் அமைக்க மக்களால் பண உதவி கிட்டல். |
| மீனம் | மன அழுத்தத்திலிருந்து வெளிவர யோகக்கலை மற்றும் தியானத்தில் ஈடுபட முன்வரல், அஷ்ட மத்துச் சனி நடப்பதால் புதிய காரியம் தொடங்க பின்னடித்தல். |

# சீரற்ற நிலையில் காணப்படும் பேருந்து தரிப்பிட வீதி

(அச்சுவேலி)


அச்சுவேலி பஸ்தரிப்பிடப் பகுதி மற்றும் வீதியோரப் பகுதிகளில் வீதிப் புனரமைப்பின் போது ஏற்பட்ட சிறு பள்ளங்கள் நிரவப்படாது பள்ளமும் திட்டியுமாக சமனற்றுக் காணப்படுவதாக பல்வேறு தரப்பினராலும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு சமனற்றுக் காணப்படும் பள்ளங்களுக்குள் மழைநீர் தேங்கி நிற்கின்றது. இதனால் அப்பகுதிகள் சேறும் சகதியுமாகக் காணப்படுவதுடன், போக்குவரத்துச் செய்வதிலும் பல்வேறு நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. அத்துடன் வீதி வேலைக்குப் பயன்படுத்திய எஞ்சிய கற்களும் ஆங்காங்கே காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

குறிப்பாக பஸ்தரிப்பிட சுற்று வட்டப் பகுதி இவ்வாறு சமனற்ற நிலையில் காணப்படுகிறது. இதனால் விபத்துக்கள் ஏற்படும் நிலை காணப்படுவதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே மேற்படி பகுதிகளைச் சீர் செய்து நீர் தேங்கி நிற்பதைத் தடுத்து பயணிகளின் நாளாந்த நடவடிக் கைக்கு ஆவன செய்ய வேண்டும் என சம்பந்தப்பட்டவர்களை பயணிகள் கேட்டுள்ளனர். (85)

# உடைந்த அணைக்கட்டு அபாயத்தில் போக்குவரத்து



கரவெட்டி தெற்கு ஜனசக்தி விளையாட்டுக் கழகத்துக்கு அண்மையில் அமைந்துள்ள சண்டில் குளத்தின் அணைகள் நீண்ட காலமாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் காணப்படுகிறது.

வீதியோரமாகவுள்ள இக் குளத்தில் மழை காலங்களில் நீர் நிரம்பி வீதியில் நிற்பதனால் குளமும் வீதியும் தெரியாத மக்கள் குளத்துக்குள் தவறி விழும் நிலையும் காணப்படுகின்றது.

மேலும் இரவு வேளையில் வீதியினைப் பயன்படுத்துவது ஆபத்தாக உள்ளதாகவும், இப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இக் குளத்துக்கு அண்மையில் மின் கம்பம் காணப்படுவதாகவும் அடைமழைபெய்தால் கம்பிகள் முறிந்தால் மின்சாரம் தாக்கும் அபாயம் காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இவ்வீதியால் பாடசாலை மாணவர்கள், அலுவலர்கள், வர்த்தகர்கள் எனப் பெருமளவானோர் இவ்வீதியை பயன்படுத்தி வருகின்றனர். மழைகாலம் ஆரம்பித்துள்ள இந்நிலையில் உரிய அதிகாரிகளும், கிராம சேவையாளரும் இந்த வீதியையும், குளத்தையும் புனரமைத்து மின்சாரக் கம்பியினை வீதியின் மறுபக்கத்துக்கு மாற்றுவதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொது மக்களும் பாடசாலை மாணவர்களும், நலன் விரும்பிகளும் கோரிக்கை விடுக்கின்றனர். (18,சி)

## பரிசளிப்பு விழா

(வடமராட்சி)

வடமராட்சி சிதம்பராக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் எஸ்.ராஜதுரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (109)


*** *** ***

(வடமராட்சி)

வடமராட்சி இந்து ஆரம்ப பாடசாலையின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் த.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (109)

## சச்சின் அப்படியில்லையே




(சிட்னி)

சச்சின் டெண்டுல்கர் தன்னை கேலி செய்ததாக அவுஸ்ரேலிய முன்னாள் வேகப்பந்து வீரர் மெக்ராத் தெரிவித்துள்ளார். 2000ஆம் ஆண்டு ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியில் தன்னை டெண்டுல்கர் கேலி செய்ததாகவும், ஆனால் இது ஆட்டத்தில் ஒரு பகுதியே என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

டெண்டுல்கரை அதிக முறை ஆட்டமிழக்கச் செய்த பந்து வீச்சாளர்களின் பட்டியலில் முரளிதரன், பொலக் ஆகியோருடன் இணைந்து மெக்ராத் 2ஆவது இடத்தில் உள்ளார். 13 முறை ஆட்டமிழக்கச் செய்துள்ளார்.

பிரெட்லீ அதிக பட்சமாக சச்சினை 14 முறை ஆட்டமிழக்கச் செய்துள்ளார்.

## குத்துவதில் மட்டும் வல்லவனல்ல நீ!



அதிக பெண்களிடம் உடலுறவு வைத்திருந்ததால் சிறையில் இருந்த போது உடற்பயிற்சி செய்யக்கூட சக்தியற்றவனாகி விட்டேன் என்பதை வெளிப்படையாகவும் வேதனையுடனும் மைக் டைசன் தெரிவித்துள்ளார்.

இந்தப் பூமியில் யாருக்குமே அடங்காத – மகா மோசமான கெட்ட மனிதன் என்று பெயர் எடுத்தவர் முன்னாள் பிரபல குத்துச் சண்டை வீரர் மைக் டைசன் (வயது – 47). குத்துச் சண்டை உலகின் ஜாம்பவானாக வலம்வந்த பலரை வீழ்த்தி உலக சம்பியனாக புகழ் ஏணியின் உச்சிக்கு சென்ற டைசன், 58 போட்டிகளில் பங்கேற்று அவற்றில் 50இல் வெற்றி பெற்றவர். ஆனால், சொந்த வாழ்க்கையில் 3 மனைவிகளைத் திருமணம் செய்து விவாகரத்தும் செய்த இவர் பல அழகிகளுடன் இணைந்து கிசுகிசுக்கப்பட்டார்.

போதாக்குறைக்கு, 1991ஆம் ஆண்டில் டிசிரி வோஷிங்டன் என்ற 18 வயது பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்த வழக்கில் 6 ஆண்டுகள் சிறை தண்டனை பெற்று 3 ஆண்டு தண்டனை காலம் தள்ளுபடி செய்யப்பட்டு 1995ஆம் ஆண்டு டைசன் விடுதலை ஆனார்.

1996 மற்றும் 1997இல் இவாண்டர் ஹோலிபீல்ட்டிடம் உலக சம்பியன் பட்டத்தை பறிகொடுத்த இவர், அதன் பின்னர் வரிசையாக தோல்விகளை சந்தித்து குத்துச்சண்டை போட்டிகளில் இருந்து விலகியுள்ளார். இந்நிலையில், பிரபல ஆங்கில தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றில் தனது மலரும் நினைவுகளை இம்மாதம் 16ஆம் திகதி பகிர்ந்துக் கொள்ளும் மைக் டைசனின் வாழ்க்கை வரலாறு விரைவில் புத்தகமாக வெளியாக உள்ளது. தனது வாழ்வின் முக்கிய சம்பவங்களை இவரே பட்டியலிட்டுக் கூற லேர்ரி ஸ்லொமேன் என்பவர் இந்தப் புத்தகத்தை எழுதியுள்ளார்.

இன, மொழி, நிற பேதங்களைகடந்து பல பெண்களுடன் தான் நிகழ்த்திய காமக்களியாட்டங்களை மைக் டைசன் இந்தப் புத்தகத்தில் நடந்தது நடந்தபடியே பதிவு செய்துள்ளார்.

பாலியல் பலாத்கார வழக்கில் சிக்கி சிறையில் தண்டனை அனுபவித்த வேளையிலும், தனது பழக்கத்தை கைவிட முடியாமல் சிறையில் பணியாற்றிய போதைப் பழக்க தடுப்பு பெண் அலுவலரிடம் தொடர்ந்து இன்பம் அனுபவித்த சாகசத்தையும் விவரித்துள்ளார்.



சர்வதேச ரென்னிஸ் தரப்படுத்தலுக்கான தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்துக் கொண்ட நடாலுக்கு நேற்று முன்தினம் அதற்கான கிண்ணம் வழங்கப்பட்டது. லண்டனில் நடைபெற்று வரும் ஏ.டி.பி. உலக டூர் இறுதி ரென்னிஸ் போட்டித் தொடரின் போது சர்வதேச ரென்னிஸ் சம்மேளனத்தினால் மேற்படி கிண்ணம் வழங்கப்பட்டது.




## சமநிலையில் முதல் சுற்று ஆட்டம்

(சென்னை)

விஸ்வநாதன் ஆனந்த் - மேக்னஸ் கார்ல்சன் மோதும் உலக சதுரங்கச் சம்பியன்ஷிப் தொடரின் முதல் சுற்று ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள ஹயாத் நட்சத்திர விடுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் சுற்றுப் போட்டியில், கார்ல்சன் வெள்ளை காய்களுடன் ஆட்டத்தை தொடங்கினார். மிகவும் விறுவிறுப்பாக அமைந்த ஆட்டம் 16 நகர்த்துதல்களுக்கு பின்னர் சமநிலையில் முடிவடைந்தது. இப்போட்டி ஒரு மணி 20 நிமிட நேரம் நீடித்தது.

போட்டி முடிந்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஆனந்த், கறுப்பு காய்களுடன் விளையாடி சமநிலை செய்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இன்னும் பல சுற்றுகள் எஞ்சியுள்ளதால், அடுத்து என்ன நடக்கும் என்பதை கணிப்பது மிகவும் கடினம் என்றார். முதல் சுற்றுப்போட்டியை 350 பேர் நேரில் பார்த்து இரசித்தனர்.

## நைஜீரியா சம்பியன்



(அபுதாபி)


17 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணக் கால்பந்துப் போட்டியின் வெற்றிக் கிண்ணத்தை நைஜீரிய அணி கைப்பற்றிக்கொண்டது.

ஐக்கிய அரபு எமிரேட்சில் 17வயதுக்குட்பட்டோருக்கான உலக கோப்பை கால்பந்துத் தொடர் நடைபெற்றது. அபுதாபியில் நடந்த இதன் இறுதிப் போட்டியில் நைஜீரியா, மெக்சிகோ அணிகள் மோதின. இதில் முதல் பாதியில் மெக்சிக்கோ அணியின் எரிக் (9ஆவது நிமிடம்) சேம் சைட் கோல் அடித்தார். முதல் பாதி முடிவில், நைஜீரியா அணி முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியில் நைஜீரியா அணியின் கெலிசி (55ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். தொடர்ந்து அசத்திய இந்த அணிக்கு முசா (81ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்து கைகொடுத்தார். முடிவில், நைஜீரியா அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, கோப்பையை வென்றது.

இதன் மூலம், நைஜீரியா அணி (1985, 93, 2007, 13) நான்காவது முறையாக சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது.

மூன்றாவது இடத்திற்கான போட்டியில் சுவீடன் அணி 4-1 என ஆர்ஜென்ரீனாவை வீழ்த்தியது.

## ஏமாற்றம்




சச்சினின் 199ஆவது டெஸ்ட் போட்டியை காண கொல்கத்தா வந்த லாரா ஏமாற்றம் அடைந்தார். கொல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்த முதல் டெஸ்டில் இந்திய அணி, மே.தீவுகளை வீழ்த்தியது. இது, இந்திய வீரர் சச்சினின் 199ஆவது டெஸ்ட் என்பதால் எதிர்பார்ப்பு அதிகரித்தது. நான்காவது நாள் ஆட்டத்தில் ஜாம்பவான் லாரா உள்ளிட்ட பல வி.ஐ.பி.,க்கள் சச்சினை நேரடியாக பாராட்ட இருந்தனர். ஆனால், போட்டி மூன்று நாட்களிலேயே முடிந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் கொல்கத்தா வந்த லாரா கூறுகையில், கொல்கத்தா டெஸ்டில் மே.தீவுகள் அணியினர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவார்கள் என நம்பினேன். ஆனால், போட்டி மூன்று நாளில் முடிந்தது ஏமாற்றமாக உள்ளது. இருப்பினும், மும்பை டெஸ்ட் ஐந்து நாட்கள் நடக்கும் என எண்ணுகிறேன். அங்கு சென்று சச்சினின் ஆட்டத்தை பார்ப்பேன் என்றார்.

### வட்சன் ஆடுவதில் சந்தேகமில்லை

ஆஷஸ் தொடரின் அனைத்துப் போட்டிகளிலும் வட்சன் ஆடுவார் என அவுஸ்ரேலிய பயிற்றுவிப்பாளர் டரன் லீமன் தெரிவித்துள்ளார். வட்சனுக்கு பெரியளவில் காயம் இல்லை. இது விரைவில் மாறக்கூடியது. ஆஷஸ் தொடரின் முதல் ஆட்டம் எதிர்வரும் 21ஆம் திகதியே ஆரம்பமாகவுள்ளது. அதற்கு முன் அவர் தகுதி பெற்றுவிடுவார் என நான் நம்புகின்றேன். அவர் சிறந்த வீரர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அரையிறுதியில் பெடரர்



(லண்டன்)

ஏ.டி.பி. உலக டூர் இறுதி ரென்னிஸ் தொடரின் அரையிறுதிக்கு முன்னாள் முதல் நிலை வீரர் பெடரர் தகுதி பெற்றுள்ளார்.

எட்டு முன்னணி வீரர்களுக்கு இடையிலான ஏ.டி.பி. உலக டூர் இறுதி சுற்று ரென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி லண்டனில் நடந்து வருகிறது.

இதில் பி பிரிவில் நேற்று முன்தினம் நடந்த பரபரப்பான கடைசி லீக் ஆட்டத்தில் முன்னாள் முதல்நிலை வீரர் சுவிஸின் ரோஜர் பெடரர் 4-6, 7-6 (2), 7-5 என்ற செட் கணக்கில் ஜூவான் மார்ட்டின் டெல் போட்ரோவை (ஆர்ஜென்ரீனா) தோற்கடித்து அரையிறுதிக்குள் (2 வெற்றி, ஒரு தோல்வியுடன்) நுழைந்தார்.

அரையிறுதியில் முதல் நிலைவீரர் நடால், பெடரர் மோதவுள்ளனர்.

## மாற்றமில்லை

கட்டாரில் 2022ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலக கிண்ண கால்பந்து போட்டிகள் திகதி மாற்றம் செய்யப்பட மாட்டாது என்று, தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் தலைவர் செப் ப்லெட்டர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகளை கட்டாரின் பருவ நிலையை கருத்தில் கொண்டு, 2022ஆம் ஆண்டு ஜனவரி அல்லது பெப்ரவரி மாதத்தில் நடத்துவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டது.

எனினும் அந்தக் காலப்பகுதியில் சர்வதேச ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன. திகதியை மாற்றினால் இரண்டு பெரும் போட்டிகளும் ஒரே காலத்தில் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, இதனை கருத்தில் கொண்டு, இந்தத் திகதி மாற்றப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# உச்ச திறனை வெளிப்படுத்தி

## தெற்காசிய போட்டியில் சாதிக்க முயற்சிப்பேன்

### சென். பற்றிக்ஸ் கல்லூரி வீரர் லிவிங்டன்


(கொழும்பு)

எனது உச்ச திறனை வெளிப்படுத்தி தெற்காசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் சாதிக்க முயற்சிப்பேன் என சென். பற்றிக்ஸ் கல்லூரி ஈட்டி எறிதல் வீரர் லிவிங்டன் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது தெற்காசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளில் பங்கேற்கும் இலங்கை குழாம் நேற்று முன்தினம் இந்தியாவுக்குச் சென்றுள்ளது.

இந்தப் போட்டிகளின் ஊடாக வட மாகாணத்துக்கும் இலங்கைக்கும் பெருமை சேர்க்க முயற்சிக்கும் வகையில் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி வீரர் லிவிங்டன் இந்தியா சென்ற இலங்கை குழாமில் இடம்பிடித்துள்ளார். இவர் வட மாகாணத்திலுள்ள ஆற்றல்மிகு ஈட்டி எறிதல் வீரராவார்.

2010 ஆம் ஆண்டில் ஈட்டி எறிதல் போட்டிகளில் ஈடுபட்ட இவர் அன்று முதல் இன்று வரை பல வெற்றிகளை ஈட்டி வட மாகாணத்துக்கு பெருமை சேர்த்துள்ளார்.



சொந்தமாக ஈட்டி இருந்தால் பயிற்சிகளை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும் என்பது இந்த வீரரின் கருத்தாகும்.

அகில இலங்கை பாடசாலைகள் மட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் 62 தசம் ஐந்து எட்டு மீற்றர் தூரத்துக்கு ஆற்றலை வெளிப்படுத்தி தங்கப்பதக்கம் வென்றதன் மூலம் லிவிங்டனுக்கு இந்த அரிய வாய்ப்பு கிட்டியுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த லிவிங்டன், சொந்தமாக ஈட்டி இருந்திருந்தால் என்னுடைய திறமையை மேலும் வளர்த்திருப்பேன். ஈட்டி ஒன்றை கொள்வனவு செய்யக்கூடிய பொருளாதார வளம் எனக்கு இருக்கவில்லை. இது போன்ற பிரச்சினைகள் என்னைப் போன்ற பல வீரர்களுக்கு இருக்கின்றது. இதன் காரணமாகவே அவர்கள் விளையாட்டில் அதிக நாட்டம் காட்டுவதில்லை. இருப்பினும் என்னுடைய விடா முயற்சி காரணமாகவும், பாடசாலை அதிபர், விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களின் ஊக்கம் காரணமாகவும் ஈட்டி எறிதல் போட்டியில் என்னால் சாதிக்க முடிந்தது. எனது திறமை மீது நம்பிக்கை இருக்கின்றது. எனவே, எனது உச்ச திறனைப் பயன்படுத்தி நாட்டிற்கும், வடமாகாணத்திற்கும், கல்லூரி சமூகத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையிலும், எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையிலும் செயற்படுவேன் எனத் தெரிவித்தார்.

## மெய்வல்லுநர் சங்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும்17ஆம் திகதி யாழ். ரில்கோ விடுதியில் நடைபெறவுள்ளது. இதில் யாழ். மாவட்ட மெய்வல்லுநர் துறையை மேலும் வீச்சுப் பெற வைக்கவும், மெய்வல்லுநர்போட்டிகளில் அதிகளவிலான வீர,வீராங்கனைகளின் ஆர்வத்தை அதிகரிக்கவும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கின்றன.

இது குறித்து முக்கிய தீர்மானங்கள் இக்கலந்துரையாடலில் எடுக்கப்படவுள்ளதால் மெய்வல்லுநர் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கத் தலைவர் எஸ். ரமணன் கேட்டுள்ளார். (93)

## கராத்தேப் போட்டியில் இந்து வீரர் வெள்ளி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண வீர,வீராங்கனைகளுக்கிடையில் நடைபெற்ற கராத்தேப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி வீரர் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

வடமாகாண கராத்தே வீர,வீராங்கனைகளுக்கான மாகாண மட்ட கராத்தேப் போட்டி அண்மையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

இதில் 14-15 வயதுப் பிரிவின் 57 கிலோ எடைப் பிரிவுக்கான சண்டைப் போட்டியில் பங்குகொண்ட யாழ். இந்துக் கல்லூரி வீரர் எஸ். இந்துருஜன் வெள்ளிப் பதக்கம் வென்றார். இவர் மாவட்ட மட்டப் போட்டியில் தங்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மாகாண மட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற இந்துருஜனுக்குப் பாடசாலைச் சமூகத்தினால் பாராட்டு விழா அண்மையில் நடாத்தப்பட்டது. இதில் இந்துருஜனின் காராத்தே ஆசிரியர் துசாந்தும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்.பி.)

## உடுவில் கோட்ட சம்பியன்கள்

(உடுவில்)

உடுவில் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட மட்ட கால்பந்தாட்டப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, மயிலங்காடு ஸ்ரீமுருகன் வித்தியாலயம் ஆகிய அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டன. உடுவில் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட மட்டக் கால்பந்துக் போட்டி கடந்த வாரம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் கோட்டத்திற்குட்பட்ட அனைத்துப் பாடசாலை அணிகளும் பங்குகொண்டன. இதில் 14, 16, 18 ஆகிய வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டிகள் நடைபெற்றது.

14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியும், மயிலங்காடு ஸ்ரீமுருகன் வித்தியாலய அணியும் மோதின. இதில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கோட்ட மட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் இணுவில் இந்துவும், மயிலணி சைவப்பிரகாச வித்தியாலய அணியும் மோதின. இதில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடின. இதனால் இரு அணிகளாலும் கோல் எதுவும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. இறுதியில் தண்ட உதை மூலம் வெற்றிதோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் இணுவில் இந்து 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக்கொண்டது. 16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் மயிலங்காடு ஸ்ரீமுருகன் வித்தியாலய அணியும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியும் மோதின. இதில் மயிலங்காடு ஸ்ரீமுருகன் வித்தியாலய அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கோட்ட மட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது. இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலய அணியும், புன்னாலைக்காட்டுவான் சித்திவிநாயகர் வித்தியாலய அணியும் மோதின. இதில் குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலய அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. 18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியும், இணுவில் மத்திய கல்லூரி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே அசத்திய சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கோட்ட மட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது. இப்போட்டி நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், விளையாட்டுக்கான பொறுப்பாசிரியர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தனர். (93)

விளையாட்டுச் செய்திகள்

## சிறப்புற நடைபெற்ற கானிவேல் கால்பந்து விழா

(யாழ்ப்பாணம்)

சென். ஜோண்ஸ் கல்லூரியினால் வருடாந்தம் நடாத்தப்படும் கானிவேல் கால்பந்து விழா நேற்று முன்தினம் சென். ஜோண்ஸ் கல்லூரியில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

சிறுவர்கள் மத்தியில் கால்பந்தாட்டம் குறித்த ஆர்வத்தை அதிகரிக்கும் முகமாக சென். ஜோண்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமலசீலனின் அனுசரணையுடன் சென். ஜோண்ஸ் கல்லூரியினால் இக் கானிவேல் கால்பந்து விழா நடாத்தப்பட்டு வருகின்றது.

11 வயதிற்குட்பட்ட வீர,வீராங்கனைகள் பங்குகொண்ட இப்போட்டியில் கால்பந்து நுணுக்கங்கள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. இப்போட்டியில் 19 பாடசாலைகள் பங்குபற்றின. இதில் யாழ். முஸ்லிம் ஒஸ்மானியக் கல்லூரி, கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம், சென். பற்றிக்ஸ் கல்லூரி, இளவாலை ஹென்றியரசர் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, மணற்காடு ஆர்.சி.ரி.எம்.எஸ், நாவாந்துறை ஆர்.சி.ரி.எம்.எஸ்., வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, மானிப்பாய் சர்வதேச ஆங்கிலப் பாடசாலை, கைதடி நவீல்ட் பாடசாலை, கிளிநொச்சி - உருத்திரபுரம் சிவநகர் தமிழ்க் கலவன் பாடசாலை, யாழ். மத்திய கல்லூரி போன்ற பாடசாலை அணிகள் பங்குகொண்டன.

இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக அமலசீலன் கலந்து கொண்டார். போட்டியில் பங்குகொண்ட அனைத்து பாடசாலை அணிகளுக்கும் சீருடைகள் மற்றும் கால்பந்து என்பன வழங்கப்பட்டன.

இப்போட்டி நிகழ்வில், பாடசாலை அதிபர்கள், பொறுப்பாசிரியர்கள், பயிற்றுநர்கள்,விளையாட்டு ஆர்வலர்கள், நலன் விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்ததுடன் சிறார்களை உற்சாகப்படுத்தினர்.

(எஸ்.பி.,20)





# மனம்பெரி தொடக்கம் - இசைப்பிரியா வரை
# கருணையற்ற மனோநிலை

- சுகு - ஸ்ரீதரன் -



ஊடக-உலக தேவைகள் நலன்களுக்கப்பால் சனல் -4 இல் இசைப்பிரியா இழுத்துச் செல்லப்படும் காட்சி எம்மை அமைதியிழக்கச்செய்கிறது. நிராதரவான பயங்கரமான குரூரமான தனிமையான அவலமானது அந்தச் சூழல்,

சேறும் இரத்தமுமாக வக்கிரமிருகவெறியுடன் துப்பாக்கி முனையில் ஒரு பெண்ணை இழுத்து வரும் மரணத்தை நோக்கிய அவல மான பயணம். நாம் மனிதரெனக் கொண்டிங்கு வாழும் போது இசைப்பிரியாவின் நிலை, தவிப்பு, கையறு நிலை இதனைப் பார்க்கும் போது வெட்கமாகவும் அவமான-மாகவும் இருக்கிறது.

இசைப்பிரியாவின் துயரம் ஒரு கைத்தொலைபேசியில் பிடிக்கப்பட்டதால் அதிர்ச்சியில் உறைய வைக்கிறது. இதே போன்று ஒளிப்பதிவு செய்யப் படாத நிழல்படங்களாக்கப் படாத எத்தனையோ அநியா யங்கள் அக்கிரமங்கள் நிகழ்ந்திருக்கின்றன. நிகழ்ந்துகொண்டிருக்கின்றன.

இவை பற்றி விசாரிக்கப் படாவிட்டால் தண்டனை வழங்கப்படாவிட்டால் இது இலங்கையின் கண்ணியமான பெருவாரியான மக்களின் வாழ்க்கை நெறிமுறைகளை இகழ்வதாக அமையும். இதுபோன்ற சம்பவங்கள் தொடர்பாக தொடர்ச்சியான உண்மைகளைக் கண்டறியும் செயற்பாடுகள் அவசியம். ஏற்கனவே கண்டறியப்பட்ட வற்றுக்கு நடவடிக்கை வேண்டும்.

இதனை எதிர்மறையாக நோக்கத் தேவையில்லை. இலங்கையின் வாழ்வை செம்மையுற வைப்பதற்கு ஓயாத விழிப்புணர்வு வேண்டும். வெறுமனே ஒரு சில மிருகங்களின் செயற்பாடென்று ஏடுத்து விட முடியாது. நிறுவன ரீதியான காட்டுமிராண்டி சுதந்திரத்தில் இருந்தே இது நிகழ்ந்திருக்கிறது.

மனிதர்கள் என்ற அடையாளத்தையும் தார்மீக விழுமியங்களையும் அறங் களையும் அழிப்பது மனித குலவிரோதிகள் செய்யக் கூடிய காரியங்களே. இங்கு இறைமை என்ற சொல் அர்த்தம் இழந்து போகிறது. இறையாண்மை என்பது மக்களின் நம்பிக்கைகள், நல்வாழ்வு, பாதுகாப்பு என்பவற்றுடன் தொடர்புபட்டது.

இது ஒரு பிற சமூகம் பற்றிய குரூரமான வெறுப்பின் வெளிப்பாடு. மானிட அறத்தின் பாற்பட்ட பகுத்தறிவு பொதுப் புத்தி என்ன சொல்கிறது என்பதுதான் முக்கியம். உலகவரலாறு வரட்டு எழுத் துருக்களில் இருந்து வரவில்லை. இரத்தமும் சகதியுமான மனித வாழ்விலிருந்து வருவது.

இசைப்பிரியாவிற்கு நேர்ந்த்து போன்ற அவலங் களை புலிகள் நிகழ்த்த வில்லை என்றும் இல்லை. தெரிந்ததும் தெரியாததுமான சம்பவங்கள் கணக்கற்றவை. இரத்தம் தோய்ந்தவை. எல்லாம் ஒளிப்படங்களாக வரவில்லை. சொந்த சமூகம் மாத்திரமல்ல சக சமூகங் களைச் சேர்ந்த பெண்கள் குழந்தைகளும் குரூரமாக கொல்லப்பட்டார்கள்.

அவர்கள் எந்த உலக சட்டத்திட்டங்களுக்கும் கட்டுப் பட்டவர்கள் அல்ல என்ற வாதமும் சரியானதல்ல. இசைப்பிரியாவிற்கு நிகழ்ந்த கொடூரத்திற்கு மேலாதிக்க வெறி அதிகார அகங்காரம் பிரதான காரணமாக இருந்தது.

இது போன்ற இதற்கு நிகரான நிலை மறுதரப்பிலும் காணப்பட்டது. மாற்று இயக்கங்களில் சம்பந்தப்பட்ட, மாற்றுக் கருத்துடைய பெண்களை, சொந்தமெனச் சொல்லும் மக்களை என்ன செய்தார்கள் என்பதும் அதிர்ச்சி ஏற்படுத்துவது.

இங்கு ஒப்பீடுசெய்ய வரவில்லை. காட்டுமிராண்டித் தனங்கள் எல்லாப் பக்கங்களி லும் கோலோச்சியிருக்கிறது.

நாளாந்தம் எவ்வளவு குரூர மான படுகொலைகள் நிகழ்த் தப்பட்டன. முள்ளிவாய்க்கால் வரை ஒரு மக்கள் கூட்டத்தை பலாத்காரமாக அழைத்துச் சென்றவர்களும் இதற்கு பொறுப்பு சொல்லவேண்டும்.

சமூகப் பொறுப்புணர்ச்சி, தமது உறுப்பினர்கள் - மக்கள் மீது கருணையும் அன்பும் உள்ளவர்கள் இத்தகைய காரியத்தைச் செய்யமாட்டார் கள். இசைப்பிரியாவின் இறுதி நாள் அவலமும், கையறு நிலையும், கல்வாரிப்பயணமும் முள்ளிவாய்கால்வரை மக்களை வழிநடத்தியவர்களின் காட்டிக்கொடுப்புமாகும்.

சமூகப்பொறுப்புணர்வுள்ளவர்கள் மக்கள் மீது அக்கறையுள்ள வர்கள் இந்த காரியத்தை செய்ய மாட்டார்கள். ஒரு சிறிய இடத்தில் மக்கள் அடைபட நிர்ப்பந்தித்தவர்களும் பல்லாயிரக்கணக்கான மக்களின், போராட்டக்காரர் களின் மரணங்களுக்குப் பதில் சொல்லவேண்டியவர்கள்.

இசைப்பிரியாவினதும், கடந்த 30 வருடங்களாக குரூரமாகவும் அவலமாகவும் கொல்லப்பட்ட பலநூற்றுக் கணக்கான பெண்களினதும் மரணங்களுக்கு அரசு மாத்திரமல்ல, ஜனநாயக விரோத தமிழ் பாசிசத்திற்கு ஆதரவழித்து நின்ற சமூகமும் பதில் சொல்லவேண்டும்.

1971 ஆம் கிளர்ச்சி தோற் கடிக் கப்படும் போது மனம்பெரி என்ற கதிர்காமத்து அழகுராணிக்கும் குரூர மரணம் விளைவிக்கப்பட்டது. ஆயுதம்தாங்கிய அதிகாரம் காட்டு மிராண்டிநிலைக்கு மனி தனை பல சந்தர்ப்பங்களில் அழைத்துச் சென்றிருக்கிறது.

1994 இல் ருவண்டாவின் பல்லாயிரக்கணக்கான டுட்சி இனப்பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கும் படு கொலைக்கும் உள்ளானார்கள்.

ஆப்கானில் தலிபான்கள் பெண்களுக்கெதிரான பாசிச வன்முறைகளைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள் யாழ்ப்பாணத்தில் சில நாட்களுக்கு முன் லோகராணி என்ற பெண் பாலியல் பலாத்கார படுகொலைக்கு ஆளாக்கப்பட்டு காங்கேசன்துறை வீதி நாச்சிமார் அம்மன் எனும் பெண்தெய்வத்தின் தேர் முட்டியில் சடலமாக வீசப்பட்டு கிடந்ததெல்லாம் பெரிய அதிர்ச்சிகளை ஏற்படுத்தாத அன்றாடச் செய்தியாகியது. இத்தகைய மனோநிலை ஆபத்தானது.

எங்கிருந்து எந்த மனநிலையிலிருந்து இந்த வன்முறைகள் எழுகின்றன? இத்தகைய வன்முறைகளுக்கு நாம் பொறுப்பில்லையா என்பதைச் சிந்திக்கவேண்டும். இந்த குரூரம் யுத்தத்திற்கு பின்னரும் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழ்ந்துகொண்டுதான் இருக்கிறது.

நாம் எம்மை. சுயபரி சோதனைக் குட்படுத்துவது முதன்மையானது. எம்மை சுயவிமரிசனத்திற்குள்ளாக்க வேண்டும். உண்மையை நீதி நியாயத்தை தரிசிப்பதற்கு இது மிக மிக அவசியம். நாடு முழுமையாக ஜனநாயக மயப்படுத்தப்பட வேண்டிய தருணமிது. கண்ணியமான சுயமரியாதையுடனான வாழ்வொன்றை கட்டியெழுப்ப முனைவோம்.

## குரங்கிலிருந்து மீண்டும் மனிதன் தோன்ற முடியுமா?

பூமியில் மனிதர்கள் ஒருக்கால் அழிந்துவிட்டால், மீண்டும் மனிதக்குரங்குகளில் இருந்து மனிதன் தோன்ற வாய்ப்பு இருக்கிறதா?

இந்த இடத்தில் ஒரு விஷயத்தை முதலில் நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். பரவலாக நம்பப்படுவது, கூறப்படுவதைப் போல நாம் மனிதக் குரங்கில் இருந்து பரிணாம வளர்ச்சி அடையவில்லை.

நமக்கும், மனிதக்குரங்குகளுக்கும் பொதுவான ஒரு மூதாதை 1 கோடி ஆண்டுக்கு முன்னால் இருந்திருக்கக் கூடும் என்பது விஞ்ஞானிகளின் கணிப்பு. அந்த பொது மூதாதையை Pan Prior என்று அழைக்கிறார்கள். அல்லது மனிதன், குரங்கு பொது மூதாதை என்கிறார்கள். அறிவியல் ரீதியில் நாம் இன்னமும் மனிதர்களாக வகைப்படுத்தப்படவில்லை. நாம் மனிதக்குரங்குகள்தான். அதாவது, சமூகத்தில் வாழும் மனிதக் குரங்குகள்.

அதேநேரம் நமது பொது மூதாதை இப்போது வாழ்கிறது என்று வைத்துக் கொண்டாலும்கூட, பரிணாம வளர்ச்சி அல்லது படிநிலை வளர்ச்சி என்பது தொடர் பற்ற மரபணுக் கலப்பு (Gene mutation), சுற்றுச்சூழல் நெருக்கடிகளால் (Environmental pressures) உருவா கும் இயற்கை தேர்வு (Natural selection) ஆகியவற்றின் அடிப்படையிலேயே நிகழ முடியும். இவற்றை வைத்துப் பார்த்தால், மீண்டும் மனித இனம் தான் கடந்து வந்த பாதையைத் தொடுவதற்கு மிகக் குறைந்தபட்ச வாய்ப்புகள்கூட இல்லை.

- நன்றி: தி இந்து



## படமாகும் பிரபலங்கள்!

இங்கிலாந்து அரச பரம்பரையைச் சேர்ந்த இளவரசி டயானா பற்றி 'Princess Diana' என்ற பெயரில் ஒரு படம் தயாரிக்கப்பட்டு சமீபத்தில் வெளியானது. இப்படத்துக்கு போதிய வரவேற்பில்லா மல் போய்விட்டது. ஏற்கெனவே இளவரசி டயானா குறித்து நூல் எழுதியவருடன் ஆலோசனை கலக்காததின் விளைவு இது என்கிறார்கள்.

ஆக நபர் பிரபலம் என்பதற்காக, எடுக்கப்படும் படம் நன்றாக ஓட வேண்டும் என எதிர்பார்க்க முடியாது. இருந்தாலும் சுய சரிதை சார்ந்த படங்கள் தயாரிப்பது ஆங்கிலப் படவுலகில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

மண்டேலாவின் முன்னாள் மனைவி வின்னி மண்டேலாவின் வாழ்க்கை படமாகிறது. இதில் ஜெனிபர் ஹட்சன், டெரான்ஸ் பஹாவர்ட் ஆகியோர் நடிக்கின்றனர். படம். எடுபடுமா? என்று கூற இயலாது என்கின்றனர் பட வல்லுநர்கள்!

பிரபல நடிகர் க்ரேஸ் கெல்லியின் வாழ்க்கையை மையமாக வைத்து “Grace of Manaco” என்ற படம் தயாரிப்பில் உள்ளது. இதில் நிக்கோல் கிட்மன் மற்றும் டிம்ரோத் ஆகியோர் நடித்துள்ளனர்.

“ரஷ்” (சுரளா) படம் ஏற்கெனவே வெளியாகியுள் ளது. இரண்டு கார்ப் பந்தய வீரர்களான ஜேம்ஸ் ஹன்ட் மற்றும் நிகிலவுடா இடையே நடந்த பனிப் போரை (1976 காலத்தில்) வர்ணிக்கும் கதையாகும். இதில் கிரிஸ் ஹெம்ஸ்வொர்த் மற்றும் டானியல் ப்ருகி நடித்துள்ளனர்.

பிரபல கம்ப்யூட்டர் விற்பன்னர் ஸ்டீவ் ஜொப்ஸ் மக்களிடையே மிகவும் பிரபலம். ஆக அவருடைய கதையும் “Jobs” (2013) என்ற பெயரில் வெளியாகியுள்ளது. இதில் அஸ்டின் கட்சர் மற்றும் டெர்மட் முல்ரோனி ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். படம் பெரிதாக ஓடவில்லை.


தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா பற்றி Mandela: Long walk to Freedom என்ற பெயரில் ஒரு படம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இது 2014இல் வெளிவரலாம்.

பிரபலங்களின் கதையைப் படமாக எடுத்தால் ஓடிவிடும் எனக் கூற இயலாத நிலையில் அவற்றில் கால் பதிக்க பல இயக்குநர்கள் பயப்படுவதுதான் உண்மை.



# சம்பந்தனின் இரட்டை இராஜதந்திரம்?

– செல்வரட்னம் சிறிதரன் கட்டுரையிலிருந்து.



தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் செயற்பாடுகளில் முக்கியமான முடிவுகளை அதன் தலைவராக இருக்கின்ற சம்பந்தனே மேற்கொள்கின்றார். அந்த முடிவுகளை அவர் எப்படி மேற்கொள்கின்றார், எத்தகைய இராஜதந்திரத்தைப் பயன்படுத்துகின்றார் என்பது கூட்டமைப்பில் உள்ள ஏனைய கட்சித் தலைவர்கள் எவருக்கும் தெரியாது. இதுதான், யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில், கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வருகின்றது.

முக்கியமான சந்தர்ப்பங்களில் என்ன செய்வதென்பதுபற்றி கூட்டமைப்பு கட்சிகளின் தலைவர்கள் கூடிப் பேசுவார்கள். அடிக்கடி கலந்துரையாடுவதாகக் கூறுவார்கள்.

இத்தகைய கூட்டங்கள் சந்திப்புக்களில் கட்சித் தலைவர்கள் சொல்வதை சம்பந்தனும், தமிழரசுக் கட்சியின் செயலாளருமாகிய மாவை சேனாதிராஜாவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் கேட்டுக்கொள்வார்கள். ஆனால், முடிவுகள் கட்சித்தலைவர்களின் ஆலோசனைகளுக்கு அமைவானதாக இருக்க மாட்டாது. சம்பந்தனின் முடிவுக்கு அமைவாக, ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஒரு தீர்மானத்திற்கு அமைவானதாகவே இருக்கும். ஆயினும், இறுதியில் கூட்டமைப்பின் ஏகமன தான தீர்மானம் என்று கூட்டமைப்பில் இருந்து அறிக்கைகள் வரும். இப்படித்தான், தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் இராஜதந்திர நகர்வுகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த 2009 ஆம் ஆண்டு, மே மாதம் 19 ஆம் திகதி வரையிலான இராணுவ மயம் சார்ந்த அரசியல் சூழலில், விடுதலைப்புலிகளின் அரசியல் நிழலிலேயே, தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அரசியலில் ஈடுபட்டிருந்தது. எனினும், யுத்தம் மிக மோசமாக நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அடுத்த கட்ட அரசியல் நகர்வு குறித்து இராஜதந்திர ரீதியிலான சிந்தனையை, எதிர்பார்ப்புக்களை அது கொண்டிருக்கவில்லை.

வன்னியில் கடுமையான யுத்த மோதல்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது, தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர், உணர்வு ரீதியான அரசியல் சுழலில் சிக்கியிருந்தார்களே தவிர, இராஜதந்திர ரீதியிலான அரசியலைப் பற்றி சிந்தித்திருந்ததாகத் தெரியவில்லை. தீவிரமான சண்டைகளின்போது, கிளிநொச்சி நகரம் அரச படைகளிடம் வீழ்ச்சியடைந்தபோதே, விடுதலைப்புலிகளின் வீழ்ச்சிக்கான அறிகுறி ஆரம்பமாகியிருந்தது. இருந்தும், புலம்பெயர் அரசியல் சக்திகளும் சரி, கூட்டமைப்பும் சரி, விடுதலைப்புலிகள் இல்லாத ஓர் அரசியல் நிலைமை குறித்து, கனவிலும்கூட எண்ணியிருக்கவில்லை.

மாகாண சபையில் வெற்றி பெற்றதன் பின்னர், இராஜதந்திரப் போர் இனிமேல்தான் ஆரம்பிக்கப் போகின்றது என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூட்டமைப்பின் குரலாகக் கூறினார்.

இல்லாத ஒன்றுக்குள் இருந்து, இழந்துபோன உரிமைகளைப் பெறுவதற்குத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு முனைப்பு காட்டியிருப்பதையே, கூட்டமைப்பின் மாகாண சபை மூலமாக மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள இராஜதந்திரப் போர் காட்டுகின்றது. மாகாண சபை முறைமை வந்தபோது, தமிழ் மக்கள் கோருபவை எதுவும் அதில் இல்லையென்று கூறி, தமிழ்த் தலைவர்களினால் அது ஒதுக்கப்பட்டிருந்தது.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் ஒதுக்கித் தள்ளப்பட்ட மாகாண சபையின் ஊடாக இப்போது அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கலை அடைய முடியும் என்பதுதான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இராஜதந்திரம்.

வடமாகாண முதலமைச்சர் நல்லெண்ண சமிக்ஞைகளைக் காட்டி, பங்குபற்றல் அரசியல் போக்கில் அரசாங்கத்துடன், இணைந்து செல்ல வேண்டும். அதேநேரம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன், எதிர்ப்பரசியலைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்ற இரட்டைப் போக்கின் மற்றுமொரு பரிமாணம் தோன்றியிருப்பதையே இப்போது காண முடிகின்றது. ஒன்றுக்கொன்று முரண்பட்ட இந்த இராஜதந்திரத்திற்குப் பெயர்தான் சம்பந்தனின் இராஜதந்திரமோ...? இதுதான் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வடமாகாண சபையில் அமோக வெற்றியைத் தொடர்ந்து வருகின்ற இராஜதந்திரப் போரின் ஆரம்பமோ..?

தமிழ் மக்கள் வாழ்வினைச் செப்பனிட வடமாகாண சபையினால் முடியும். வடமாகாண சபை உறுப்பினர்கள் வரலாறு எமக்களித்த அழிவுகளையும் அனுபவங்களையும் அறிவாற்றலாக்கி மனத்திண்மையுடன் வினைத்தூய்மைமிக்க சேவையாற்ற முன்வரவேண்டும். மதிநுட்பம் நிறைந்த நல்லெண்ண செயல்திட்டங்களை முன்னெடுத்து எமது மக்கள் வாழ்வில் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஏற்படுத்த வேண்டும்.

எமது மக்களின் வாழ்நிலையை ஓரிரு படிகளேனும் உயர்த்தும் உயர்ந்த உள்ளம் உங்களிடம் இருக்கிறது. அதனைத் தட்டிஎழுப்பி உங்கள் சேவைகளின் சேவகனாக உழைப்பின் உரிமையாளனாக நெஞ்சில் முன்னிலையில் அமர்த்துங்கள். உங்கள் சொல்லும் செயலும் மக்கள் நலனைப் பிரதிபலிக்கையில் மனமகிழ்வும் பெருமையும் செல்வமும் தானே உங்களைச் சேரும்.




## வடமாகாண சபை - அமைதியான நதியினிலே ஓடம்!

- Dr. பாலா

வாழ்வின் துயரங்களால் தூண்டிற் புழுவினைப் போல் வாழ முடியும் என்ற நம்பிக்கையை படிப்படி இழந்தபடி வாடும் எமது மக்களில் பலரது வாழ்நிலையையும் மனநிலையையும் நீங்கள் அறிவீர்கள். இவர்களின் இழப்புக்கள் ஈடு செய்ய முடியாதவை. இவர்கள் அனுபவிக்கும் இன்னல்கள் இதயங்களைச் சுக்குநூறாக்கும். இடி விழுந்த மரம் போலானது பலரது வாழ்வு. நிர்க்கதியற்றுப் போய் நிதம் வாழ்வு சுட்டெரிக்க இவர்கள் வாழ்கையில் எம் நெஞ்சில் நேர்மையும் ஈர்மையும் குடிபுகாவிடில் கோடி பாவங்கள் எம்மைச் சேராதா?

வசனங்கள் வாய்க்கரிசி போடுவதில்லையென்ற உண்மை அறிவீர்கள். குடிமனைகள் இழந்தவர்க்கு குடியிருக்க இடம் வேண்டும். குழந்தைகளைத் தொலைத்தோருக்கு ஆறுதல் கூறும் அமைப்புக்கள் வேண்டும். அவ்யங்களை இழந்து அங்கவீனம் அடைந்தோரை மாற்றுவலுமிக்க சமூகமாக்க மானிட உதவிகள் வேண்டும். தனித்துவிடப்பட்டோரும் தைரியமுடன் வாழ வழி வேண்டும். பெண்களை இழிவு செய்யும் மடமையும் இன்னல்ப்படுத்தும் கேடிமையும் இல்லாதொழிக்க சட்ட சமூக ஒழுங்குகள் வேண்டும். இவர்களும் எம்மைப் போல் வாழ வேண்டுமென்ற வாஞ்சையுடன் வைராக்கியத்துடன் செயல்படின் மக்கள் வாழ்வை மேம்படுத்தும் வாயிற்கதவுகள் திறக்கும் என்பதில் ஐயமில்லை.

குற்றம்குறை கூறி விசனமடைந்து மனம் குழம்பி மக்கள் தேவை-களைப் புறக்கணித்து காலவிரயம் செய்வது பாவச்செயல். மாறுபட்ட கருத்துக்கள் மகத்தானவற்றை காணும் களமென்பதைக் கருத்தில் கொண்டு சொல்லாண்மை கொள்ளல் சிறப்பு. மக்கள் வாழ்வை மேம்படுத்தும் முனைவுகளை மழுங்கடிக்கும், தடைக்கல்லாகும் உரைகளில் உள்ளம் சிலிர்ப்பதில் என்ன பயன்?

வாடி நிற்கும் பயிர்களுக்கு நீர் இறைப்பதே எம் கடமை!

கண்ணியமிக்கதோர் கடமையினை கணப்பொழுதும் சோர்வின்றி புரிவீர்கள் என்ற எதிர்பார்ப்புகளுடனேயே மக்கள் இடர்களையும் பொருட்படுத்தாமல் திரண்டு வந்து வாக்களித்தார்கள். அவர்கள் நம்பிக்கை மறுபடியும் பொய்க்காதிருக்கட்டும்.

காற்றினிலும் மழையினிலும் கலந்தடிக்கும் புயலினும் ஒதுங்க இடம் தேடும் மக்களை வடமாகாணசபை எனும் ஓடத்தின் மாலுமிகள் தம் வினைத்திறத்தால் வாழ்நிலைகளின் மேம்படிகளில் உயர்த்திச் செல்ல வேண்டும்.

வடமாகாண சபையினை நல்லதோர் வீணையாக நலம்கெட புழுதியில் எறியாமல் பாதுகாப்பீர்!



# துன்பம் போன்ற இன்பம்!

19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஆறுமுக நாவலர் அவர்களும், நமச்சிவாய முதலியார் அவர்களும் தமிழில் தக்க உரை நடையில்லை என்ற பெருங்குறையை உணர்ந்து பிழையற பால பாடங்களை எழுதினார்கள். இது ஒரு சிறந்த தொண்டாகும். உ.வே.சாமிநாதையர், மு.இராகவையங்கார், திரு.வி.க. - இவர்கள் கையில் உரைநடை தக்க கருவியாக அமைந்திருப்பதை உணர்கிறோம். உதாரணமாக, ஐயரவர்கள் திருவாவடுதுறை மடத்தை விட்டுத் தாம் பிரிகின்ற சித்திரத்தை நமக்கு உணர்ச்சி ததும்பும் சொற்கள் கொண்டு தந்திருக்கிறார்.


“நல்ல வேளை வந்துவிட்டது. நான் விடை பெற்றுக் கொண்டேன். என் கால்கள் மெல்ல நடந்தன. உடம்பு நகர்ந்ததேயன்றி என் மனம் அங்கேயே கிடந்தது. வரும்போது உக்கிராண வாசலில் என்னையறியாமலே நின்றேன். நான் எந்தச் சமயத்தில் எந்தப் பண்டம் வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளும் இடமாகிய அதைப் பிரிய மனம் வரவில்லை. வேறு எங்கே அத்தகைய இடம் கிடைக்கப் போகிறது! மேலே நடந்தேன். அங்கங்கே உள்ள தீபஸ்தம்பங்களைப் பார்த்தேன். அவற்றின் அடியில் அமைதியாய் அமர்ந்து எவ்வளவு நாட்கள் படித்திருக்கிறேன். கவலை ஒன்றும் இல்லாமல் புத்தகத்திலேயே கண்ணும் கருத்துமாய் ஒன்றிப் போய் வாசிக்க உதவிய அவற்றை விட்டுச் செல்லப் போகிறேனென்ற நினைப்போடு தூக்கமும் வந்தது. கொலு மண்டபத்துக்கு வந்தேன். அங்கே சகபாடிகளுடன் படித்த இடங்களைப் பார்த்து மனம் குழம்பி நின்றேன். பல இரவுகள் அந்த இடத்தில் கணக்குச் சுருளைகளைத் தலைக்கு அணையாக வைத்துக் கொண்டு மெய்மறந்து தூங்கியிருக்கிறேன். அந்தச் சுருளைகளைப் பார்த்தேன். அங்கு உள்ள ஒவ்வொரு பொருளும் உயிர் கொண்டு என்னிடம் பேசுவதுபோல் இருந்தது. அவற்றினிடம் நான் விடை பெற்றேன். “அவை ஜடப் பொருள் அல்லவா? அவற்றின் மேல் அவ்வளவு பற்றிருப்பது பைத்தியக்காரத்தனம் அல்லவா?” என்று தோன்றும். எனக்கு உலகமெல்லாம் திருவாவடுதுறை மடத்திலே இருந்தது. அங்குள்ள பொருள்களைப் பிரியும்போது உலகத்தையே பிரிவது போன்ற உணர்ச்சிதான் எனக்கு ஏற்பட்டது”

தமிழ் என்ற சொல்லிற்கு இன்பம் என்ற பொருளைத் தருவார்கள். இத்தகைய சோகங்கலந்த இன்பத்தை மேற்கண்ட வரிகள் தோறும் நாம் உணர்கின்றோம்.

(‘தமிழில் உரைநடை’ என்ற கட்டுரையில் ரா.ஸ்ரீ தேசிகன்)





ஹாட்லிக்கல்லூரியின் அதிபர் தெய்வேந்திரராஜா லெப்டினன் கேணலாக பதவி உயர்வு பெற்றமைக்கான வரவேற்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது... (01)





# நிகழ்வுகளின் பதிவுகள்....


சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் நுணாவில் பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது..... (11)




கிளிநொச்சி மாவட்டத்தில் கடமைபுரியும் ஐக்கிய நாடுகளின் ( UNSTA FU) நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் ஐக்கிய நாடுகள் தினத்தை முன்னிட்டு யாழ். கண்டி வீதியில் வீதிப்போக்குவரத்து விழிப்புணர்வை நடத்தியபோது.... (90)




இளவாலை பகுதி இளைஞர்களினால் சமூகத்தில் முதல் அடி பதிப்பு என்ற செயற்திட்டத்தில் கவனிப்பாரற்றிருந்த இளவாலை சித்திரமேழி சந்தியிலுள்ள பேருந்து தரிப்பிடம் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டபோது.... (48)




கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலையில் நடைபெற்ற கலைவிழாவின் பதிவுகள்... (137)



முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் சுதேச வைத்தியத்துறை கண்காட்சி முல்லைத்தீவு சிலாவத்தை தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்ற போது..(125)



வரலாற்றுப் புகழ் மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற சூரசங்ஷார நிகழ்வு.... (01)

# ஊடகவியலாளர்களுடன் அரச அதிபர் சந்திப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஊடகவியலாளர்களுக்கும் மாவட்ட அரச அதிபருக்கும் இடையிலான ஒன்று கூடல் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்றதுடன் இதில் இம்மாவட்டத்திலுள்ள 10 இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது அரச அதிபா ஏனைய மாவட்டங்களிலுள்ள மாவட்ட செயலகங்களில் ஊடகப் பிரிவு என்னும் தனியான பகுதி உள்ள நிலையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலும் விரைவில் இப்பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும் இம்மாவட்டத்திலுள்ள ஊடகவியலாளர்கள் இம்மாவட்டத்தின் செய்திகளை ஊடகங்களுக்கு வழங்குவது தொடர்பில் முனைப்புடன் செயற்படவேண்டும்.

தற்போது இம்மாவட்டத்தின் செய்திகள் ஊடகங்களில் வெளிவருவது குறைவாகக் காணப்படுகின்றது. இந்நிலை நீங்கவேண்டும் எனத் தெரிவித்ததுடன் முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர்களுக்கென சங்கம் ஒன்றை அமைப்பது குறித்து ஆராய்வதாகவும் அவர் இதன் போது தெரிவித்தார். (125)

# மாதாந்த உதவிப்பணம்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களின் இம்மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் அந்தந்த தபாலகங்களுக்கு பிரதேச செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (104)

# அனலைதீவு பொதுநூலகத்தின் வாசிப்புமாதப் போட்டி முடிவுகள்

தேசியவாசிப்புமாதத்தைமுன்னிட்டு ஊர்காவற்றுறைபிரதேசசபையின் அனலைதீவு பொது நூலகத்தால் பாடசாலை மாணவர்கள் மற்றும் வாசகர்களிடையே நடாத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் வெளிவந்துள்ளன.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு

**பாவோதல் போட்டி**

கு.பவித்திரா (யா/அனலைதீவு தெற்குஅ.த.க. பாடசாலை), செ.திஷாளினி (யா/அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலை), தி.அபிசனா (யா/அனலைதீவு தெற்குஅ.த.க.பாடசாலை)

**கவிநயம்**

த.பிரியா (யா/அனலைதீவு வடலூர் அ.த.க. பாடசாலை), சா.ஷானுஷா (யா/அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலை), அ.வேனுஷா (யா/அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலை)

**சஞ்சிகைஆக்கம்**

உ.திஷாளன் (யா/அனலைதீவு தெற்குஅ.த.க. பாடசாலை), கு.ரட்சிகா (யா/அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை), ஜெ.ராகுஷா (யா/அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலை)

**கவிதைப்போட்டி**

உ.துஷ்யந்தன் (யா/அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயம்), தே.துஷியா (யா/அனலைதீவு.சதாசிவமகாவித்தியாலயம்), க.அபிராமி (யா/அனலைதீவு சதாசிவமகாவித்தியாலயம்)

**கட்டுரைப்போட்டி**

உ.யட்சணன் (யா/அனலைதீவு சதாசிவமகாவித்தியாலயம்), ர.நிதர்ஷன் (யா/அனலைதீவு சதாசிவமகாவித்தியாலயம்), சா.சானுஜா (யா/அனலைதீவு சதாசிவமகாவித்தியாலயம்)

**பொதுஅறிவுப்போட்டி**

ம.விஜயகுமார்(யா/அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயம்), சி.சிவானுஜன் (யா/அனலைதீவு சதாசிவமகாவித்தியாலயம்), க.நிவேதினி (யா/அனலைதீவு சதாசிவமகாவித்தியாலயம்).

# நீதிமன்றச் செய்திகள்

(முல்லைத்தீவு)

சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரம் இல்லாமல் பெருமளவு டீசல் மற்றும் பெற்றோல் விற்ற இரு நபர்களுக்கு எதிராக மாங்குளம் பொலிஸார் தாக்கல் செய்த வழக்கில் இருவருக்கும் தலா 30000 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

சட்டவிரோத டீசல், பெற்றோலை அழித்துவிடுமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

□ □ □

ஒட்டுசுட்டான் மாங்குளம் பகுதிகளில் அத்துமிறி காட்டினுள் புகுந்து ஒரு இலட்சம் பெறுமதியான மரங்களை வெட்டிய நபர்களுக்கு 120000 ரூபா தண்டப்பணம் விதித்ததுடன் மரங்களை பறி முதல் செய்து மரக்கூட்டுத்தாபனத்திற்கு பாரப்படுத்துமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

□ □ □

ஒட்டுசுட்டான், முள்ளியவளை பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட மூவருக்கு 110000ரூபா தண்டப்பணம் விதித்ததுடன் மணலை பறிமுதல் செய்து அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு பாரப்படுத்துமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்

மேலும் மணல் ஏற்றப்பயன்பட்ட வாகனங்கள் தொடர்பான விசாரணை எதிர்வரும் 30.01.2014 நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

□ □ □

முல்லைத்தீவு புளியமுனை பகுதியில் தனது 4,5,9 வயதுக் குழந்தைகளை பராமரிக்காமல் குடித்து விட்டு வந்து குழந்தையையும், மனைவியையும் கடுமையாகத் தாக்கி காயப்படுத்துவதாக குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட நபர் ஒருவரை 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

தேசிய சிறுவர் அதிகாரசபையிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்தே சந்தேகநபர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்..

□ □ □

புதுக்குடியிருப்பு பகுதியில் 150000 ரூபா பெறுமதியான மாடுகளை இறைச்சிக்காக திருடிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட நபர் ஒருவரை 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

தொடர்ச்சியாக இப்பகுதியில் மாடுகள் காணாமற் போவதாக கொடுக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்தே மேற்படி சந்தேகநபர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். (170)

# வேலை வாய்ப்புச் செய்திகள்

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் வீடியோ கடைக்கு பெண் வேலையாள் தேவை. தொடர்பு:- 0778225961

---

17-50 வயதுக்கிடைப்பட்ட ஆண் - பெண் இருபாலாருக்கும் வேலை வாய்ப்பு உண்டு. கல்வியறிவு அவசியமில்லை 18,000 தொடக்கம் 32,000 வரை சம்பளத்துடன் கூடிய நிரந்தர வேலை வாய்ப்பு கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம், கோடியல், டயர் கிளவுஸ், புத்தம், தண்ணீர் போத்தல், பிளாஸ்ரிக், கோழிஇறைச்சி, Keels, காமென்ட், தேயிலை போன்றவற்றுக்கு தரம் பிரித்தல், பொதியிடல் உற்பத்தி, களஞ்சிய பிரிவுக்கு வேலைக்கு ஆட்கள் தேவை. உணவு, தங்குமிடம் குறைந்த விலையில் வழங்கப்படும், நண்பர்கள், குழு தம்பதியினர் சேர்ந்து ஒரே தொழிற்சாலையில் வேலை செய்யலாம். தொடர்புகளுக்கு:- 0778430179. 0777117661.

---

தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை. (JSO/LSO/SSO/OIC) 18-55 வயதுக்கிடைப்பட்ட ஆண்-பெண் தேவை (தனியார் பாடசாலை, வங்கி, தனியார் நிறுவனம், தொழிற்சாலைகள், தொடர் மாடிவீடுகள்) கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் வேலைவாய்ப்பு 18,000 தொடக்கம் 35,000வரை. மற்றும் கொழும்பு உட்பாதைகளில் வாகனம் ஓட்டத் தெரிந்த மெண்சாரதி கனரக சாரதி, சாரதி உதவியாளர்களும் தேவை. தொழில் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும். தொடர்புக்கு 0775561883.

---

கட்டடத் துறையில் தேர்ச்சி பெற்ற கொழும்பு, யாழ்ப்பாணம், விசுவமடு, நீர் கொழும்பு கம்பஹா, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களில் மேசன், தச்சு, பெயின்டர், பிளம்பர், இலற்றிசன், கம்பிபாஸ் போன்ற வேலை செய்யக் கூடியவர்களுக்கு 1200 இற்கு மேல் கை உதவியாளர்களுக்கு 900 மேல் சம்பளம் தொடர்புக்கு 0775561883.

---

வடமாகாணத்தில் உடனடி வேலைவாய்ப்பு (Managemert Trainess - 2014) வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படவுள்ள USA California வை தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்கும் நிறுவனத்திற்கு முகாமைத்துவ பயிற்சிக்கு ஆட்கள் தேவை.(Managemert Trainess - 2014) சந்தைப் படுத்தல் துறையில் அனுபவமுள்ள, ஆர்வமுள்ள பயிற்சி பெற விரும்புபவர்கள் மற்றும் வங்கிகளில் (Bank) பயிற்சி பெற்ற 18-35 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். தொடர்புக்கு :- 0777274795, 0215686466.

---

யாழ். தீவுப்பகுதியிலுள்ள பிரபல்யமான ஆலயம் ஒன்றுக்கு நிர்வாகம் தெரிந்த கணக்குப் பிள்ளை ஒருவர் தேவை. ஆலயப்பணிகளில் ஆர்வமுள்ளவர்கள் விரும்பப்படுவர். தொடர்புக்கு 0777887830, 0774155672.

---

யாழ்ப்பாணம், மகாத்மாகாந்தி வீதியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கடைத் தொகுதியினுள் அமைந்திருக்கும் Cofee Shop இல் வேலை செய்யக்கூடிய ஆண்,பெண் இருபாலாரும் தேவை. முன் அனுபவம் தேவையில்லை. கல்வி தகைமை கவனத்தில்கொள்ளப்படமாட்டாது (நேர்முகப் பரீட்சை இன்று பிற்பகல் 1-5 மணிவரை தொடர்புக்கு 0777712 255.

---

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் அமைந்துள்ள தொழில் கல்வி நிலையங்களிற்கு கீழ் பின்வரும் பதவிகளுக்கு அனுபவம் மிக்க போதனாசிரியர்கள் தேவை. English, Electrician, Computer Application Assistant ஆர்வம் ,உள்ளவர்கள் தங்கள் தொடர்பு இலக்கத்துடன் கூடிய சுயவிபரக்கோவையை இம்மாதம் 17ஆம் திகதிக்கு முன்னர் மின் அஞ்சல் செய்யவும் ilead.colombo@gmail.com

---

யாழ்ப்பாணத்தில் வெகு விரைவில் திறக்கப்படவுள்ள சிக்னேஜர் (Signature) ஆடவர் உடை காட்சியறைக்கு விற்பனை உதவியாளர்கள் மற்றும் காசாளர் (ஆண்,பெண் இருபாலாரும் தேவை. G.C.E.(o/L) சித்தியுடன் ஆங்கிலம் ஓரளவு பேசக்கூடியவர்களாக இருக்க வேண்டும். விண்ணப்பங்களை மின்னஞ்சல் மூலம் அனுப்பவும் Careers@hameedia.lk

# பிரிட்டிஷ் பிரதமரின் யாழ்.விஜயம் ஏற்பாடுகள் அனைத்தும் துரிதம்



(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ் பிரதமரின் யாழ். விஜயத்துக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இது தொடர்பாக யாழ்.செயலகம் சில முன் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

விலி.வடக்கு மக்கள் தங்கியிருக்கும் நலன்புரிநிலையங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்புக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல்முறையாக வருகை தரும் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன், வலி. வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள நலன்புரி நிலையத்துக்கும் செல்லவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் இடம்பெறும் பொதுநலவாய அரசுத் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக வருகை தரும் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் வடக்கு மாகாணத்துக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

வெள்ளிக்கிழமை நண்பகல் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் அவர் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதுடன், வலி. வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள நலன்புரி நிலையத்துக்கும் செல்லவுள்ளார்.

அங்கு கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக இடம்பெயர்ந்து வாழ்ந்துவரும் மக்களை நேரில் சந்தித்து அவர்களின் குறைநிறைகளைக் கேட்டறிவார்.

வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் இதுவரை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படாத நிலை இன்னமும் நீடித்துவருகிறது.

# மனித உரிமை விவகாரம் தொழிற்சங்கவாதிகளுக்கு விளக்கம்

(கொழும்பு)

மனித உரிமைகள் தொடர்பில் தொழிற்சங்க பிரதிநிதிகளை தெளிவுபடுத்துவதற்கான விரிவான திட்டமொன்றை ஆரம்பித்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சேவை வழங்குனர்களுக்கும், ஊழியர்களுக்கும் இடையிலான பிரச்சினைகளின் போது மனித உரிமைகள் மீறப்படுகின்றமை தொடர்பில் இதன்போது விளக்கமளிக்கப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் சட்டப் பிரிவு செயலாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இதனைத் தவிர மனித உரிமைகள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் செயற்பட வேண்டிய விதம் தொடர்பில் ஊழியர்களுக்கும் தெளிவூட்டல்கள் வழங்கப்படவுள்ளன.

மாவட்ட மட்டத்தில் இதற்கான ஒழுங்குகளை செய்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## தரவரிசையில் வர்த்தக வங்கி முன்னணியில்

(யாழ்.நிருபர்)

பிஸ்னஸ் ருடே இன் 2013ஆம் ஆண்டு தரவரிசையில் இலங்கையில் அதி உயர் செயற்பாடு கொண்ட 25 பொதுக் கூட்டாண்மை நிறுவனங்களில் கொமர்ஷல் வங்கிக்கு இரண்டாவது இடம் கிடைத்துள்ளது.

இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கியான கொமர்ஷல் வங்கி கடந்த ஆண்டின் தரவரிசையில் இருந்து ஓர் இடம் முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (10)

## பரமர் சங்கமம்



'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்' எண்டது எனக்குச் சரியாப்படவில்லை. இந்தக் காலத்தில் தன்பிள்ளையை ஊட்டி வளக்குதுகளில்லை. ஊரா வீட்டுப் பிள்ளைகளையா ஊட்டி வளக்கப் போகுதுகள்.

அது ஒருகாலம் இருந்திருக்கும். இப்பெல்லாம் 'தாயும், பிள்ளையும் எண்டாலும் வாயும் வயிறும் வேறை' என்பது போல் முதல் தன் வயித்தைத்தான் பாக்குங்கள். அந்தளவுக்கு நாட்டில விலைவாசி உயர்வு, வருவாய் இன்மையால் பரோபகாரம் இல்லாமல் ஒழி ஒழிஞ்சு தலைகீழாக மாறியுள்ள காலமெல்லே!

ஊரார் பிள்ளையர் எண்ணும் போது கண்முன்னால் படுவது படையினரின் பிரசன்னம் தான். அந்தளவுக்கு எங்கேயும், எப்போதும் அவர்களது பிரசன்னந்தான் தெரியுது. அதையெல்லாம் அகற்றச்சொல்லியே எங்களால் அனுப்பப்பட்ட பிரதிநிதிகளின் தொண்டைத் தண்ணியும் வத்திப்போச்சு.

படையினரின் பிரசன்னத்தை நீக்கினால் ஊரின் நாட்டின் பாதுகாப்புக்கு வேறையார் இருக்கினம்? அப்படி இருந்தும் இஞ்சை கொலை, களவு, அடாவடித்தனங்கள் குறைந்து விடவில்லை. வேலை வெட்டிகள் இல்லாமல் சந்திகளில் கூடி நிண்டு குடி, கூத்துப் போடுறதுகளைப் பாத்தால் அவங்கள் இல்லாததுதான் என்பதைப் பரவலாகக் கேட்கிறம்.

எங்கட பொடியள், பெரிசு எண்டெல்லாம் ஆயுதம் ஏந்தி அலைந்த இளைஞர்களைப் பார்த்துச் சொன்னம். இண்டைக்கு அவையள் சம்பாதித்துத்தந்த எச்ச சொச்சங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறம். வலி.வடக்கில் சிவனே எண்டு வாழ்ந்ததுகளைக் குளவிக் கூட்டத்தைக் கலைத்து இண்டைக்குத் தெருக்களில் அலைய வைத்ததை மறக்க முடியுமே!

இப்ப என்ன வந்து போச்சுது? படைகளில் எங்கட பொடியளும் சேந்து ரோந்து வரட்டுமே! சிங்களப் படையள் எண்டேன் பிரிச்சுப்பாப்பான்? அவங்களும் எங்கட நாட்டினர், என்றால் பிறத்தியாரே எங்கட பொடியள் தானே!

கடந்த 28ஆம் திகதி திங்கட்கிழமை வலி.வடக்குப் பிரதேசத்தில் தமிழர்களின் குடிமனைகளை படையினர் புல்டோசர்களைக் கொண்டு இடித்துத்தரை மட்டமாக்குவதாக கூட்டமைப்பின் பத்திரிகைத்துறை நாடாளுமன்ற உறுப்பினர் புரளியைக்கிளப்பி விட்டார். அது ஏற்கனவே படையினர் எல்லை போட்டு சுவீகரித்துக்கொண்ட இடங்கள். அந்தக் காணிகளுக்கு உரியவர்களுக்கும், தமிழ் அரசியல்வாதிகளுக்கும் அது சார்ந்த அறிவித்தல்கள் ஏலவே வழங்கப்பட்டிருந்ததாக படைத் தரப்பு சொல்கிறது.

அண்டைக்கு செத்த பாம்பை அடிக்கிற வேலையெல்லே இதுகள் பாத்தது? திரும்பத்திரும்ப உணர்ச்சிகளைக் கிளறிவிட்டு பிறகும், பிறகும் தமிழ் மக்களைப் பலிகொடுக்கவோ வெளிக்கிட்டிட்டுதுகள்? படையினரையும் எங்கட பெடியள் எண்டு அன்னியோன்னியம் பேணினால் இனஐக்கியம் வந்திடாதே!

காலகதியில் நமது இளைஞரும் படையுள் சேர்ந்ததால் ஐக்கிய இலங்கையில் சுபீட்சம் தோன்றாதா? இதைத்தான் முன்னோர் ஊரார் புள்ளையை ஊட்டிவளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும் என்றும் சொல்லி வைத்தனர் இல்லையே பின்னை... சொல்லுங்க பாப்பம்....

# மன்மோகனுக்கு அழைப்பு விடுக்கவில்லை மன்னார் ஆயர் தெரிவிப்பு

(மன்னார்)

பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் பங்கேற்க வேண்டுமென தான் ஒருபோதும் கோரவில்லையெனவும் மாறாக, அவர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவேண்டும்மெனவே அழைப்பு விடுத்ததாகவும் மன்னார் ஆயர் இராயப்பு யோசப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது, பொதுநலவாய மாநாட்டில் தலைவர்களின் வருகை பற்றி என்னிடம் அபிப்பிராயம் என்ன என்று கேட்டார்கள்.

அதற்கு நான் அவர்களுக்கு தெளிவாக கூறியது போர்க் காலத்திலே நடந்தேறிய மனித இன படுகொலைகள் மனித உரிமை மீறல்கள் மனிதாபிமான சட்ட மீறல்கள் இவற்றை எல்லாம் போரின் போது இலங்கை நாடு செய்து முடித்துவிட்டு நாம் போரை முன்னெடுத்தது பயங்கரவாதிகளை அழிப்பதற்காக என்று சொல்லிக்கொண்டு இருப்பதை சரியென்று ஏற்றுக்கொள்வதாக அவர்களுடைய வருகை அமையும் என்றும், அத்துடன் சர்வதேச சமூகமும் ஐ.நா.வும் இலங்கை தனது நல்லிணக்கப்பயணத்திலே அர்த்தமுடன் ஈடுபடக்கூடியதாக அமைய இன ஒழிப்பையும் மனித உரிமை மீறல்களையும் நம்பகத் தன்மையாக விசாரித்து இந்த இன ரீதியான துரோகங்களை ஏற்றுக்கொண்டு பொறுப்புகூற வேண்டும் என்பதற்கு செவிமெடுக கத்தேவையில்லை என்பதையும் இந்த செய்தியையும் கொடுத்ததாக அமையும்.

எனவே இந்திய பிரதமர் இந்த கூட்டத்திலே பங்குபற்றுவதை நான் விரும்பவில்லை. ஆனால் இந்திய பிரதமர் அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்து அங்கே இந்தியாவின் முக்கியமான ஒத்துழைப்புடன் அரங்கேற்றப்பட்ட போர்க் குற்றங்களையும் மனித உரிமை மீறல்கள் மனிதாபிமானமற்ற செயல்கள் என்பவற்றை கண்ணால் பார்த்து பாதிக்கப்பட்ட மக்கள் எழுப்பும் குரலுக்கு செவிமடுப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. அவர் அதை செய்வதற்கு யாழ்ப்பாணத்திற்கு வருகைதர வேண்டும் என்றே நான் கூறியிருந்தேன்.



ஆனால் இதற்கு மாறாக ஊடகங்களில் நான் அறிக்கையிட்டதாக பத்திரிகைகளில் காட்டப்பட்டுள்ளது. நான் இந்தியப் பிரதமர் பொதுநலவாய நாடுகளின் கூட்டத்திற்கு வர வேண்டும் என்று சொன்னதாக தீயநோக்கோடு வெளியிட்டு இருக்கிறார்கள்.

இதை நான் முற்றும் முழுமையாக நிராகரிக்கிறேன். யாழ்ப்பாணத்திற்கு வரவேண்டும் என்பதை திரிவுபடுத்தி பொதுநலவாய மாநாட்டிற்கு வர வேண்டும் என்று சொல்வது மிகவும் அப்பட்டமான பொய் என்றும் உண்மைக்கு மாறான செயல் என்று குறிப்பிட விரும்புகிறேன். என்றும் தெரிவித்துள்ளார்.

## சொற்பொழிவு

(யாழ்.நிருபர்)

பிரிட்டிஷ் கவுன்சில் நடத்தும் 21ஆம் நூற்றாண்டில் கலாசாரமும் கல்வியும் என்னும் தொனிப்பொருளிலான சொற்பொழிவு நிகழ்வு எதிர்வரும் நாளை மறுதினம் புதன்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பிரிட்டிஷ் கவுன்சிலைச் சேர்ந்த சொற்பொழிவாளர் மார்ட்டின் டேவிட்சன் இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தவுள்ளார்.

15 வயதிற்கு மேற்பட்டோர் இந்நிகழ்வில் இலவசமாக கலந்து கொள்ள முடியுமென பிரிட்டிஷ் கவுன்சில் அறிவித்துள்ளது. (10)

# போதைப்பொருள் வர்த்தக வலையமைப்பு தகர்த்து அழிக்க கூட்டுமுயற்சி

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பான இரகசிய வலையமாகத் தகர்ப்பதற்கு இரு நாட்டு அதிகாரிகளும் தீவிர நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

இந்தியாவில் இருந்து இரண்டு வாரத்திற்கு ஒரு முறை 60 இலட்சம் பெறுமதியான ஹெரோயினை நபரொருவர் இலங்கைக்கு அனுப்பி வைப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதைப் பொருள் வியாபாரம் தொடர்பில் இந்திய பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள குடு நந்த என்ற இலங்கையை சேர்ந்த போதைப் பொருள் வியாபாரி சுமார் 60 இலட்சம் பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளை இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை இலங்கைக்கு அனுப்பி வைக்கும் இரகசியமான கடத்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக இலங்கை பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு இந்தியாவில் இருந்து அனுப்பி வைக்கப்படும் போதைப் பொருளை நாட்டில் விநியோகித்து வந்த பெண்ணொருவர் உட்பட இரண்டு பேரை அண்மையில் கைது செய்துள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தியாவின் சிறையில் இருக்கும் இந்த சந்தேக நபர் சர்வதேச தொலைபேசி தொடர்புகள் மூலம் சர்வதேச போதைப் பொருள் விற்பனையாளர்களுடன் தொடர்பு கொண்டு இலங்கைக்கு ஹெரோயினை அனுப்பி வைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்.

குறித்த சந்தேக நபரின் இலங்கையில் உள்ள நெருங்கிய உறவினர்கள், கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் நீச்சல் தடாகங்களுடன் கூடிய சொகுசு ஆடம்பர வீடுகளை கொள்வனவு செய்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தியாவில் இருந்து கடத்திச் செல்லப்படும் ஹெரோயினை இலங்கையில் விநியோகித்து வரும் இரகசியமான வலையமைப்புடன் சம்பந்தப்பட்ட நபர்கள் பற்றிய தகவல்களையும் போதைப் பொருள் தடுப்பு பிரிவு கண்டறிந்துள்ளது.

## வருடாந்த பொதுக்கூட்டம்

கரவெட்டி வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதியநிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கு முன்னதாக சமாசத்தில் அங்கத்துவம் பெறாத சனசமூக நிலையங்கள் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு சமாச செயலாளர் எஸ். மகாலிங்கம் தெரிவித்துள்ளார். இப்பிரதேசத்தில் 87 சனசமூக நிலையங்கள் உள்ளபோதிலும் ஒருசில சனசமூக நிலையங்களே சமாசத்தில் பதியப்பட்டுள்ளதாகவும் ஏனைய சனசமூக நிலையங்கள் விரைவில் தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார். (10)

தமிழ்மொழியும் இலக்கியமும் I

# க.பொ.த.(சாதாரணதர) மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

# கல்வி முரசு

32 T I

Grade - 11

**01 - 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் மிகப் பொருத்தமானதுமான விடையைத் தெரிவு செய்க.**

1) "பெருந்தடங்கட் பிறை நுதலார்க்கெலாம்..." என்பதில் வந்த "நுதல்" என்பதன் பொருள்
1) வதனம் 2) தாமரை
3) தவளை 4) நெற்றி

2) "காவலரைத் தன் சேடி காட்டக் கண்டிருவர்..." என்பதில் வந்த "சேடி" என்பதன் ஒத்தசொல்
1) தோழி 2) போர்வீரன்
3) சேவகன் 4) வண்ணமகள்

3) "......கொண்டானின் துன்னிய கேளிர் பிறரில்லை...." இதில் வந்த "கேளிர்" என்பதன் ஒத்தசொல்
1) தெய்வம் 2) உறவினர்
3) பகைவர் 4) அரசன்

4) "ஊழி திரண்டதோ கங்குல்...." என்பதில் வந்த "கங்குல்" என்பதன் எதிர்ப்பதம்
1) உலகம் 2) திங்கள்
3) பகல் 4) இரவு

5) "ஒட்டக் கூத்தர் மீது குலோத்துங்கன் நம்பிக்கை கொண்டிருந்தான்" இதிலுள்ள "நம்பிக்கை" என்பதன் எதிர்ச்சொல்
1) தும்பிக்கை 2) அவநம்பிக்கை
3) நாணயம் 4) கோரிக்கை

6) "விதவைகள் ஒன்று கூடி சங்கம் அமைத்தனர்" இதில் வந்த "விதவை" என்பதன் எதிர்ப்பாற்சொல்
1) பாணன் 2) நிபுணன்
3) தனயன் 4) தபுதாரன்

7) "காளமேகம் ஒரு இசை இரசிகனாவான்" இதில் வந்த "இரசிகன்" என்ற வடசொல்லுக்குரிய தமிழ்ச்சொல்
1) சுவைஞன் 2) கலைஞன்
3) காலன் 4) பாடகன்

8) "ஒரே சமயத்தில் பதினாறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றலுடையவன்" என்ற தொடர்மொழிக்குரிய ஒரு சொல்
1) சதாவதானி 2) அட்டாவதனி
3) சோடசாவதானி 4) தசாவதானி

9) "உயிர் துறக்கும் துணிவுடன் வடதிசையை நோக்கி ஊணின்றி இருத்தல்" என்பதன் ஒரு மொழி
1) வடக்கிருத்தல் 2) மானியம்
3) ஏகபோகம் 4) பிதிர்க்கடன்

10) "ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம்" ஆகியவற்றின் தொகைச்சொல்
1) நான்கு உபாயம் 2) நான்மறை
3) நாற்பயன் 4) நாற்கவி

11) "ஐந்து பணத்துக்கு குதிரையும் வேண்டும் அது ஆறு கடக்கப் பாயவும் வேண்டும்" என்ற பழமொழியால் உணர்த்தப்படுவது
1) பணவலிமை 2) பேராசை
3) வறுமையின் செம்மை 4) முயற்சி

12) "குடிப்பது கூழ் கொப்பழிப்பது பன்னீர்" என்ற பழமொழியின் கருத்தைத் தரும் பிறிதொரு பழமொழி
1) அப்பன் அருமை மாண்டால் தெரியும்
2) ஆடு கொழுக்கிறது இடையனுக்கு இலாபம்
3) பேச்சுப் பல்லிக்கு தம்பி கால்நடை
4) இமைக் குற்றம் கண்ணுக்குத் தெரியாது

13) "மாசிலாப்பூங்குழலாள் மற்றவரைக் காணாநின்று" என்பதில் வந்த "பூங்குழலாள்" என்பது
1) இருபெயரொட்டுப் பண்புத்தொகை
2) வேற்றுமைத் தொகை
3) 2 ஆம் வேற்றுமைத்தொகை புறத்தே பிறந்த அன்மொழித்தொகை
4) வேற்றுமைத் தொடர்

14) "கண்மணி கண்வளர்ந்தாள்" இதில் வந்த கண்வளர்தல் என்ற மரபுத்தொடரின் பொருள்
1) நித்திரை செய்தல் 2) பருவமடைதல்
3) அழகுண்டாதல் 4) களைப்படைதல்

15) "கல்வியில் பெரியன் கம்பன்" என்பதில் உள்ள வேற்றுமைப் பொருள்
1) இடப்பொருள் 2) எல்லைப்பொருள்
3) ஏதுப்பொருள் 4) ஒப்புப்பொருள்

16) "இலங்கை ஒரு ஜனநாயக சோசலிச குடியரசாகும் என்பது
1) கலப்பு வாக்கியம் 2) தனி வாக்கியம்
3) வினா வாக்கியம் 4) செப்பு வாக்கியம்

17) பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயர் அல்லாதது
1) அறிவியல் 2) மருத்துவம்
3) ஆசிரியர் 4) கொடையாளி

18) பின்வருவனவற்றுள் இயல்புப் புணர்ச்சியாக அமைவது
1) நூலகம் 2) பாற்கடல்
3) பைந்தமிழ் 4) மரமேசை

19) தமிழில் மொழிக்கு முதலில் வரத்தக்க எழுத்துக்களின் எண்ணிக்கை
1) 22 2) 102
3) 216 4) 30

20) பின்வருவனவற்றுள் சுட்டொலியமைப்புடைய எழுத்துக்கள்
1) ஒ, ஆ 2) உ, ஊ
3) ஐ, ஔ 4) ஏ, ஈ

21) கீழ் உள்ளவற்றுள் புறச்சுட்டுக்கு உதாரணமாக அமையாதது
1) இவன் 2) அம்மலர்
3) இக்குதிரை 4) உப்பிள்ளை

22) சொல்லின் முதலிலும் இறுதியிலும் வரத்தக்க வினா எழுத்து
1) எ 2) ஆ
3) யா 4) ஏ

23) "தூமம் கால்வன வீரன் சுடுசரம்" என்பதில் வந்த சுடுசரம்
1) உவமைத்தொகை 2) பண்புத்தொகை
3) அன்மொழித்தொகை 4) வினைத்தொகை

24) பின்வருவனவற்றுள் பெயராகவும் வினையாகவும் வழங்காத சொல்
1) நரி 2) ஆள்
3) எண் 4) மதி

25) கீழுள்ள உவமைத்தொடர்களுள் மாறுபாடான பொருளைத் தருவது
1) பாசிமூடிய பவளத்தின் நிறம்
2) கூடை கவிழ்ந்த விளக்கின் ஒளி
3) குன்றின் மேல் வைத்த தீபம்
4) முத்துச் சிப்பியில் உள்ள முத்தின் ஒளி

26) பின்வருவனவற்றுள் திணை வழுவமைதிக்கு உதாரணமாக அமைவது
1) நாயார் வந்தார்
2) இரு கண்ணுஞ்சிவந்தது
3) இவன் ஆண்மையில்லாப் பெண்
4) தங்கள் வரவு நல்வரவாகுக

27) "மன்னன் அந்தப்புரம் புக்கான்" இதில் வந்த புக்கான் என்ற சொல்லின் காலம் உணர்த்துவது
1) இடைநிலை 2) விகுதி
3) பகுதி 4) சாரியை

28) "மன்னர் விழித்தாமரை பூத்த மண்டபம்" என்பதில் இடம்பெற்றுள்ள அணி
1) உவமை 2) உருவகம்
3) தன்மை நவிற்சி 4) தற்குறிப்பேற்றம்

29) ஐ, ஒ, ஔ ஆகிய எழுத்துக்களின் இன எழுத்துக்கள் முறையே அமைந்த தொகுதி
1) ஓ, ஒ, ஈ 2) ஆ, ஓ, உ
3) எ, ஈ, ஊ 4) இ, ஒ, உ

30) பின்வருவனவற்றுள் நான்காம் வேற்றுமை சொல்லுரு அல்லாதது
1) கொண்டு 2) பொருட்டு
3) நிமித்தம் 4) ஆக

**பின்வரும் வாக்கியங்களில் புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

31. இந்தோனேசியாவில் ஏற்பட்ட .................................. கரையோர மக்கள் பலரது உயிர்களைக் காவுகொண்டது.
1) கால்கோள் 2) கடல்கோள்
3) எடுகோள் 4) ஊர்கோள்

32. குலோத்துங்க சோழனின் புகழ் .................................. எங்கும் பரவியது
1) ஆண்டி முதல் அரசன் வரை 2) உணர்மொழி காலம்
3) வெள்ளிடைமலை 4) குமரிமுதல் இமயம் வரை

33. சேர மன்னவன் வீதியுலா வருகிறார் என .................................. பொதுமக்களுக்கு அறிவித்தான்
1) நாடகன் 2) கூத்தன்
3) கட்டியக்காரன் 4) நிபுணன்

34. மருந்தே .................................. விருந்தோடு உண்
1) ஒழிய 2) இருந்தாலும்
3) ஆனால் 4) ஆயினும்

35. வேட்பாளர்கள் தேர்தல் காலங்களில் .................................. எல்லாம் நுளைந்து வாக்குக் கேட்பார்கள்
1) பட்டி தொட்டி 2) வீடுவாசல்
3) குளம் குட்டை 4) தோட்டம்துரவு

**பிறமொழிக் கலப்பற்ற வாக்கியத்தை இனங்காண்க**

36. 1) அனுஜன் கும்பாபிஷேகத்துக்குப் போனான்
2) ரமேஸ் அலுமாரிக்குள் பொருட்களை வைத்தான்
3) இலக்கியன் கவிதை பாடினான்
4) பரந்தாமன் கலண்டர் வாங்கினான்

37. 1) அத்தர் வாசனை மூக்கைத் துளைத்தது
2) பாண் விலை அதிகரிப்பை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது
3) காணாப்பாடகனை பொலிஸ் கைது செய்தது.
4) விண்மீன்கள் ஒளி வீசின

**எழுத்துப்பிழைகளற்ற வாக்கியத்தை இனங்காணுங்கள்.**

38) 1) பெண்கள் மொட்டாக்கிட்டுச் சென்றார்கள்
2) அவன் இப்ப மெத்தக் கெட்டுப் போனான்
3) சிறுகதை என்பது ஓர் உரைநடை ஆக்க இலக்கியம்
4) கண்ணன் கூட்டத்துக்கு சமூகமளிக்கவில்லை

39. 1) நான் என் வீட்டைப் பனையோலையால் மேய்ந்தேன்.
2) அவனுடைய குடும்பி குலைந்து விட்டது.
3) எங்களூரில் மூன்று பண்டகசாலைகள் உள்ளன.
4) ஆராச்சி இல்லாத படிப்பு அதிக பயனைத் தராது

40 கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபடுத்தினால் கட்டுக்கோப்பான பந்தி உருவாகும். அதற்கான சரியான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ) கல்லூரிகளிலும் நகரங்களிலும், ஊர்களிலும் ஒவ்வோர் நூல் நிலையம் விளங்க வேண்டும்
ஆ) உயர்ந்தாற்றான் மக்களினம் மாட்சி மிக்கதாகும்.
இ) கல்விக்குத் துணையான நூல்நிலையங்களும் யாண்டும் செவ்வையுற அமைந்து
ஈ) இவ்வித விளக்கம் உள்ள நாடுதான் அறிவிலும் பண்பாட்டிலும் மேம்பட்ட நாடு என்று அழைக்கப்படும்.
உ) கால்கள் நான்கும் நேராக அமைந்தாற்றான் நாற்காலி நேராக நிற்கும்.

1) இ, ஆ, அ, ஈ, உ 2) உ, எ, அ, ஆ, இ
3) அ, உ, ஆ, ஈ, உ 4) உ, இ, ஆ, அ, ஈ

## தமிழ்மொழியும் இலக்கியமும் II

**01. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக**

1) சுவரொட்டி ஆக்கத்தின்போது கவனிக்கவேண்டிய இரண்டு விடயங்களைக் குறிப்பிடுக.

2) உரையாடலில் ஈடுபடுவதன் மூலம் ஏற்படத்தக்க நன்மைகள் இரண்டினை எழுதுக

3) செவ்வி காண்பவரிடம் இருக்கத்தக்க முக்கியமான தகைமைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

4) வில்லுப்பாட்டுக்கு வழங்கத்தக்க மறுபெயர்கள் எவை?

5) வியங்கோள் வினை விகுதிகள் எவை?

6) சினை அடிப்படையில் பிறந்த் குறிப்பு வினைக்கு இரண்டு உதாரணம் தருக

7) விழுந்திலன் என்ற சொல்லை ஆக்க உறுப்புகளாகப் பிரித்துக் காட்டுக.

8) "சோணாடு" என்ற மரூஉ வழக்கின் இயல்பு வழக்கினை எழுதுக.

9) இடுகுறிப்பெயர் என்றால் என்ன?

10) இலக்கியன் மிகச் சிறந்த மேடைப் பேச்சாளர்
அவர் எனது நண்பர்
இவ் வாக்கியங்களைக் கூட்டு வாக்கியமாக்குக.

**02 பின்வருவனவற்றுள் ஒன்று பற்றி 250 சொற்களில் அமையுமாறு எழுதுக.**

1) மனிதனது நாளாந்த நடவடிக்கைகளில் தொடர்பாடல் மிகவும் முக்கியமானதாகும். ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கோ ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கோ தகவல்கள் கடத்தப்படும்போது தொடர்பாடல் பண்புகளை பின்பற்றுவது அவசியமாகும். பண்டைக் காலங்களில் ஓலைகள், தூதுவர்கள், புறாக்கள் மூலமாக செய்திகள் அனுப்பப்பட்டன. அதன் பின்னர் கடிதம், தந்தி, தொலைப்பிரதி, தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, சுவரொட்டி, கணினி வலையமைப்பு என்பன தொடர்பாடலுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தகவல் தொடர்பு சாதனங்களின் துரிதவளர்ச்சியினால் அதீத நன்மைகள் இருக்கும். அதேநேரம் பல தீங்குகளும் உள்ளமையை அவதானிக்க முடிகிறது. எனவே இக் கருத்துக்களை விளக்கும் வகையில் ஒரு கட்டுரை.

2) நமக்கு என்றும் இனியவர் தாய் தந்தையரே. அவர்களை விடச் சிறந்தவர் நமக்கு யாருமில்லை. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், தாயிற் சிறந்த கோவில் இல்லை. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்றெல்லாம் முன்னோர் கூறிய முதுமொழிகள் இவ்வுண்மையைப் புலப்படுத்தும். ஆனால் முதுமைக் காலத்தில் தாய் தந்தையரை பராமரிக்காதிருக்கும் மனிதர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இக் கருத்துக்களை விளக்கும் வகையில் பொது அரங்கொன்றில் நீர் ஆற்றும் சொற்பொழிவு.

3) தமிழ்மொழி மிகவும் தொன்மையானது. தமிழர்கள் தம் தாய்மொழியை மிக அருமையாகப் போற்றி வந்தனர். தம்பிள்ளைகளுக்கு தமிழ் மரபினை வெளிப்படுத்தும் பெயர்களைச் சூட்டி பண்பாட்டுக்கு இலக்கணமாக வாழ்ந்தனர். ஆனால், காலத்தின் போக்குக்கு ஏற்ப தமிழ்மொழியும் தூய்மையிழந்து தவிக்கிறது. தமிழர்களாக வாழ்வோர் தமக்குச் சூட்டும் பெயர்களுக்கு பொருள் தேடினும் புலப்படாத வகையில் எங்கும் எதிலும் அன்னிய மோகம் சூழ்ந்து கொண்டுள்ளது. இவ்விடயத்தைக் கருவாகக் கொண்டு மொழிப் பற்றாளர்க ளுக்கிடையே நடைபெறும் உரையாடல்.

4) தொலைக்காட்சியில் சுவாரசியமாக இடம்பெற்றுக் கொண்டிருந்த "பாட்டும் பரதமும்" நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருந்த ஆரணியின் மனம் கல்லாகக் கனத்தது. போரினால் இடம்பெற்ற செல் தாக்குதலில் தன் வலது காலை இழப்பதற்கு முன்னர் பல மேடைகளில் பாராட்டுப் பெற்ற ஆரணி இன்று ஏதிலியாய் ஆதரவின்றி, தனிமையில் கூடிழந்த பறவையாகி..... இதனைத் தொடர்ந்து இடம்பெறும் விடயங்களை விளக்கி ஒரு சிறுகதை

03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியை வாசித்து அதன் சாராம்சத்தை மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.

மாடுகளைக் கொண்டு எண்ணெய் ஆட்டலாம். கவலை இறைக்கலாம். ஆனால் அடிமைகள் ஏராளமாக இருக்கும் பொழுது மாடுகள் எதற்கு? இந்தக் கொடுமைகளை இழைத்தாலும் அவர்களைத் திருத்தும் நோக்கம் இருக்குமானால் பாதகமில்லை. ஆனால் அந்த நோக்கம் மட்டும் கிடையாதென்பது மட்டுமன்று, கைதிகளை எந்தவிதத்திலும் திருத்த முடியாது என்பதே சகல சிறை அதிகாரிகளும் மேற்கொண்டுள்ள கொள்கையாகும். கைதிகளின் ஆன்மாவை விழிக்கச் செய்யவோ அல்லது அவர்களுடைய உயர்ந்த உணர்ச்சிகளைப் பயன்படுத்தவோ எவ்வித முயற்சியும் செய்யப்படுவதில்லை. கைதிகளுக்கு ஆன்மாவோ உயர்ந்த உணர்ச்சிகளோ உண்டு என்று யாரும் நம்புவதாகத் தெரியவில்லை. எவ்வளவு குறைவாக உணவு கொடுக்கலாமோ அவ்வளவு குறைவாகக் கொடுத்து எவ்வளவு அதிகமாக வேலை வாங்கலாமோ அவ்வளவு அதிகமாக வாங்கும் சிறைச் சாலையை, அதனாலே தான் அடிமைகளை வைத்து வேலை வாங்கும் ஒரு யந்திரசாலை என்று கூறுகிறோம். அடிமைகளைச் சொந்தமாக வாங்காமல் குறிப்பிட்ட காலத்துக்கு வாடகைக்கே பிடிக்கிறார்கள். அதனாலே தான் அவர்க ளுடைய ஆரோக்கியத்தைப் பற்றியும் ஒழுக்கத்தைப் பற்றியும் சிந்திப்பதில்லை. முதலாளியினுடைய சேமத்துக்கு வேண்டிய அளவு ஆரோக்கியமும் ஒழுக்கமும் இருந்தால் போதும் என்றே எண்ணுகிறார்கள். தவறுகள் செய்தால் தண்டிக்கிறார்களேயன்றித் திருத்துவதில்லை. திருத்தும் வேலை கஷ்டமானது சீக்கிரமாகவும் பயன் தராது. ஆகவே கைதிகள் அடிமைகளாகவும், அதிகாரிகள் அடிமைகளை வேலை வாங்குகிறவர்களாகவும் இருக்கிறார்கள். இத்தகைய நிலையில் எப்படி அவர்கள் சீர்திருத்தம் அடைய முடியும்?

04. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அப்பொழுது தான் பனிக்காலம் முடிவடைந்தது. பனியின் கொடுமையால் வாடிய மக்கள் வேனிலின் வரவை எதிர்பார்த்தனர். சோலையெங்கணும் வசந்தனை வரவேற்பதுபோல் மரங்களும், செடிகளும் வண்ண மலர்களைக் கொத்துக் கொத்தாகத் தாங்கி நின்றன தடாகத்திலுள்ள தாமரையும் அல்லியும் மலர் முகம் காட்டி மகிழ்ந்திருந்தன. முல்லையும், மல்லிகையும் பல்லைக்காட்டி மெல்ல மருட்டுவன போன்றன. தேமாவும் வாழையும் தீம்பழங்களைப் பரிசிலாக ஏந்தி நின்றன. தென்றல் செல்வன் மன்னர் மகளிரைப் போல் மெல்ல நடந்தான். அதைக் கண்ட அன்னங்கள் ஆனந்தங் கொண்டன. போல் அணிநடை பயின்றன. வெண்கதிர்ச்செல்வன் தெள்ளிய பால் நிலவை அள்ளி வீசினான். காதற் செல்வர் காலம் இது என இருவர் இருவராய்க் கைபிரியாது உலவினர். மாநிலமெங்கும் கழிபேருவகையோடு உளமீக்கூர, வசந்தன் என்னும் மணம் புணர் வேந்தனது ஆட்சிக்காலம் தொடங்கியது.

1) வேனில் காலத்தில் நிகழும் இயற்கை மாறுதல்கள் எவை?

2) மேற்கண்ட பந்தியிலுள்ள உவமைகளைக் குறிப்பிடுக.

3) இங்கு, வசந்தன், வேனில் எனக் குறிப்பிடப்படுவது யாது?

4) தென்றல் செல்வன், வெண்கதிர்ச்செல்வன் ஆகியவற்றால் நீர் விளங்கிக்கொள்வது யாது?

5) உரைப்பகுதியிலுள்ள உரிச்சொல்லினை இனங்காட்டி விளக்குக.

05. வீதி புனரமைக்கப்படாமையாலும் போக்குவரத்துச் சேவை சீரின்மையாலும் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி பத்திரிகை ஒன்றுக்கு கடிதம் எழுதுக.

## கர்நாடக சங்கீதம்

**கீதம்**

உருப்படிகளில் மிகவும் எளிதானது. அப்பியாச கானத்தைச் சேர்ந்த உருப்படியாகும் ஒரே காலத்தில் அமைந்திருக்கும். பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்க வித்தியாசம் காணப்படமாட்டாது. சங்கதிகள் கடினமான வக்ரப் பிரயோகங்கள் என்பன கீதத்தில் காணப்படமாட்டாது. கீதத்தின் சாகித்தியத்தின் இடையே வரும் அஇய திஇய வஇய என்னும் கீத அலங்காரச் சொற்கள் காணப் படும். இதனை மாத்ருக்கா பதங்கள் என்றும் அழைப்பர். இவ்வுருப்படியை ஆரம்பம் முதல் முடிவு வரை தொடர்ச்சியாகப் பாட வேண்டும் தமிழ், தெலுங்கு, கன்னடம், வடமொழி போன்ற மொழிகளில் இயற்றப்பட்டுள்ளன. இது இரண்டு வகைப்படும்.

1) சஞ்சாரி கீதம்
2) இலட்சண கீதம்

சஞ்சாரி கீதத்தின் சாகித்தியம் பகவத் தோத்திரமாகவும், இயற்கையை வர்ணிப்பதாகவும், வித்வான்களை ஆதரித்துப் பாடுவதாகவும் அமைந்திருக்கும். இலட்சண கீதத்தின் சாகித்தியமானது கீதம் என்ற இராகத்தில் அமைந்திருக் கிறதோ அந்த இராகத்தின் இலட்சணத்தைக் கூறுவதாக இருக்கும். இலட்சண கீதத்தின் வாயிலாக ஆதிகாலத்தில் வழக்கிலிருந்த இராகங்களின் இலட் சணத்தை அறிய முடியும். ஜனக இராகத்தில் அமைந்த இலட்சண கீதங்களை இராகாங்க இலட்சண கீதங்கள் என அழைப்பர்.

**சஞ்சாரி கீதம் :** உதாரணம் -
கணநாதா, மாயாமாளவகௌளை
சிவபெருமானே மத்தியமாவதி

**இலட்சண கீதம் :** உதாரணம் -
ரேவதி இராகம் இயற்றியவர்கள் :

**சஞ்சாரி கீதம் :** புரந்தரதாசர் பொன்னையாபிள்ளை

**இலட்சண கீதம் :** பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள்
வேங்கடமகி
கோவிந்த தீட்சிதர்

# வலி.வடக்கு மக்களின் அவலவாழ்வு தொடர்கிறது

## புதிய ஜனநாயக் மாக்சிச லெனினிசக் கட்சியின் கண்டன அறிக்கை

யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இராணுவப் பிடிக்குள் உள்ள வீடுகள் இடித்து அழிக்கப்பட்டு வருவதை புதிய ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது என இக் கட்சியின் வடபிராந்திய செயலாளர் கா.செல்வம் கதர்காமநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

மக்களின் வீடுகள் இடித்து அழிக்கப்படுகின்றது. இராணுவத்தின் நிரந்தரஇருப்பையும் விஸ்தரிப்பையும் நோக்காகக் கொண்டதாகும். 1990 இல் வலி.வடக்கில் இருந்து துரத்தப்பட்ட மக்களில் இன்னும் தமது சொந்த நிலங்களுக்கு மீளகுடியமர செல்லவிடாது தடுக்கப்பட்டுள்ள சுமார் 3 இலட்சம் மக்கள் அவல வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள். அவர்களது வீடுகளில் ஒருபகுதியே தற்போது இராணுவத்தினரால் இடித்தழிக்கப்பட்டு வருகிறது. மக்களின் அடிப்படை வாழ்வுரிமையை மறுத்து இவ்வீடுகள் அழிக்கப்படும் கொடூர செயலை அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டும். இதற்குரிய ஒரே வழி மக்கள் அணிதிரண்டு வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பதுதான் இதனை முன்னெடுப்பதற்கு முன்வந்தி ருக்கும் வலி.வடக்கு மீள்குடியேற்ற குழுவின் நடவடிக்கைகளுக்கு எமது கட்சி முழுமையான ஆதரவைத் தெரி விக்கின்றது.

கடந்த 23 வருடங்களாக வலி.வடக்கில் இராணுவ நடவடிக்கைகளாலும் யுத்தத்தினாலும் தமது நிலங்கள் வீடுகள் தொழில் இடங்களில் இருந்து துரத்தப்பட்ட விவசாயிகள், தொழிலாளர்கள் மீனவர்கள் மற்றும் தொழில் செய்வோர் இன்று வரை முழுமையாக தமது சொந்த வாழ்விடங்களுக்கு மீளச் செல்ல முடியவில்லை.

வலி.வடக்கில் சில குறிப்பிட்ட பகுதிகளுக்கு மட்டுமே மக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இன்னும் 7500 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 3 இலட்சம் பேர் 30 அகதி முகாம்களிலும் பல ஊர்கள், கிராமங்களிலும் வாழ்ந்து வருகின்றனர்.

யுத்தம் முடிவடைந்து நாலரை வருடங்கள் சென்ற பின்னும் தமது சொந்த நிலங்களுக்கு செல்லவிடாது தடுக்கப்படுவது அந்நிய இராணுவ ஆக்கிரமிப்பு போன்றதாகும். இதனை வெறுமனே தேர்தல்களில் மக்கள் புள்ளடி இடுவதால் மட்டும் எதிர்த்து நிற்கமுடியாது அதற்கு அப்பால் மக்கள் தமது பலத்தை ஒருங்கிணைத்து வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பதை தவிர வேறு மார்க்கம் கிடையாது என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வருடாந்த பொதுக்கூட்டம்

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 30.11.2013 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க வினோதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் தலைவர் வே.விமலராஜா தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் சங்க உறுப்பினர் அனைவரையும் தவறாது கலந்ததுகொள்ளுமாறும் இதுவரை உறுப்பினராக இணைந்து கொள்ளாத பழைய மாணவர்கள் அன்றைய தினம் சமூகமளித்து தமது பதிவினை மேற்கொள்ள முடியுமெனவும் சங்கச் செயலாளர் திருமதி ச.முருகானந்தன் தெரிவித்துள்ளார்.

## பரிசளிப்பு விழா

நாவற்குழி மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 130 மணிக்கு அதிபர் திருமதி வ.மேகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கல்வியியற் துறைப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி பிரதம விருந்தினராகவும் ஓய்வுநிலை புகையிரத நிலைய அதிபர் ப.சிவநாதன் சிறப்பு விருந்தினராவும் கலந்து கொள்ளவுள்ளனர். (10)

# புதிய நிர்வாகத் தெரிவு

சைவ பரிபாலன சபையின் பொதுச்சபைக் கூட்டமும் புதிய நிர்வாக சபை உறுப்பினர் தெரிவும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

புதிய தலைவராக முன்னாள் நீதிபதி ப.வசந்தசேன, செயலாளராக சொல்லின் செல்வர் இரா.செல்வடிவேல், பொருளாளராக பி.பாலகிருஷ்ணன், பரீட்சை செயலாளர் பி.கமலநாதன், உப தலைவர்களாக திருமதி நாச்சியார் செல்வநாயகம், எஸ். திருஞானசம்பந்த பிள்ளை ஆகியோர் நிர்வாக சபையின் புதிய உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர். (சி)

# பழந்தமிழர் ஆய்வு மாநாடு

பழந்தமிழர் இயக்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடாத்தப்படும் பழந்தமிழர் ஆய்வு மாநாடு எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் அத்தியடி நாவலர் வீதியில் உள்ள சொர்ணாம்பிகை (TCT) மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பழந்தமிழர் இயக்க நிறுவுனரும், மன்னார் மாவட்ட செயலக புள்ளிவிபரவியலாளருமான ம.வித்தியானந்தநேசன் தலைமை தாங்கவுள்ளார்.

மேற்படி நிகழ்வில் கெளரவ விருந்தினராக கல்விக் காருண்யன் இ.எஸ்.பி.நாகரத்தினம், பிரதம விருந்தினர் யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை பேராசிரியர் கா.குகபாலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

பழந்தமிழர் வாழ்வில் ஆட்சியும், அறமும் என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறை பேராசிரியர் க.சிவானந்தமூர்த்தியின் ஆய்வும் பழந்தமிழர் பண்பாடும் ஆரியர் வருகையும் என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை தலைவர் பேராசிரியர் ஏ.என்.கிருஸ்ணவேணியின் ஆய்வும் இலங்கைத் தமிழர் பண்பாட்டு மரபுரிமைகளின் செறிவும், மறைக்கப்பட்ட வரலாற்றுத் தொன்மங்களும் தொல்லியல் மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழகம் வரலாற்று தொல்லியல் துறைப் பேராசிரியர் செ.கிருஸ்ணராஜாவின் ஆய்வும் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வின் வரவேற்புரையை லயன் சீமாட்டி திருமதி இராகினி இராமலிங்கம், நன்றியுரையை பி.தேவமித்திரன் (Jaffna City Mission CACM) ஆற்றுவர்.

இந் நிகழ்வு பற்றிய மேலதிக தகவல்களைப் பெற 0777642379 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது Mvithiyananthan @san@gmail.com என்ற இணையத்தள முகவரிக்கும் தொடர்பு கொள்ளலாம்.

# இலவச கணனிப் பயிற்சிக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு

(யாழ்.நிருபர்)

ஐ.நா. அபிவிருத்தித்திட்ட அனுசரணையுடன் ஸ்தாபிக்கப்பட்ட எம்.சி.எஸ். தகவல் தொழில்நுட்ப வளாகத்தால் நடத்தப்படும் இலவச கணனிப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த மாணவர்கள் இக்கற்கைநெறியைத் தொடர்வதற்கு விண்ணப்பிக்க முடியும்.

கணனி வலையமைப்பு, இணைய வடிவமைப்பு, மல்ரிமீடியா ஆகிய பயிற்சிநெறிகள் நடத்தப்படவுள்ளன.

ஆர்வமுடைய மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் உள்ள எம்.சி.எஸ். தகவல் தொழில்நுட்ப அலுவலகத்தில் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

# மூத்தோரின் நாளைய விடியல்



முதியவர்கள் இன்று எமது நாட்டில் மிகுந்த பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள் சனத்தொகையின் வளர்ச்சியின் பரிணாமம் சவாலாகியும் வருகிறது. இதில் முதியோரின் சதவீதம் கணிசமான இடத்தை பெறுகின்றது. இந்த நிலையில் முதியவர்களின் சேவைகளை மேம்பாடு அடையச் செய்வதும். முதியவர்களின் பராமரிப்பு சேவையை வினைத்திறனாக்குவதும், காலத்தின் தேவையாக உள்ளது. சமூகத்தில் வைத்தே முதியவர்கள் பராமரிக்கப்பட வேண்டும் என்ற எடுகோளின் அடிப்படையில் இத்துறைசார் வல்லுனர்களின் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. அதன் உண்மைத் தன்மைகள் அனுபவங்களினூடாக உய்த்துரைக்கப் பட்டன. இவற்றை இங்கு பகிர்ந்து கொள்வதும், இவற்றை உள்வாங்கிச் செயற்படுத்துவதும் எம் ஒவ்வொருவரின் கடமையும் பொறுப்புமாகும்.

முதியவர்களில் சகலருக்கும் பராமரிப்புசேவை தேவைப்படுகின்றது. தனிக்குடும்ப வாழ்க்கை முறையில் இத் தேவையை நிறைவேற்ற குடும்பங்கள் சிரமப்படுகின்றன. வசதியான குடும்பங்கள் முதியோர் பராமரிப்பு சேவைத் தொண்டர்கள் இதை பூர்த்தி செய்து கொள்ளலாம். வறுமை நிலையில் வாழ்பவர்களுக்கு முதியோர் இல்லங்கள் உதவுகின்றன. இதை விட முதியோர் சங்கங்கள் முதியோர் பகல் நிலையங்கள் யாழ். மாவட்ட முத்தபிரஜைகள் பேரவை போன்ற சமூகக் கட்டமைப்புகள் பலவீனமாக உள்ளன. இவற்றை வலுப்படுத்துவதன் மூலம் இத்தகைய தீர்வுகளுக்கான தேடலில் விடியலை ஏற்படுத்தலாம்.

முதியோர்களுக்கான சேவைகள் தொடர்பில் சமூகசேவைத் திணைக்களத்தால் பொதுசன மாதாந்த உதவிப்பணம் 70 வயதின மேல் விசேட திட்டத்தில் மாதாந்த 1000 ரூபா மற்றும் மாற்றுவலுவுள்ளோருக்கான உபகரணங்கள் முதியோர் அடையாள அட்டை, சேவைகளில் முன்னுரிமை பெறுவதற்காகவென நலன்புரிப்பணிகள் வறிய முதியவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன. அத்தோடு நிர்க்கதியான நிலையில் வாழும் முதியவர்களுக்கு தோள் கொடுக்கும அரச முதியோர் இல்லம் என தொடர்கின்றன. இலங்கை வங்கி ஹட்டன் நஷனல் வங்கி போன்றவற்றில் 55 வயதின் மேல் வைப்புகளுக்கு விசேட வட்டியும ஏனைய வங்கிளில் 60 வயதின் மேல் விசேட வட்டியும் என திட்டங்கள் உள்ளன. போக்குவரவு பேருந்துகளில் இட ஒதுக்கீட்டுக்கான ஏற்பாடுகள் கொள்கையளவில் உள்ளன. இங்கும் முதியோர்களுக்கான சேவைகள் தொடர்பில் விழிப்புணர்வின்மை இடைவெளியாக உள்ளது. இதை நிரப்பும் பொறுப்பு ஒவ்வொரு பொதுமகனிடமும் உள்ளது.

முதியவர்களின் பிரச்சினைகளுக்கு முதியோர் பகல் நிலையங்கள் சிறந்த தீர்வாகவுள்ளது. முதியவர்களுக்கு மன உளைச்சல் குறையும் போது பிரச்சினைகளும் குறையும். பகலில் இத்தகைய நிலையங்களில் ஒத்த வயதினருடன் சந்தித்து வருவது மன உழைச்சல் நீங்க ஏதுவாகின்றது. குடும்பச் சண்டைகளும் போர் நிறுத்த உடன்பாட்டுக்கு வருகின்றன. முதியவர்களின் அனுபவங்களும், திறன்களும் சமூகத்திற்கு வலுவூட்டவல்லனவாகவும் உள்ளன.

முதியவர்களில் பெண் முதியவர்களை சமூகம் அரவணைத்துள்ளமை ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது. முதியோர் பராமரிப்பு என்பது திருமணத்தின் பின் பிள்ளைகளுக்கு சவால் நிறைந்த ஒன்றாகக் காணப்படுகின்றது.

இந்நிலையில் முதியவர்களின் சேவை வினைத்திறனிற்கு முதியோர் பராமரிப்பு சேவை தொண்டர்களை உருவாக்கி விடுவதன் மூலம் சமூகத்திலுள்ள முதியவர்களை பராமரிக்கவும், வைத்தியசாலைகளில் முதியவர்களைப் பராமரிக்கவும் உள்ள தேவைகளை நிறைவாக்கலாம். அத்தோடு வருமானம் தரக்கூடிய பகுதிநேர தொழிலாகவும், ஆத்மதிருப்தியுடனான சமூகசேவையாகவும் இதனைச் செய்யலாம். இதன்மூலம் சமூகமயமாக்கலுடன் கூடிய தீர்வை முன்னகர்த்தலாம் நல்ல கிராக்கி நிறைந்த இத்தொழிலுக்கான பயிற்சியை கொழும்புத்துறை, இணுவில் பகுதிகளிலுள்ள தனியார் முதியோர் இல்லங்கள் வழங்குவதற்கு கொள்கையளவில் ஏற்பாடுகளை செய்துள்ளமையும அறியமுடிகிறது.

முதியவர்களின் பிரச்சினைகள் அதிகரிக்கப்போகின்றன. இதன் விளைவாக குடும்பங்களில் சிக்கல்கள் தோன்றப்போகின்றன. இவற்றை எதிர்கொள்ள இந்த விடயங்களை உள்வாங்கப் போகின்றோமா? அல்லது நமக்கென்ன என்று ஒதுங்கப் போகின்றோமோ? நீங்களே முடிவெடுத்துக்கொள்ளுங்கள்.

* * *

த. கிருபாகரன்
அத்தியட்சகர்
அரச முதியோர் இல்லம்
கைதடி.

# பிலிப்பைன்ஸில் ஹையான் புயல்
# 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலி



பிலிப்பைன்ஸ் நாட்டை தாக்கிய ஹையான் சூறாவளி புயலால் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். இலட்சக்கணக்கானோர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.

பலரை காணவில்லை. வியடநாமை நோக்கி நகர்ந்த புயலால் மேலும் பலி எண்ணிக்கை உயரும் என்று அஞ்சப்படுகிறது.

பிலிப்பைன்ஸ் நாட்டை ஹையான் என்ற புயல் நேற்று முன்தினம் தாக்கியது. மணிக்கு 375 கி.மீற்றர் வேகத்தில் கரை கடந்த புயலால் பலத்த காற்று வீசியது.

இதனால் போக்குவரத்து, தகவல் தொடர்பு, மின்சாரம் உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகள் முற்றிலும் பாதிக்கப்பட்டது.

கனமழையால் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளனர். மேலும் பலரைக் காணவில்லை, இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.


இறந்த 10000 இற்கும் மேற்பட்டவர்களின் உடல்கள் சாலைகளிலும் நீரிலும் கிடப்பதாக தகவல் வந்துள்ளது.

தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டதால் பாதிப்புகள் குறித்த முழு விவரம் கிடைக்கவில்லை என்றார்.

இந்தப் புயல் காரணமாக 7,50,000 பேர் மாற்று இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இதனால் உயிர்பலி பெருமளவு குறைந்துள்ளது. ஆனால், இவர்களது வீடுகளும், உடைமைகளும் முற்றிலுமாக சேதம் அடைந்துள்ளதாக மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

நிலத்திலும் பெரும் சேதம் ஏற்படுத்தும் புயலாக ஹையான் இருந்தது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பிலிப்பைன்ஸில் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால் மீட்புப் பணிகளிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# எந்தவொரு உடன்படிக்கையும் ஈரானுடன் இல்லை



சர்ச்சைக்குரிய அணுத்திட்டங்கள் குறித்து ஈரானுக்கும் மேற்குலக நாடுகளுக்கும் இடையில் இதுவரையில் எந்தவொரு உடன்படிக்கையும் எட்டப்படவில்லை என அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

ஜெனீவாவில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டுள்ள அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி இதனைத் தெரிவித்துள்ளார்.

ஈரானுடன் அணுத்திட்டம் குறித்து எந்தவொரு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படக்கூடாது என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெட்டன்யாகு வலியுறுத்தியுள்ளார்.

உடன்படிக்கைகள் எதுவும் கைச்சாத்திடப்பட்டால் .அது பாரிய பின் விளைவுகளை ஏற்படுத்தும் என இஸ்ரேல் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# பிரபஞ்சத்தின் சிறந்த அழகி




பிரபஞ்சத்தின் சிறந்த அழகியை தேர்வு செய்யும் "மிஸ் யூனிவர்ஸ் - 2013" போட்டி ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் நடைபெற்றது.

இதில் 86 நாடுகளைச் சேர்ந்த இளம்பெண்கள் இந்த போட்டியில் பங்கேற்றனர்.

பல நாடுகளை சேர்ந்த பல்துறை பிரபலங்கள் நடுவர்களாக பங்கேற்ற இந்த 62 ஆவது பிரபஞ்ச அழகிப்போட்டியில் "மிஸ் வெனிசுலா" பட்டம் வென்ற கேப்ரியேலா இஸ்லர் (25) பிரபஞ்ச அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வெனிசுலா நாட்டின் தொலைக்காட்சியில் நிகழ்ச்சி தொகுப்பாளியாக பணியாற்றி வரும் அவருக்கு கடந்த ஆண்டு இதே பட்டத்தை வென்ற அமெரிக்காவின் ஒலிவியா கல்ப்போ பிரபஞ்ச அழகிக்கான மகுடத்தை சூட்டி மகிழ்வித்தார்.

# சிறிது நிமிர்ந்தது பைசா கோபுரம்



இத்தாலியில் உள்ள, உலக அதிசயங்களில் ஒன்றான, பைசா நகரத்து சாய்ந்த கோபுரம் 2.5 செ.மீ. நிமிர்த்தப்பட்டுள்ளது. இத்தாலியின், பைசா நகரில் உள்ள தேவாலயத்தின் மணிக்கூண்டாகப் பயன்படுத்தவே, 8 மாடிகள் கொண்ட இந்தக் கோபுரக் கட்டடம் கி.பி. 1173 இல் ஆரம்பிக்கப்பட்டது. இதை சாதாரணக் கட்டடம் போல செங்குத்தாகவே கட்டினர். அடித்தளம் சரியாக அமைக்கப்படாததால் கி.பி., 1272 இல், கோபுரம் சிறிது சிறிதாக சாய ஆரம்பித்தது குறிப்பிடத்தக்கது.

# கடத்தலை எதிர்த்த முதல்வர் சுட்டுக்கொலை




போதைப்பொருள் கடத்தலை எதிர்த்து வந்த மெக்சிகோ நகர முதல்வர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். போதைப்பொருள் கடத்தல்கள் அதிகம் இடம் பெறும் நாடாக மெக்சிகோ விளங்குகின்றது.

போதைப்பொருள் கடத்தல் குழுக்களுக்கு இடையே அங்கு அடிக்கடி மோதல்கள் இடம் பெறுவதும், பலர் கொல்லப்படுவதும் வழமையாக உள்ளது. இந்த நிலையில், மெக்சிகோ மிச்சோஅகன் மாகாணத்தின் முதல்வர் போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார். அத்துடன், அண்மையில், போதைப் பொருள் தடுப்பின் பொருட்டு தன்னுடைய நகராட்சிக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று 18 நாட்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தையும் இவர் மேற்கொண்டார்.

இந்த நிலையிலேயே இவர் இனந்தெரியாத குழுவினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

# பா.ஜ.க - காங்கிரஸ் ஆதரவு இல்லாமல் மத்தியில் அரசு அமைய முடியாது



பா.ஜ.க - காங்கிரஸ் ஆதரவு இல்லாமல் மத்தியில் எந்த அரசும் அமைய முடியாது என பிளாஸ்பூர் தொகுதியில் இடம் பெற்ற தேர்தல் பிரசாரத்தின் போது பா.ஜ.க மூத்த தலைவர் அத்வானி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

டில்லி, ராஜஸ்தான், மத் திய பிரதேசம், சத்தீஸ்கர் ஆகிய 4 மாநிலங்களிலும் குஜராத்தை தொடர்ந்து பா.ஜ.க. ஆட்சியை அமைக்கும்.

பொருளாதார வல்லுனரான மன்மோகன் சிங்கின் தலைமையிலான ஆட்சி நடைபெறும் நம் நாட்டில் பொருளாதாரம் கடும் சரிவை சந்தித்துள்ளது.

நாடு இதுவரை சந்தித்திராத மோசமான ஆட்சியாக ஐக்கிய முற்போக்கு கூட்டணி தலைமையிலான இந்த ஆட்சி நடந்து வருகிறது.

ஊழலும், விலைவாசி உயர்வும் விண்ணைத் தொடும் அளவுக்கு உயர்ந்து விட்டன. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றாவது அணி உருவாவதற்கான வாய்ப்பே இல்லை.

கடந்த 20 - 25 ஆண்டுகளாக நம் நாட்டின் அரசியலில் இணை துருவமாக பா.ஜ.க. வளர்ச்சி அடைந்துள்ளது.

பா.ஜ.க. அல்லது காங்கிரஸ் கட்சியின் ஆதரவு இல்லாமல் எந்தக் கட்சியாலும் மத்தியில் அடுத்த அரசை அமைக்க முடியாதென அவர் தெரிவித்தார்.

# இராணுவ ஹெலி விபத்து தொழிலாளர்கள் 13 பேர் பலி



இந்தோனேசியாவில் இராணுவ ஹெலிகொப்டர் விழுந்து நொருங்கியதில் அதில்' பயணம் செய்த 13 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று கட்டுமானப் பணிக்காக 21 தொழிலாளர்களை ஏற்றிக் கொண்டு சென்றது.

போர்னியோ வனப் பகுதியில் அந்த எம்.ஐ 17 ஹெலிகொப்டர் சென்று கொண்டிருந்த போது திடீரென கீழே விழுந்து நொருங்கியதில் 13 பேர் உயிரிழந்தனர். ஏனையோர் எரிகாயங்களுக்குள்ளாகினர். காட்டுக்குள் வீழ்ந்த ஹெலி முற்றாகவே எரிந்து போனது.

---

**பத்ரி....** (5ஆம் பக்கத்தொடர்...)

(இல்லையேல், அங்கு தமிழர்களின் பிரச்சினைகள், மேலும் சிக்கலாகும் என்பதுகூட நமக்குப் புரியமாட்டேன் என்கிறது - அவர்கள் அமைதியாக வாழ்வது, முன்னேற்றம் காண்பது போன்றவற்றைத் தமிழகத் தமிழர்களாகிய நமக்குப் பிடிக்காமல் போகலாம். இருந்தாலும் நாம் கொஞ்ச நாட்களுக்காவது அந்த இலங்கைத் தமிழர்களைப் பற்றி யோசிக்காமல், ஏதாவது ஹிந்தித் திரைப்பட விமர்சனம் எழுதலாமே!)

6: போர், கொலைகள் எல்லாம் விளையாட்டுகள் அல்ல, ஐபிஎல் கேளிக்கைகள் அல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

7: அர்த்தமற்ற - "ராஜபக்ஷவைத் தூக்கில் போடு!" "இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என அறிவி," "மனிதவுரிமை மீறல்களை ஐ.நா. விசாரிக்க வேண்டும்," "இலங்கையின் மீது பொருளாதாரத் தடை விதி" "ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக அறிவி" என்பது போன்ற அரைவேக்காட்டு வெற்றுக் குப்பை கோஷங்களை அருவருத்து வெறுத்து ஒதுக்குதல் வேண்டும். சரி, ஒரு பேச்சுக்கு இந்தக் "கோஷங்கள் விடுவதை" சரியென்று வைத்துக்கொள்வோம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்றும் வைத்துக்கொள்வோம்; இலங்கையில் இதனால் தேவைக்கும் அதிகமாக அவதியுறுவது அங்குள்ள தமிழர்களாகத்தான் இருக்கும்! இந்த அடிப்படை எழவெல்லாம்கூட, மரத் தமிழர்களாகிய நமக்குப் புரியமாட்டேன் என்கிறது.

8: இலங்கை கிரிக்கெட் அணி இங்கே வரக்கூடாது, இந்தியா கொமென்வெல்த் கூட்டத்துக்குப் போகக்கூடாது என்ற அரைவேக்காட்டுத்தனம் எல்லாம் கூடாது. இந்தக் குப்பைப் புறக்கணித்தல்களினால் யாருக்கு என்ன பயன்? (மன்னிக்கவும்: நமக்கு ஏற்பட்ட தினவை, நாம் இம்மாதிரி குழந்தைத்தனமாகத் தீர்த்துக்கொள்ள ஆசைப்பட வேண்டுமா?)

9: நமக்குத் தேவை, நிதானம். காரணகாரியங்களை அறிந்து செயல் புரியும் தன்மை. இதெல்லாம் நமக்கு மிகவும் கடினம் என்பதால், நம் அனைத்து துவாரங்களையும் மூடிக்கொண்டு, 'இலங்கை விஷயத்தில் ஒன்றும் செய்யாமல், நமக்கெல்லாம் கைவந்த கலையான "சினிமா விமர்சனம்" எழுதுவதைச் செய்யலாம். ஏழாவது அறிவுக்குப் பிறகு எட்டாவது சொறிவு ஏதும் எடுக்கப்போகிறார்களா என்று விசாரிக்கலாம்.

தமிழர்களாகிய நாம் அடிப்படையில் கொஞ்சம் நேர்மையானவர்கள் ஆக, இலங்கைத் தமிழர்களுக்கு உதவி செய்ய முடியாவிட்டாலும், குறைந்தபட்சம் உபத்திரவம் கொடுக்காமல் இருக்க விரும்புவோமானால்...

இலங்கையின் பிரச்சினைகளைத் தீர்த்தலில், நம் பங்கு சொற்பம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். நாம், நம்முடைய கோமாளித்தனங்களால், மேலும் மேலும் பிரச்சினைகளை வளர்க்கத்தான் ஆசைப்படுகிறோம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் போக்கை நிறுத்தவேண்டும்.

# கால் நூற்றாண்டுக்கு மேலாக தேங்கி நின்ற வெள்ள நீருக்கு தீர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் நுழைவாயிலில் கால் நூற்றாண்டுக்கு மேலாகத் தேங்கி நின்ற வெள்ளநீர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளமை தொடர்பில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஊடகங்களுக்கு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் நுழைவாயில் பகுதியில் கால் நூற்றாண்டிற்கு மேலாக வெள்ள நீர் தேங்கி நின்று ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பொது மக்கள் ஆகியோரின் ஆரோக்கியமான போக்குவரத்திற்கு பெரும் இடையூறாகக் காணப்பட்டது. இதனை யாழ். மாநகரசபை முதல்வரின் கவனத்திற்கு கொண்டு வந்த அப்பாடசாலையின் பிரதி அதிபர் கி.தர்மசீலன் இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் வகையில் மாநகர சபையுடன் இணைந்து செயற்பட்டார் என்பதை கூறிவைக்க விரும்புகின்றேன்.

கஸ்தூரியார் வீதி நீண்ட காலத்தின் பின்னர் மட்டுப்படுத்தப்பட்ட காப்பற் வீதியாக மாற்றப்பட்டமை எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தந்த ஓர் விடயமாகும்.

அதே நேரத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மழை காலங்களில் பாடசாலை நுழைவாயிலினூடாகச் செல்வதற்கு மழைநீர் பெரும் அசௌகரியமாக காணப்பட்டதைத் தொடர்ந்து அவ் வீதிப் புனரமைப்புப் பணியை ஒப்பந்தகாரர் மூலம் பொறுப்பெடுத்துக் கொண்ட் வீதி அபிவிருத்தி திணைக்கள பொறியியலாளர்களும், மாநகரசபைப் பொறியியலாளர்களும் இணைந்து மிக விரைவாக வெள்ள நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடிய செயற்திட்டம் ஒன்றினை மேற்கொண்டமை பாராட்டுகுரிய ஓர் விடயமாகும்.

இதன் மூலம் ஆசிரியர், மாணவர்களின் நீண்ட நாள் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளமையை பாடசாலைச் சமூகம் முதல்வருக்கு மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்தினர் எனத் தெரிவித்துள்ளார்.

# துரிதமாகப் புனரமைக்கப்படும் வளலாய் இந்து மயானம்

(அச்சுவேலி)

வளலாய் கடற்கரை ஓரமாகக் காணப்படும் இந்து மயானமானது தற்பொழுது துரிதமாகப் புனரமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதாவது இந்த மயானமானது கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களினால் அங்கு அமைக்கப்பட்டிருந்த இளைப்பாற்று மண்டபம் மற்றும் ஏனைய பகுதிகள் யாவும் சிதைவடைந்த நிலையில் மக்கள் பாவனைக்குப் பயன்படுத்த முடியாத நிலை காணப்பட்டது.

எனினும், தற்பொழுது புதிதாக இளைப்பாற்று மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டு வருவதுடன் மயானத்தைச் சுற்றி மதில் அமைக்கவும் திட்டமிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், தகனக்கிரியைகளை மேற்கொள்ளும் பகுதியும் திருத்தி அமைக்கப்படவுள்ளது. எனவே, மேற்படி புனரமைப்புப் பணிகள் விரைவில் முடிவுற்றால் தமக்குப் பயன்மிக்கதாக அமையும் எனவும் அந்தப் பகுதி பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுவரை காலமும் தகனக்கிரியைகளை மேற்கொள்வதில் தாம் எதிர்கொண்டு வந்த பல்வேறு பிரச்சினைகளுக்கு இதன் மூலம் ஒரு தீர்வு கிட்டும் எனவும் இவர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். (85)

# அடிப்படை வசதிகளின்றி பாண்டியன்குளம் பொதுச்சந்தை

(மாந்தை)

மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பாண்டியன்குளம் பொதுச் சந்தையானது இடம்பெற்ற யுத்தம் காரணமாக மிகமோசமாக சேதமடைந்த நிலையில், கடந்த் 2010 ஆம் ஆண்டு இப்பகுதி மக்கள் மீள்குடியேறியதையடுத்து இச்சந்தை புனரமைக்கப்பட்டபோதும் போதிய அடிப்படை வசதிகள் இன்றியே காணப்படுகின்றது.


இதனால் வர்த்தகர்களும், நுகர்வோரும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (கே)

# கலாசார திருமண மண்டபம் வல்வையில் திறந்து வைப்பு

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் திருமண மண்டபம் அமைக்கப்பட வேண்டும் என்ற மக்களின் நீண்ட காலக் கோரிக்கையைக் கருத்தில் கொண்டு வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தின் அறங்காவல் குழுவினரின் முயற்சியாலும், பொதுமக்களினது பங்களிப்புடனும் கட்டப்பட்ட அழகான திருமண மண்டபம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்துடன் இணைந்ததாகக் காட்சியளிக்கும் வகையில் சுமார் 600 பேர் வரை அமரக்கூடியதாக அமைக்கப்பட்ட இக்கட்டடம் முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தின்



பிரதம குரு சிவஸ்ரீ.சோ.தண்டபாணி தேசிகரின் சமயக் கிரியைகளுடன்,

வல்வெட்டித்துறை சிவன் கோயில் பிரதம குரு பிரம்மஸ்ரீ. ப.மனோகரக்குருக்களின் ஆசியுரையுடனும், அறங்காவல் குழுவின் தலைவர் எஸ்.தர்மகுலசிங்கத்தினால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வல்வெட்டித்துறைப் பாடசாலைகளின் மாணவர்களின் கலை, கலாசார நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

## அமைச்சர்...

குடியேற்றம் சாத்தியமாக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி பிரதேசங்களில் உடனடியாக மீள்குடியேற் றம் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எடுத்த நடவடிக்கை காரணமாக வலிகாமம் வடக்கில் 24 கிராம அலுவலர் பிரிவுகளில் மீள்குடியேற்றம் இடம்பெற்றமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இதேபோன்று இன்னும் உயர்பாதுகாப்பு வலயங்களில் உள்ள ஏனைய பிரதேசங்களிலும் மக்களை மீளக்குடியமர்த்த அனைத்து நடவடிக்கைகளையும் படிப்படியாக மேற்கொள்ளப்ப டும்.

மேலும் மேற்படி பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்தும் போது காடழித்தல், போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் வீதி களைப் புனரமைத்தல், குடிநீர் வசதிகளை ஏற்படுத்துதல், மல சலகூடத்துடனான தற்காலிக வீடுகளை அமைத்தல் மற்றும் மீளக்குடியேறும் மக்களுக்கான ஆறுமாதகாலத்திற்கான உலருணவுப் பொருட்களை வழங்குதல் உள்ளிட்ட உடனடி அத்தியாவசிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமெனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, மீளக்குடியமர்த்தப்படவுள்ள பிரதேசங்களான ஜே253, ஜே/254 பிரிவுகளைச் சொந்த இடமாகக் கொண்ட மக்கள் தங்களின் பதிவுகளை வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்திலும், ஜே/284 பிரிவைச் சேர்ந்த மக்கள் வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்திலும் தங்கள் தங்கள் கிராம அலுவலரை தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறும் பதிவு களை மேற்கொள்ள சமூகம் தரும்போது குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை, காணி தொடர்பிலான உறுதிப்படுத்தும் ஆவணங்களை எடுத்து வருமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், தெல்லிப்பழை, கோப்பாய், உடுவில் பிரதேச செயலர்களான சிறிமோகனன், பிரதீபன், நந்தகோபன் மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள், மக்கள் மீள் குடியேறவுள்ள பிரதேசங்களை நேரில் சென்று பார்வையிட்டனர்.

## அதிர்ச்சியை...

தீவிரமான கேள்விகளுக்கு இலங்கை பதிலளிக்க வேண்டியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அடுத்தவாரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கும் போது, உள்நாட்டுப் போரின் இறுதி மாதங்கள் தொடர்பாக விசாரணை ஒன்றை நடத்த வேண்டும் என்று கோரவுள்ள தாகவும் பிரித்தானியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

சனல்-4 வெளியிட்டுள்ள, போர் தவிர்ப்பு வலயம் ஆவணப் படம், மிகவும் அதிர்ச்சியை ஏற்படுத்திய பதிவுகளைக் கொண்டதாக இருந்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல படங்கள் உண்மையிலேயே அதிர்ச்சியை ஏற்படுத்தும் அளவுக்கு மோசமானதாக இருந்ததாகவும் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

## பிரதமர் வருகை...

மாநாட்டுக்கும் பிரதமர் போவதில்லை என்பதையும் மனதில் கொள்ள வேண்டும். பொதுநலவாய மாநாட்டுக்கு பிரதமர் போகாததற்குப் பல காரணங்கள் உள்ளன.

இதற்கு அப்பால் பல்வேறு முக்கிய பிரச்சினைகள் பிரதமர் முன்பாக உள்ளது. எனவே பிரதமரின் பயணம் இரத்தானத ற்கு ஒரே காரணத்தைப் பார்க்கக் கூடாது.

பல காரணங்கள் இதில் உள்ளன. இலங்கையுடன் இந்தியாவுக்கு ஆழமான நட்பும், உறவும் உள்ளது. எனவே இந்த ஒரு விவகாரத்தால் அதில் மாற்றமோ, பாதிப்போ வராது என்று நான் கருதுகிறேன் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பெறுமதியான...

வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

30 வருட் யுத்தத்தின் பின் இலங்கையின் தேசியத்தை கட்டியெழுப்பும் முயற்சியில் அரசாங்கம் செயற்படுவதாகவும் குறிப்பிட்டார்.

கமலேஷ் சர்மா இங்கு உரையாற்றுகையில் சமூகத்தின் எதிர்கால அபிவிருத்திக்காக இளைஞர்களும் பங்களிப்புச் செய்ய இதுவொரு சிறந்த தருணம் என குறிப்பிட்டார்.

இளைஞர் சேவை மன்ற கலாசார நிகழ்ச்சிகளும் இம் மாநாட்டு நிகழ்ச்சிகளை மேலும் அலங்கரித்தன.

இம் மாநாட்டின் ஆரம்ப நிகழ்வுகள் அனைத்தும் மிகவும் கண்கவர் விதத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## இரண்டு...

றோர் முறைப்பாடு செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் கோவிலுக்குச் செல்வதாகக் கூறி வீட்டிலிருந்து புறப்பட்ட 16 மற்றும் 17 வயதான சிறுமிகள் இருவரே காணாமற் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## வருத்தம்....

என்றும் தூதரக வட்டாரங்கள் கூறுகின்றன.

கொமன்வெல்த் மாநாட்டில் தனக்குப் பதிலாக இந்தியா சார்பில் வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் பங்கேற்பார் என்ற தகவலையும் பிரதமர் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிகிறது.

## பிரதமர் மன்மோகனின்...

கும் மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் கலந்துகொள்ளாதிருக்க முடிவுசெய்துள்ளார்.' மன்மோகன் சிங் வராமல் இருக்க முடிவு செய்திருப்பது எங்களின் மாநாட்டின் வெற்றியைப் பாதிக்காது. அதனை நாங்கள் ஒரு பிரச்சினையாகக் கருதவில்லை.

அவரது முடிவு எங்களுக்கு தோல்வி அல்ல, நாங்கள் அவரை அழைத்தோம் அவர் வந்திருந்தால் நாங்கள் மகிழ்ச்சி அடைந்திருப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இனவிகிதாசாரத்தை...

றீர்கள் என இராணுவத்தினரிடம் கேட்டோம்.

அதற்கு அங்கிருந்த படை அதிகாரி, தாம் வேறு கட்டடங்களை இப்பகுதியில் அமைத்து இராணுவத்தினரையும், அவர்களது குடும்பங்களையும் குடியமர்த்தப்போவதாக வெளிப்படையாகவே கூறினார்.

அத்துடன் அந்த அதிகாரி, யாழ்பாணத்திற்கு வெளியில் உள்ள இராணுவத்தினரை மீளப் பெறவுள்ளதனால் தமக்கு இடவசதிகள் தேவையாக உள்ள தாகவும் அதற்காக இக் காணி களில் கட்டடம் அமைத்து உபயோகப்படுத்தப் போவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பாகக் கொழும்பில் இருப்பவர்கள் வேறு கருத்துக்களைக் கூறினாலும், இவ் அதிகாரியின் கருத்துக்களை நாம் நிராகரித்து விட்டுப் பார்க்க முடியாது. இவ்விடயம் தொடர்பில் வழக்குகள் கூடத்தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படும் இந் நடவடிக்கையினை நாம் குடாநாட்டின் குடிப்பரம்பலை மாற்றுவதற்கான ஓர் முயற்சியாகவே பார்க்கின்றோம்.

வன்னியில் அரச காணிகளை பெருவாரியாக எடுக்கின்றனர். யாழில் அதற்கான சூழ்நிலை காணப்படாத நிலையில் உயர் பாதுகாப்பு வலயங்களாக மக்களின் காணிகளைக் கையகப்படுத்தி அதனுள்ளாக திட்டமிட்ட வகையில் சிங்களக் குடிப்பரம்பலை ஏற்படுத்த அரசாங்கமும், படைத்தரப்பும் முயற்சிக்கின்றன என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பொதுநலவாய கொள்கைகளை பின்பற்றவேண்டும் இலங்கை

## - வலியுறுத்துகிறது பிரிட்டன் -

இலங்கை அரசாங்கம் பொதுநலவாய நாடுகள் கொள்கைகளை பின்பற்ற வேண்டுமென இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ராண்கீன் தெரிவித்துள்ளார்.

பொதுநாலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள் கோட்பாடுகளை மேம்படுத்தவும் உறுதி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். பொதுநலவாய நாடுகள் அமைப்பின் மீது கொண்டுள்ள மரியாதை நிமித்தம் தாம் இலங்கை அமர்வுகளில் பங்கேற்பதாக பிரதமர் கமரூன் குறிப்பிட்டுள்ளதாக ஜோன் ராண்கீன் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள் கோட்பாடுகள் அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதே பிரித்தானியாவின் நோக்கமாக அமைந்துள்ளது எனவும் அதற்காக பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகளை பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை இலங்கைக்கு உணர்த்தும் நோக்கிலும் அமர்வுகளில் பிரித்தானியா பங்கேற்பதாகத் தெரிவித்துள்ளார்.

# குஞ்சர்கடை சந்தியிலுள்ள வியாபார நிலையத்தில் திருட்டு




(நெல்லியடி)

கரணவாய் குஞ்சர்கடைப் பகுதியிலுள்ள அம்பாள் பல்பொருள் வர்த்தக நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு பொருட்கள் மற்றும் பணம் என்பன களவாடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு வர்த்தக நிலையத்தின் இரண்டு கதவின் பூட்டை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 5 பண்டல் சிகரெட் மற்றும் ஒரு தொகைப் பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

நேற்றுக் காலை கடை உரிமையாளர் வியாபார நிலையததை திறப்பதற்காக வந்தவேளை வியாபார நிலையத்தின் இரண்டு கதவுகளும் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது.

திருட்டுச் சம்பவம் தொடர்பாக கடை உரிமையாளர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (12,18)

# உலகத் தலைவர்கள் யாழிற்கும் செல்ல வேண்டும்

## அழைப்பு விடுக்கிறார் கோத்தா

(கொழும்பு)

எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வருகை தரவுள்ள உலகத் தலைவர்கள் யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்யவேண்டுமென பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

இதன் மூலம் யுத்தத்தின் பின்னர் வடக்கில் அரசாங்கம் மேற்கொண்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களை உலகத் தலைவர்கள் நேரில் பார்வையிட்டு அறிந்து கொள்ள முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குற்றச்சாட்டுக்களுக்கு செவிமடுக்காது நேரடியாக வடக்கிற்கு சென்று நிலைமைகளை உலகத் தலைவர்கள் பார்வையிட முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார். யுத்தத்தின் பின்னர் வடக்கில் பாரியளவில் உட்கட்டுமானம் மற்றும் ஏனைய விடயங்களில் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# விசா சட்டத்தை மீறிய நிலையில் கைதான எம்.பிக்கள் விடுதலை



(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அவுஸ்ரேலிய மற்றும் நியூஸிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் விசா சட்டத்தை மீறி கொழும்பில் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்துவதற்கு முயன்றனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின்னர் இருவரும் விடுவிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவுஸ்ரேலிய நாடாளுமன்ற உறுப்பினர் லீ ரைனோன் மற்றும் நியூஸிலாந்து நாடாளுமன்ற உறுபபினர் ஜான் லொகீ ஆகிய இருவருமே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் தமது நாடுகளுக்கு திரும்பிச் செல்ல விருப்பம் தெரிவித்ததை அடுத்து குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அவர்கள் திரும்பிச் செல்வதற்கான அனுமதியை வழங்கியுள்ளது. எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விருவரும் வடக்கிற்கு விஜயம் செய்ததுடன் யாழ் மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் பற்றியும் பிரதேசத்திலுள்ள பிரச்சினைகள் பற்றியும் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுடன் கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இந்தியத் தலைவர்களுக்கு இராஜதந்திர பிரச்சினை

## என்கிறார் சரித்த ஹேரத்



(கொழும்பு)

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளாது ஒதுங்கியிருப்பதாக கூறவில்லை எனவும், அந்த நாட்டுத் தலைவர்களுக்கு இராஜதந்திர பிரச்சினைகள் இருக்கலாம் எனவும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் சரித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

எது எவ்வாறு இருப்பினும் 36 நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த முறை பேர்த்தில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் 54 நாடுகளில் 33 நாடுகள் மட்டுமே கலந்து கொண்டதாக சரித்த ஹேரத் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

1976 ஆம் ஆண்டு இடம்பெற்ற அணிசேரா நாடுகளின் மாநாட்டின் பின்னர், இலங்கையில் நடைபெறும் மிகப் பெரும் நிகழ்வு இதுவாகும் எனவும், இது தொடர்பான அறிக்கையிடலுக்காக 1000 ஊடகவியலாளர்கள் பதிவு செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டையில் நேற்று ஆரம்பமான பொதுநலவாய இளைஞர் மாநாட்டின்போது, ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

## வெளிநாட்டு ஊடகங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிப்பு

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் பங்கேற்கும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கும் ஊடக நிறுவனங்களுக்கும் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

பொதுநலவாய நாடுகள் அமர்வுகளுடன் தொடர்புடைய விவகாரங்கள் அன்றிய வேறும் விடயங்கள் தொடர்பில் செய்தி சேகரிப்பில் ஈடுபட முற்படும் ஊடகங்கள் கண்காணிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வேறும் விடயங்கள் தொடர்பில் குறிப்பாக இலங்கை தொடர்பில் செய்தி சேகரிப்பில் ஈடுபட வேண்டுமாயின் விசேட அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமென வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

பொதுநலவாய நாடுகள் அமர்வுகளைத் தவிர்ந்த வேறும் விடயங்கள் தொடர்பில் செய்தி சேகரிப்பதற்கு தடை விதிக்கப்படவில்லை என்ற போதிலும், அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் ஒழுக்க விதிகளை மீறிச் செயற்படக்கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளது.

# அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மீளவும் பொது வேட்பாளர்

## ஆராய்கிறது ஐ.தே.க.

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை மீளவும் நிறுத்துவது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது குறித்து ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார். தேர்தலில் வெற்றியீட்டக்கூடிய சிறந்த வேட்பாளர் ஒருவரை நியமிக்கத் தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் நலனுக்காக அதிகாரங்களை விட்டுக் கொடுக்க கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தயாராக இருக்கின்றார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தலைமைத்துவ பேரவைக்கு மேலும் அதிகாரங்களை வழங்க ரணில் விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

கட்சியின் வெற்றிக்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மழையால் கைவிடப்பட்டது முதலாவது ஒருநாள் போட்டி

இலங்கை மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 288 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை அணி சார்பாக டிலசான் 81, சங்கக்கார 79 ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்நிலையில் நியூஸிலாந்து அணி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கும்போது மழை குறுக்கிட்டது.

நேற்றைய போட்டி இடைநிறுத்தப்படும்போது 4.2 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 13 ஓட்டங்களை நியூஸிலாந்து பெற்றிருந்தது.

இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் சர்வதேச போட்டி எதிர்வரும் 12 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூஸிலாந்து அணி மூன்று ஒருநாள் போட்டிகள் மற்றும் இரண்டு ரி -. 20 போட்டிகளில் விளையாடவுள்ளது.

# புலமைப்பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளி 15 இல்

(கொழும்பு)

இம்முறை தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையின் வெட்டுப் புள்ளிகளை எதிர்வரும் 15 ஆம் திகதி வெளியிடவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே உரிய புள்ளிப் பட்டியல்கள் மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய அவர்களின் அனுமதி அடுத்த இரண்டு வாரங்களுக்குள் கிடைக்கும் என அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்

வெட்டுப் புள்ளிகள் வெளியானதும் இம்முறை தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு அடுத்த வருடத்தின் முதலாம் தவணையின்போது பாடசாலைகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 நவம்பர் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.